தமிழீழ நோக்கு

TAMILEELAM PERSPECTIVES.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

தமிழீழ மண்ணில் சிங்களக் குடியேற்றங்கள்
– ஒரு நோக்கு –

சி. வரதராஜன்

ஒர்நாட்டின் ஈர் தேசியவாதங்கள்

அ. கௌரிகாந்தன்

விபுலாநந்த அடிகளார்
(நாடு - மக்கள் - மொழி - கல்வி - பண்பாடு பற்றிய நோக்கு)

இ. பாலசுந்தரம்

ஆதிகால இலங்கைத்தமிழர் வரலாறு
– ஒரு மீள் பரிசீலனை –

ப. புஷ்பரட்ணம்

சர்வதேச அரசியல் சர்ச்சைகளில் சுயநிர்ணய உரிமை

வே. மணிவாசகர்

தமிழீழ வள ஆய்வுச் சஞ்சிகை தொகுதி-1 பகுதி-2 மார்ச் 1992

ஆசிரியர் குழு : பேராசிரியர் வி. ஆறுமுகம்
பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம்
பேராசிரியர் வி. நித்தியானந்தன்
கலாநிதி இ. பாலசுந்தரம்
கலாநிதி சபா. ஜெயராசா
விரிவுரையாளர் க. தேவராஜா
விரிவுரையாளர் ப. புஷ்பரட்ணம்

ஆலோசகர் குழு : பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
பேராசிரியர் கா. சிவத்தம்பி
பேராசிரியர் வி. சிவசாமி
பேராசிரியர் என். பாலகிருஷ்ணன்
பேராசிரியர் க. குணரத்தினம்
பேராசிரியர் சி. மகேஸ்வரன்
கலாநிதி சி. க. சிற்றம்பலம்
கலாநிதி ஆர். சண்முகநாதன்

நிர்வாக ஆசிரியர் : [இ. இரட்ணம் B. Com. (Hons) H. N. Dip Acc, M.A.A.T]

தொடர்பு :
'தமிழீழ நோக்கு' அலுவலகம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு : 40/-

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

தமிழீழ நோக்கு

அனைத்துலக நாடுகளின் வளர்ச்சிப் பாதையில் தமிழீழ மக்களின் பொருளாதார, சமூக, அரசியல், கலை, பண்பாட்டு விழுமியங்கள் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். அதற்கான வழிவகைகள், வளங்கள், வாய்ப்புக்கள் பற்றி எமது மக்களுக்கு அறிவூட்டல் அறிஞர்களின் இன்றியமையாத கடமையாகின்றது. தமிழீழத்தில் வாழும் தமிழ் மக்கள் மட்டுமன்றி, உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களும் இந்நோக்கை உணர்ந்து செயற்பட வேண்டும் என்பதே, எமது குறிக்கோள். எமது நாட்டின் முன்னேற்றத்திற்குரிய எத்தகு வளங்களும், வாய்ப்புக்களும் எங்கெங்கு அமைந்துள்ளன; அத்தகு வளங்களை எவ்வாறு மக்களின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தலாம் என்பதைத் தமிழீழ மக்களுக்கு எடுத்துக் கூறி, அவர்களை நாட்டின் முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்வதே 'தமிழீழ நோக்கு' ஆய்வுச் சஞ்சிகையின் தலையாய குறிக்கோளாகும்.

இத்தகு ஆக்கவழியிலான இலக்கினை அடைவதற்குரிய நடைமுறைகளில் ஒன்றாக எமது 'தமிழீழ நோக்கு' என்ற ஆய்வேட்டினைத் தமிழ் பேசும் மக்களுக்கு அறிமுகப்படுத்தினோம். அதன் இரண்டாவது இதழ் இப்போது உங்களிடம் வந்து சேர்ந்துள்ளது. முதலாம் இதழுக்கு எதிர்பார்த்ததைவிட மேலதிக வரவேற்பு எமக்குக் கிடைத்தமை எமது முயற்சியின் வெற்றியேயாகும்.

சிறீலங்கா அரசின் திட்டமிட்ட கடுமையான பொருளாதாரத் தடையினால் ஏற்பட்ட இன்னல்களைக் கடந்த இரண்டாண்டுகளாகப் பட்டுணர்ந்து, அதிலிருந்து விடுபடுவதற்குரிய வழிவகைகளை இப்போது புதிது புதிதாக அறிந்து கொண்டிருக்கிறோம். இப்படித்தான் வாழ வேண்டும் என்ற சுகபோக வாழ்க்கை வாய்பாட்டிலிருந்து விடுபட்டு, ஈழவளத்தின் இயல்பை அறிந்து, படிப்படியாகத் தன்னிறைவு உற்பத்திப் பாதையில் தற்போது காலடி எடுத்து வைத்துள்ளோம். 'முயற்சி திருவினையாக்கும்' என்ற முதுமொழியை நாம் பல துறைகளிலும் தாரக மந்திரமாகக் கொள்ளல் பொருத்தமாகும்

நாம் பின்பற்றி வந்த 'தங்குநிலைப் பொருளாதாரமும்' சிங்கள அரசு தமிழ் மக்கள் மீது திணித்துள்ள பொருட்களின் தடைகளும் எமது உள்ளூர் உற்பத்தியாளர்களை மிகக் கொடூரமான பொருளாதார இழிநிலைக்குத் தள்ளியுள்ளன. எமது பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. கொழும்பை நோக்கிய எமது உள்ளூர் உற்பத்திகளும் தடைப்பட்டுள்ளன. இளைஞர்கள், மூளைசாலிகள் சுயலாபந் தேடித்தந்திரமாக எமது தமிழீழத் தாயகத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். தாயகப் பற்றுக் கொண்டவர்களே இப்போது எமது மண்ணில் தனித்து நிற்கிறார்கள். மூளைசாலிகளின் வெளியேற்றம் தமிழீழத்தின் பொதுவான 'சாபக்கேடு' எனினும், எமது மண்ணில் இருந்து வெளியேறும் புத்திஜீவிகள் எமது தாயகத்தில் எந்தவித பற்றுமற்ற வெறும் ஜடங்களாகும்.

தாய்நாட்டுப் பற்றும், தான் பெற்ற கல்வியின் பயனாக சகல நிலை மக்களுக்கும் பயன்படத்தகும் செயல்களில் ஈடுபாடும், தம் வாழ்வைத் தேச மேம்பாட்டிற்காக ஈகம் செய்யும் மன உறுதியும் கொண்டோர் போற்றுதற்குரியவர்களாவர். இவ்வகையில் தென்தமிழீழத்தே தோன்றி தமிழ் மக்களின் மொழி, கலை, பண்பாடு ஆகிய துறைகளில் அளப்பரிய பணியாற்றித் தேசப் பற்றுடன் சமூகப் புரட்சி செய்த விபுலாநந்த அடிகளாரின் நூற்றாண்டு விழா தமிழ் மக்கள் வாழும் இடங்களிலெல்லாம் கொண்டாடப்படும் இக்கால கட்டத்தில், 'தமிழீழ நோக்கு' அடிகளாரைப் பற்றிய ஒரு ஆய்வுக் கட்டுரையைத் தாங்கி வெளிவருவதன்மூலம் சிறப்புப் பெறுகிறது.

சிறீலங்கா அரசு 'அபிவிருத்தி நோக்கிய குடியேற்றம்' என்ற போர்வையில் வெளிநாட்டு நிதியுதவியுடன் தமிழர் தாயகப் பிரதேசங்களில் சிங்களவர்களைக் குடியேற்றி வருவதோடு, அவர்களுக்கு இராணுவப் பாதுகாப்பும் வழங்கி வருகின்றது. சிறீலங்காவில் குடியேற்றம் செய்யக்கூடிய ஏராளமான காட்டுப் பகுதிகள் இருந்த போதிலும் அவற்றைவிட்டு, ஏன் தமிழர் தாயகத்தில் அத்துமீறிய குடியேற்றங்களைச் சிங்கள அரசு நடாத்துகின்றதென்பதைத் தரவுகள் மூலம் அறிந்து கொள்ளத்தக்க வகையிலான ஒரு கட்டுரையும், இவ்விதழில் இடம்பெற்றுள்ளது.

இன்றைய காலகட்டத்தில் மக்கள் அரசியல் அறிவுடையோராக இருக்க வேண்டிய தேவையும் உணரப்பட்டுள்ளது. உலக அரசியல் நிகழ்வுகள் பற்றியும் நம் நாட்டில் நடைபெறும் 'அரசியல் குளறுபடிகள்' பற்றியும் எம் மக்களுக்கு எடுத்து விளக்கும்போது, தமிழீழத் தாயகத்தின் மண்மீட்புப் போராட்டத்தின் இன்றியமையாத் தன்மை பற்றி எம்மக்கள் நன்கு உணர்ந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. 'இவ்வகையில் 'சுய நிர்ணய உரிமைகள்', 'தேசியம்' என்ற விடயங்களை விளக்குவனவாக இருகட்டுரைகள் இவ்விதழைச் சிறப்பிக்கின்றன.

நிலம், மொழி, கலை, பண்பாடு ஆகிய விடயங்களில் மக்களை உணர்வு பூர்வமாக ஈடுபாடு கொள்ளச் செய்யவும், அவர்களுக்கு அரசியல், பொருளாதாரத் துறைகளில் அறிவூட்டவும் களம் அமைத்துள்ள (தமிழீழ நோக்குக்கு' அறிஞர்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். இவ்விதழ் மக்களைச் சென்றடைந்து, அவர்களுக்கு அறிவூட்டி, தமிழீழத் தாயகம் வளமாக அமையத் துணைநிற்க வேண்டும் என்பதே எமது விருப்பாகும்.

— ஆசிரியர் குழு

சர்வதேச அரசியல் சர்ச்சைகளில்
சுயநிர்ணய உரிமை

கலாநிதி வே. மணிவாசகர்
சிரேஷ்ட அரசறிவியல் விரிவுரையாளர்,
பொருளியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

தேசிய வாதமும்,தேசிய அரசுகளும் சர்வதேச அரசியலில் நிர்ணயங்களாகிய போது, சுய நிர்ணய உரிமையும் பிரபலமடைவது தவிர்க்க முடியாத தாயிற்று. தேசியவாதத்தை நியாயப்படுத்தவும், தேசிய அரசுகளைப் பலப்படுத்தவும், சுயநிர்ணய உரிமை கைகொடுத்துதவியது. இருப்பினும், பிரதியனுகூலமான பல காரணிகளினால் சுயநிர்ணயம் என்பது விஞ்ஞான ரீதியான ஒரு கோட்பாடாகவோ அல்லது காத்திரமான உரிமையாகவோ வளர்ச்சி பெற முடியவில்லை[1] சுயநிர்ணயம் பற்றிய கருத்துக்களிலும், செயல்முறையம்சங்களிலும் பல முரண்பாடுகளும், மர்மங்களும் மிகுந்து காணப்படுகின்றன. மாறிவரும் சர்வதேச அரசியல் நிலைமைகளும் அதைப் பாதிக்கத் தவற வில்லை. இக்கட்டுரையானது, சுயநிர்ணய உரிமை பற்றிய கருத்துக்களையும், சர்வதேச அரசியல் சர்ச்சைகளில் சுயநிர்ணய உரிமை தொடர்பான மையமாக விளங்கும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின நடவடிக்கைகளையும் ஒருங்கே பகுப்பாய்வு செய்ய முற்படுகின்றது. இத்தகைய கோட்பாடும் நடைமுறையும் கலந்த சர்வதேச ரீதியிலான ஓர் அணுகுமுறையே சுயநிர்ணய உரிமைபற்றிய தாரதம்மியங்களைத் துலக்க வல்லதாகும்-

சுயநிர்ணய உரிமைக்கு நீண்டதும், கீர்த்திமிக்கதுமான வரலாறு உண்டு. அமெரிக்க (1776), பிரான்சிய (1789), ருஷ்ய (1917) புரட்சிகளினால் ஊட்டம் பெற்றும், தேசியவாத இயக்கங்கள் பலவற்றின் சுலோகமாகியும், ஜனநாயக அடிப்படையில் அரசுகளின் உருவாக்கத்துக்கும், பிரதேசத் தீர்வுகளுக்கும் ஊடகமாகியும், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்டும் சுயநிர்ணய உரிமை சர்வதேச முக்கியத்துவம் பெற்றுள்ளது. அதன் அம்சங்கள் சர்வதேசரீதியிலான பிரகடனங்களிலும், சாசனங்களிலும், சட்டங்களிலும் வியாபித்துக் காணப்படுகின்றன. இவற்றிற்குப் பல்வேறு வகைப்பட்ட விளக்கங்களும், விமர்சனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

உலகப்படத்தை மாற்றியமைத்து இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றுப்போக்கைச் சுயநிர்ணய உரிமை பாதித்திருப்பதைக் காணலாம். இவ்வுரிமை மூலம் போலந்து சுதந்திர நாடாகியது. செக், சுலோவாக்ஸ் என்பவை அவுஸ்திரியாவின் அடக்கு முறையிலிருந்து விடுபட்டு செக்கோசிலோவாக்கியா என்ற புது நாடாகின. மேற்கு சுலோவ் - சோவ்ஸ், கிறீற், சொலொவீன் போன்றவை அவுஸ்திரிய ஹங்கேரிய ஆதிக்கங்களிலிருந்து விடுபட்டு யூகோஸ்லாவியா என்ற புதிய நாடு தோன்றியது. பிரான்ஸ் அல்சேஸ் லொறேன் மாகாணத்தைப் பெற்றது. வடக்கு செல்ஸ்விக் டென்மார்க்குக்குக் கையளிக்கப்பட்டது. பலஸ்தீனம், சிரியா, மொசபத்தேமியா, கெயாஸ் போன்றவை துருக்கிய சாம்ராச்சியத்திலிருந்து விடுதலை பெற்றன. இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்து தனிநாடாகியது. ஏராளமான ஆசிய, ஆபிரிக்கக் கண்டங்களைச் சேர்ந்த குடியேற்ற நாடுகள் சுதந்திரம் பெறவும் முடிந்தது.

ஆரம்பங்களில் தேசங்களுடன் மட்டும் கட்டுண்டு காணப்பட்ட சுயநிர்ணய உரிமை, பின்னர் தேசிய இனங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது இன்று சுயநிர்ணய உரிமை என்பது குடியேற்றவாதம், நிறவாதம் போன்றவற்றின் ஒழிப்பு, சமத்துவமான இறைமை கொண்ட அரசுகள், தலையீடாக் கொள்கை, ஜனநாயகம், அடிப்படையுரிமைகள் போன்ற பல்வேறு அம்சங்களுடன், பின்னிப் பிணைந்துள்ளது.[2] சிக்கலான ‘சுயநிர்ணயம்’ எனும் பதத்தைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் வரையறுப்பின், ஒவ்வோர் தேசிய அரசும் அல்லது ஒவ்வோர் தேசிய இனமும் சுதந்திரமாகவும் சுயமாகவும் தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் ஓர் உரிமை[3] எனலாம். மக்களின் ‘‘விருப்பு’’, ‘‘சம்மதம்’’ என்ற இரண்டும் சுயநிர்ணய உரிமையைத் தாங்கி நிற்கும் இரு தூண்கள் எனலாம்.[4] ஏனெனில் மக்களின் விருப்பு இன்றி, சுயநிர்ணயம் என்பது ஓர் உரிமையாகத் தோன்ற முடியாது. அதுபோல், மக்களின் சம்மதம் இன்றியும் அது நடைமுறையாக முடியாது. சுயநிர்ணய உரிமை பின்வரும் மூன்று வழிகளில் பூரணத்துவம் பெறுகிறது.[5]

(i) நிலைத்திருக்கும் உரிமை (Right to Exist): இவ்வுரிமையானது, ஒவ்வோர் அரசும் அநாவசியமான வெளித் தலையீடுகள் இன்றி சுதந்திரத்துடனும், இறைமையுடனும் நிலைத்திருக்க வழிசெய்கிறது.

(ii) அபிவிருத்தி செய்யும் உரிமை (Right to Develop): இவ்வுரிமையானது, ஓர் அரசு தனது சமூக, பொருளாதார, அரசியல் ஒழுங்குகளையும், கலை, இலக்கியம், கலாசாரம் போன்றவற்றையும் அபிவிருத்தி செய்யவும், கருத்து வெளிப்பாட்டுக்கான ஓர் ஊடகமாக எந்த ஒரு மொழியையும் பின்பற்றவும் அதிகாரம் அளிக்கிறது;

(iii) பாதுகாக்கும் உரிமை (Right to Preserve): இவ்வுரிமையானது, ஓர் அரசுக்குத் தான் மேலாக மதிக்கின்ற மரபுகள், பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாக்கும் உரிமையை வழங்குகிறது.

சுயநிர்ணய உரிமை என்பதை ஜனநாயக அரசாங்க முறையுடன் இணைத்து, விரிவுபடுத்தி விளக்கும் போக்கையும் அவதானிக்க முடிகிறது. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அமெரிக்கப் பிரதிநிதியொருவர் ஜனநாயகப் பண்புகளுக்கு அழுத்தம் கொடுத்து விளக்கும் போது, ‘‘சுயநிர்ணய உரிமை என்பது எந்த அரசாங்கத்துக்குத் தமது ஆதரவை நல்கவேண்டும்; எத்தகைய வடிவை அரசாங்கம் எடுக்க வேண்டும்; யார் அரசாங்கத்துக்குத் தலைமை தாங்க வேண்டும் என்பவற்றைச் சுதந்திரமாகத் தீர்மானிப்பதற்கு மக்களுக்குள்ள உரிமையாகும்’’[6] என்றார். சுயநிர்ணய உரிமையில்லாமல் ஜனநாயகமும், ஜனநாயகம் இல்லாமல் சுயநிர்ணய உரிமையும் நிலைபெறமுடியாது என்று சொல்லப்படுகிறது. சுயநிர்ணய உரிமை மக்களுக்கு வழங்கும் சுதந்திரமும், சமூகத்தின் பிரசைகளிடையே ஏற்படுத்தும் சமத்துவமும், சௌஜன்யமும், அதன் மூலம் உருவாகும் தேசிய ஐக்கியமும், ஒருமைப்பாடும் ஓர் அரசினை ஸ்திரப்படுத்தி, வெளித்தலையீடுகள் இன்றி இறைமையுடன் இயங்க வழி செய்யும் ஜனநாயக அமைப்புகளும் வழிமுறைகளும் இல்லாத பட்சத்தில் சுயநிர்ணய உரிமையின் வெளிப்பாட்டுக்கும் செயற்பாட்டுக்கும் இடம் இல்லாமல் போய்விடுவதாக வாதிக்கப்படுகிறது

சுயநிர்ணய உரிமை பற்றிய கருத்துக்களின் முன்னோடியாகக் கடந்த நூற்றாண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்த தாராண்மைவாத அறிஞரான J S மில் என்பவரைக் குறிப்பிடலாம். ‘ஒரு தேசிய இனம்; ஒரு தேசிய அரசு’ (One Nationality; One Nation) என்ற கருத்தை முன்வைத்த மில், தேசிய உணர்வால பிணைக்கப்பட்ட ஒவ்வொரு தேசிய இனமும் ஒவ்வொரு தேசிய அரசாக அமைய வேண்டும் என்றார்.

‘மக்கள் இறைமை’ என்ற தத்துவத்தின் அடிப்படையிலேயே மில் சுயநிர்ணய உரிமையை விளக்கினார். ஜனநாயகத்தின் உயிரோட்டமாக அவர் சுயநிர்ணய உரிமையைக் கண்டார்.[7]

இருபதாம் நூற்றாண்டின் முதல் காற்பகுதிகளில் முதலாளித்துவவாதிகளும், மார்க்சிஸவாதிகளும் சுயநிர்ணய உரிமை பற்றி அதிகம் பேசலாயினர். ஊட்றோ வில்சன் முற்கூறிய பிரிவையும், லெனின் பிற்கூறிய பிரிவையும் பிரதிநிதித்துவம் செய்தவர்களில் முக்கியமானவர்கள். வில்சன் சுயநிர்ணய உரிமைக்குச் சாதகமாகவே குரல் கொடுத்தமைக்கு முக்கிய காரணம், முதலாம் உலகப் போரினால் தேசிய எல்லைகள் பாதிப்புற்ற ஐரோப்பாவில் முதலாளித்துவ நலன்களுக்குச் சார்பாகச் சுமுகமான பிரதேசத் தீர்வுகளை ஏற்படுத்துவதற்கேயாகும். லெனின் சுயநிர்ணய உரிமையின் பக்கம் திரும்பியமைக்கு முக்கிய காரணம், பல தேசிய இனங்கள் கொண்ட சோவியத் சமஷ்டியின் ஸ்திரத்தைப் பேணவும், முதலாளித்துவ ஏகாதிபத்தியங்களிற்கு எதிராகத் தேசியவாதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த குடியேற்ற நாடுகளில் சோவியத்யூனியனுக்கும், சோசலிசக் கோட்பாடுகளிற்கும் செல்வாக்குத் தேடிக் கொள்ளவுமேயாகும்.

முதலாம் உலக மகாயுத்தம் முடிந்தபின் பரிஸ் சமாதான மகாநாட்டிற்கு (1919) 14 அம்ச சமாதானத் திட்டத்துடன் வருகை தந்த

அமெரிக்க ஜனாதிபதி வில்சன், சுயநிர்ணய உரிமையின் காவலர் போலப் பேச்சிலும் செயலிலும் காணப்பட்டார். அவர் மகாநாட்டில் உரையாற்றும் போது "......மக்களும், மாகாணங்களும், விளைநாட்டில் பாவிக்கப்படும் அற்பமான பொருட்கள் போலக் கருதி இறைமையிலிருந்து புறக்கணிக்கப் படக்கூடாது. போர் சம்பந்தமான எந்த ஒரு பிரதேசத் தீர்வும் அப்பிரதேச மக்களின் விருப்பங்களையும் நலன்களையும் கருத்தில் கொண்டதாக அமைய வேண்டும்"[8] என்றார். வில்சனின் கருத்து சுயநிர்ணயஉரிமை தொடர்பாக முதலாளித்துவ நாடுகளின் நிலைப்பாட்டு மாற்றத்தை வெளிக்காட்டத் தவறவில்லை. ஏனெனில் சுயநிர்ணய உரிமையடிப்படையிலான ஆபிரிக்க நாடுகளின் எழுச்சியின் ஒரு கட்டத்தில், முதலாளித்துவ நாடுகளின் கருத்தைப் பிரதிநிதித்துவம் செய்தவராகக் கணிக்கப்பட்ட நீர்ச்சே என்பவர், "வழமையான போர் முறைகள் காட்டுவாசிகளுக்கெதிரான போரில் பயன்படுத்துவது மிகவும் கேலிக்குரியது. நீக்கிரோ வாசிகளின் வீடுகளைச் சுட்டெரித்து அவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். இது ஒன்றே காத்திரமான தீர்வாகும்"[9] என்று கூறியமை கவனிக்கத்தக்கது

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

இருப்பினும் வில்சனுடைய வேடம் விரைவில் கலையலாயிற்று. தனது மகாநாட்டு உரையைப் பின்னர் விளக்கும் போது, "போரில் தோற்கடிக்கப்பட்ட சாம்ராச்சியங்களின் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தவிர்ந்த ஏனையோர்க்கு சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்க மகாநாட்டிற்கு அதிகாரம் கிடையாது"[10] என்று கூறிப், பின்வாங்கி விட்டார். வில்சனின் ஜனாதிபதிப் பதவிக் காலத்திலேயே அவரது இராஜாங்கக் காரியதரிசியான லான்சின் சுயநிர்ணய உரிமையை "நடைமுறைப்படுத்த முடியாதது" என்றும் "ஆபத்தானது"[11] என்றும் வர்ணித்துவிட்டார். பரிஸ் சமாதான மகாநாட்டின் பின் உருவான சர்வதேச சங்கமும் சுயநிர்ணய உரிமை தொடர்பாகத் தீர்க்கமான விதிகளையோ, செயல் முறைகளையோ கொண்டிருக்கவில்லை.

வில்சனைப் போலவே லெனினும் சுயநிர்ணய உரிமை தொடர்பாக இராஜதந்திர நிலைப்பாட்டைக் கொண்டிருந்த போதிலும், லெனினின் கருத்துக்கள் வில்சனின் கருத்துக்களை விட ஆழமானவையாகவும் முற்போக்கானவையாகவும் காணப்படுகின்றன. மார்க்ஸின் நோக்கும் போக்கும் சர்வதேசத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. கவுற்ஸ்கி தேசியவாத இயக்கங்களை முதலாளித்துவ வளர்ச்சியுடனேயே அடையாளப்படுத்தினார். றோசா லக்ஸம் பேர்க், சர்வதேச தனியுரிமை முதலாளித்துவத்தின் எழுச்சியானது சகல தேசியக் குழுக்களையும் அர்த்தமற்றதாக்கி விட்டதாகக் கருதினார். ஆனால் லெனின் தேசத்தையும், வர்க்கத்தையும் உருவாக்கும் சக்திகளை இணைக்க விரும்பினார்.

லெனினின் இயக்கவியல் அணுகுமுறையானது, சுயநிர்ணய உரிமையை சமூக - வரலாற்றுக் கட்டுமானங்களுக்குட்பட்டதாகவே கண்டது. தேசியரீதியிலும், சர்வதேசிய ரீதியிலும், முதலாளித்துவத்தைத் தோற்கடிப்பதற்கான ஓர் ஆயுதமாகவே அவர் சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்த விரும்பினார். போல்சிவிக்கர்கள் சிறிய தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பாகக் கூடத் தமது ஆதரவைத் தெரிவிக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்[12] பாட்டாளிச் சர்வதேசியத்தை விட அவர் சுயநிர்ணய உரிமைக்கு முக்கியத்துவம் வழங்கி எழுதியுள்ளார்.[13] சுயநிர்ணயம், சர்வதேசியம், ஜனநாயகம், மத்தியவாக்கம் என்பவற்றையெல்லாம் தத்ரூபமாக ஒரே கோட்டில் இணைத்துப் பின்வருமாறு லெனின் கூறுகிறார்:

> "நாங்கள் சுயநிர்ணயத்துக்கான சுதந்திரத்தை, அதாவது, ஒடுக்கப்பட்ட நாடுகளுக்குப் பிரிந்து செல்லும் உரிமையை வேண்டுகிறோம். அதன்மூலம் நாம் பொருளாதாரச் சீரழிவைக் கனவு காணவில்லை. அல்லது சிறிய அரசுகள் என்ற இலட்சியத்தை நாம் அணைத்துக் கொள்ளவும் இல்லை. மாறாக, நெருக்கமான ஐக்கியத்தையும், இணைப்பையும் கொண்டதும், ஆனால் உண்மையான ஜனநாயகத்தையும், உண்மையான சர்வதேசியத்தையும் அடிப்படையாகக் கொண்டதுமான பெரிய அரசு ஒன்றுக்கு நாம் சார்பானவர்கள். பிரிந்து செல்லும் சுதந்திரம் இல்லாமல் அது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாகும்."[14]

பிரிந்து செல்லும் உரிமைவரை சென்று லெனின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்தார். இருந்தபோதும் சோவியத் சமஷ்டியின் குடியரசுகளுக்குப் பிரிந்து செல்லும் உரிமை மறுக்கப்பட்டே வந்தது. அதன் விளைவாக இன்று சோவியத் யூனியன் பல கூறுகளாக உடைந்துள்ளதையும் காண்கிறோம். அத்துடன் சுயநிர்ணய உரிமையடிப்படையிலான போராட்டங்களுக்கு சோவியத் யூனியன் வழங்கி வந்த ஆதரவும் படிப்படியாகக் குறைந்து வந்து இன்று பூச்சியமாகியுள்ளது. கிழக்கைரோப்பிய நாடுகளில் தோன்றிய சில சுயநிர்ணயப் போராட்டங்களைச் சோவியத் யூனியன் இராணுவ பலத்தால் நசுக்கிய வரலாறும் உண்டு.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் தோன்றிய ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் சுயநிர்ணயம் பற்றிய செயற்பாட்டுச் சிக்கல்களின் களமாக இருந்து வந்துள்

ளது. இருப்பினும், சர்வதேச சங்கம் போலன்றி, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் சுயநிர்ணய உரிமைக்கு உகந்த இடம் வழங்கியது. அதன் சாசனத்தில் இரு தடவைகள் இவ்வுரிமை பற்றிக் கூறப்பட்டுள்ளது. (பிரிவு 1 (2), பிரிவு 55). இவ்வம்சங்கள் தொடர்பாக இருவகைப்பட்ட விளக்கங்கள் உண்டு. பழமைவாதிகள இவற்றை இறைமையுள்ள சமத்துவமான அரசுகள் பற்றிய ஒரு விளக்கம் மட்டுமே [15] என்கின்றனர். ஆனால், முற்போக்குவாதிகள் அவற்றை மக்களின் விருப்பத்துடன் பிரதேசரீதியிலான மாற்றங்களைச் செய்வதற்கான நிச்சயமான உரிமையாகக் கருதுகின்றனர். [16]

சுயநிர்ணயம் பற்றிய இத்தகைய தெளிவற்ற விளக்கங்களையும், திட்டவட்டமற்ற செயற்பாட்டு முறைகளையும் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு குடியேற்ற நாடுகளின் விடுதலைப் போராட்டங்களை மேற்குலக ஏகாதிபத்தியங்கள் நிராகரித்தே வந்தன. ஆனால் ஆசிய, ஆபிரிக்க நாடுகள் சுதந்திரம் பெற்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பொதுச்சபையில் பெரும்பான்மைப் பலம் பெற்றபோது, சுயநிர்ணய உரிமை தொடர்பாகச் சில முற்போக்கான நடவடிக்கைகள் அறிமுகமாயின. இந்நாடுகளின் தொடர்ச்சியான கூட்டு முயற்சிகளினால், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் குடியேற்றவாதத்தைச் சகல வழிகளிலும் சட்டரீதியற்றது என்று பிரகடனம் செய்தது. மேலும், 1960 இல் குடியேற்ற நாடுகளுக்கும், மக்களுக்கும் சுதந்திரம் வழங்குவது பற்றிய ஐக்கிய நாடுகளின் பிரகடனம் [The united Nations Declaration On the Granting of Independence to Colonial Countries and Peoples - General Assembly Resolution, 1514 (XV)] ஆசிய, ஆபிரிக்கக் கண்டங்களில் எஞ்சியிருந்த குடியேற்றவாதத்துக்கும் சாவு மணியாயிற்று. அன்றியும் தயாரிப்பு நடவடிக்கைகளின் தாமதங்கள் சுயநிர்ணய உரிமையைச் செயற்படுத்தாமல் இருப்பதற்கு ஒரு காரணமாக இருக்கக் கூடாது என்றும் பிரகடனம் வலியுறுத்துகிறது. [17] இதன் மூலம், குடியேற்ற நாடுகள் அரசியல் முதிர்ச்சியும், நாகரீகமும் அடையும் வரை சுதந்திரத்தைப் பின்போட வேண்டும் என்ற ஏகாதிபத்தியவாதம் வலுவிழந்து போயிற்று.

சுயநிர்ணய உரிமையானது பிரிந்து செல்லும் உரிமையை உள்ளடக்குகின்றதா அல்லது இல்லையா என்பது பற்றி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் நிலைப்பாடு தெளிவாக இல்லை ஐக்கிய நாடுகள் சாசனம் பிரிந்து செல்லும் உரிமையை மறுத்து, உறுப்பு நாடுகளின் சுதந்திரத்தையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் ஆதரிக்கிறது. அதுபோல், குடியேற்ற நாடுகளுக்கும், மக்களுக்கும் சுதந்திரம் வழங்குவது பற்றிய ஐக்கிய நாடுகளின் பிரகடனமும் பகுதிரீதியாக அல்லது முழு அளவில் ஒரு நாட்டின் தேசிய ஐக்கியத்தையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் சீர் குலைக்கும் நோக்கிலான எந்த ஒரு நடவடிக்கையையும் கண்டிக்கிறது. இது தொடர்பாக அளிக்கப்பட்ட விளக்கங்களின்படி, ஒரு குடியேற்ற நாடு சுயநிர்ணய உரிமையடிப்படையில் விடுதலையடைந்தபின் அதன் பிரதேசம் ஒன்று அவ்வுரிமையை மீண்டும் பிரயோகித்துப் பிரிந்து கொள்ள முடியாது என்பதாகும்.

ஆனால், ஐக்கிய நாடுகளின் நட்புறவு தொடர்பான சர்வதேச சட்டத் தத்துவங்கள் பற்றிய பிரகடனத்தின் (Declaration On the Principles of International Law Concerning Friendly Relations of) 1970) 'சமத்துவ உரிமையும் மக்களின் சுயநிர்ணயமும்' (Equal Rights and Self - Determination of peoples) என்ற அத்தியாயத்தின் ஏழாம் பந்தியில், சுதந்திரம் பெற்ற குடியேற்ற நாட்டின் மக்கள் பிரிவொன்றுக்கும் சுயநிர்ணய உரிமை பிரயோகிக்கப்பட முடியும் என்றும், அரசாங்கங்கள் மக்களைப் பூரணமாகப் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும் என்றும் கூறுகின்றது. [18] பிரகடனத்தின் வாசகம் ஒன்று பின்வருமாறு சூசகமாகத் தெரிவிக்கிறது:

> ''சமத்துவ உரிமை, சுயநிர்ணயம் போன்றவற்றை அனுசரித்து நடப்பதன் மூலம் தமது பிரதேசத்துக்குச் சொந்தமான முழு மக்களையும் இன, மத, நிற வேறுபாடின்றிப் பிரதிநிதித்துவம் செய்கின்ற சுதந்திரமும், இறைமையும் கொண்ட அரசுகளின் பிரதேச ஒருமைப்பாட்டையும், அரசியல் ஒற்றுமையையும் பகுதியாகவோ அல்லது முழுவதாகவோ பலவீனப்படுத்தவோ அல்லது கூறுபடுத்தவோ அதிகாரம் அளிக்கும், அல்லது உற்சாகமூட்டும் வகையில் மேலேயுள்ள பந்திகளில் எதுவும் கருத்துப்படாது''. [19]

இங்கு மறைமுகமாகப் புலப்படுவது யாதெனில், பிரதேச ஒருமைப்பாட்டையும், அரசியல் ஒற்றுமையையும் பேணவிரும்பும் ஓர் அரசு தனது பிரதேச மக்களை இன, மத, நிற வேறுபாடின்றிப் பூரணமாகப் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும் என்பதும், தவறும் பட்சத்தில் பிரிந்து போகும் உரிமையை அங்கீகரிக்க வேண்டியது தவிர்க்க முடியாதது என்பதுமாகும்.

இதன் பின்னரும் கூட ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் உலகின் பல பாகங்களிலும் இடம் பெற்ற சுயநிர்ணயம் சம்பந்தமான போராட்டங்களில் மிகவும் மந்தமாகவே இயங்கியது. குறிப்பாக, ஆபிரிக்காவில் பயாபிரா, கதங்கா, மேற்கு சகாரா போன்ற பிரதேசங்களின் மக்கள் சுயநிர்ணய அடிப்படையில் மேற்கொண்ட நீதியான பிரிந்து செல்

லும் போராட்டங்கள் நீண்டகாலம் நீடித்து பாரிய உயிர்ச்சேதங்களும், பொருட் சேதங்களும் ஏற்பட்ட போதெல்லாம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மனிதாபிமான உதவிகளை அனுப்புவதுடனும், பேச்சுவார்த்தைக்கான அவசியத்தை வலியுறுத்துவதுடனும் நின்றதே தவிர ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை. மேலும் இப்பிரச்சினைகளில் நிலவிய அநாவசியமான வெளியார் தலையீடுகளையும் தடுத்து நிறுத்தும் வல்லமையையும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கொண்டிருக்கவில்லை.

சுயநிர்ணய உரிமை என்பது குடியேற்ற நாடுகளுக்கோ அல்லது வெளியாரின் கட்டுப்பாட்டில் உள்ள நாடுகளுக்கோ மட்டும்தான் பிரயோகிக்கத் தக்கது என்ற நிலைப்பாட்டையே 1960 களில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கொண்டிருந்தது. அதையே தொடர்ந்தும் கடைப்பிடிக்க அதுமுயன்றுவந்துள்ளது. அத்துடன் அங்கத்துவ நாடொன்றின் தேசிய ஒருமைப்பாட்டுக்கும், ஐக்கியத்துக்கும் குந்தகம் விளைவிப்பதில்லை என்ற தனது சாசன உறுதி மொழியையும் அது பேண முற்படுவது போலத் தெரிகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுக்காரியதரிசியான யூ. தாண்ட் பத்திரிகை நிருபர்களுக்கு ஒரு முறை பேட்டியளித்தபோது, ''... பிரிவினையை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஒரு போதும் அங்கீகரித்ததே இல்லை; அங்கீகரிக்கவும் இல்லை; எதிர்காலத்திலும் தனது உறுப்பு நாடொன்றின் விடயத்தில் அதை அங்கீகரிக்கும் என்று நான் நம்பவில்லை...''[20] என்று குறிப்பிட்டமை, கவனிக்கத் தக்கது.

இருப்பினும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இத்தகைய சட்டமும், மரபும், கௌரவமும் பேண முற்படுகின்ற நிலைப்பாடு நடைமுறை நிலைமைகளுக்குப் பொருந்தி வரவில்லை. பலஸ்தீனியர்கள், ஆர்மீனியர்கள், குர்திஷ் இனத்தவர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கையாலாகாத்தனமானது அதன் நற்பெயரைப் பாதித்துள்ளமை, யாவரும் அறிந்ததே. மேலும்சில தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தினை அரசியல் ரீதியாக ஊக்குவித்தோ அல்லது நேரடியான இராணுவத் தலையீட்டின் மூலமோ சில சக்திமிக்க நாடுகள் வெற்றி பெற வைத்தபோது, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தனது சாசன விதிகள் மீறப்பட்டமை குறித்து அதிகம் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அத்துடன் சுயநிர்ணயம் சம்பந்தமான பிரச்சினைகளில் சம்பந்தப்பட்ட மக்களிடையே வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி முடிவுக்கு வரும் வழிமுறைகளும், ஐக்கிய நாடுகளின் சட்டதிட்டங்களில் உண்டு. அதையும் மிகவும் அபூர்வமாகவே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கடைப்பிடித்துள்ளது.

வளர்ச்சியடைந்த நாடுகள் சுயநிர்ணய உரிமை பற்றி அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை. ஏனெனில் இவ்வுரிமை அமுல்படுத்தப்பட்டால் ஐரோப்பாவின் 20 நாடுகளுக்குப் பதிலாக 68 நாடுகள் தோன்ற இடமுண்டு. மூன்றாம் உலக நாடுகளின் போக்கும் சுயநிர்ணய உரிமையைக் கேள்விக்குரியதாகவே மாற்ற முற்படுகிறது. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் விதிகளின்படி மக்கள் யாவருக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு. ஆனால், சிறுபான்மையினர் பிரச்சினையை எதிர்நோக்கும் ஈராக், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் சுயநிர்ணய உரிமையானது முழு மக்கள் தொகுதிக்கு மட்டுமே பிரயோகிக்கத்தக்கது என்றும், சிறுபான்மையினங்களுக்கு அது உரித்தானது அல்ல என்றும் வாதிட்டு வந்துள்ளன.

மாறிவரும் சர்வதேச நிலைமைகளும் சுயநிர்ணய உரிமையின் வளர்ச்சிப் போக்குக்கு வாய்ப்பாக அமையவில்லை. பிராந்திய ஒழுங்கமைப்புக்களின் பெருக்கமும், சர்வதேச ரீதியில் நாடுகளின் பரஸ்பர தங்கியிருத்தலின் வளர்ச்சியும், தேசிய அரசுகளின் முக்கியத்துவத்தை மழுங்கடித்த போது, சுயநிர்ணய உரிமையும் பாதிப்படையலாயிற்று. ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரலையும், கவனத்தையும் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளே ஆக்கிரமிக்க முற்படுகின்றன. மூன்றாம் உலக நாடுகளின் அபிவிருத்திப் பிரச்சினைகள் சுயநிர்ணய உரிமைப் பிரச்சினைகளை மூடிமறைக்க முற்படுகின்றன.

இராணுவ — இராஜதந்திர மேலாதிக்கத்தினால் சுயநிர்ணய உரிமை துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவங்கள் வரலாற்றில் ஏராளம் உண்டு. பரிஸ் சமாதான மகாநாட்டின் தவறுகளால் பல ஜேர்மனியர்களும், லித்துனியர்களும், றூடினியன் இனத்தவர்களும் போலந்துக்கும், செக்கோசிலோவாக்கியாவுக்கும் இடம் பெயர்க்கப்பட்டனர். அவுஸ்திரியா, அல்பேனியா, பல்கேரியா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களில் கணிசமானோர் யூகோஸ்லாவியாவுக்கு அனுப்பப்பட்டனர். ரூமேனியாவிலும், கிரேக்கத்திலும் வந்தேறு குடிகள் மிகையாயினர் குர்திஷ் இன மக்கள் துருக்கி, ஈராக், ஈரான், சிரியா போன்ற நாடுகளில் சிதறுண்டனர். ஏகாதிபத்திய நலன்களுக்கேற்ப நாடுகளைக் கூறு போடவோ அல்லது ஒற்றுமைப்படுத்தவோ சுயநிர்ணய உரிமை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனாலேயே கோர்ஸன் பிரபு சுயநிர்ணய உரிமையை ''இரு முனை கொண்ட வாள்'' என்று வர்ணித்தார்.

சுயநிர்ணய உரிமை பற்றி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பொதுச்சபையிலும், மனித உரிமைகள் குழுக் கூட்டங்களிலும், சர்வதேச நீதிமன்றத்திலும் அநேக விவாதங்கள் நிகழ்ந்துள்ளன. ஆயினும் தொடர்ந்தும் சுயநிர்ணய உரிமையானது குறைப்பிரசவ நிலையிலேயே காணப்படுகிறது. இதன் நேரடி விளைவே பல நாடுகளிலும் மோசமடைந்து வரும் தேசிய இனப் பிரச்சினைகளாகும். பலம் பொருந்திய சில நாடுகள் தமது நலன்களைப் பாதுகாக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தைப் பயன்படுத்த முற்படுவதும் சுயநிர்ணய உரிமையின் பின்னடைவுக்கு முக்கிய காரணமாகும். அல்பிரட் கொவன் என்ற அறிஞர் சுயநிர்ணய உரிமைபற்றிய ''அடிப்படையான மீளாய்வு'' ஒன்றின் அவசியத்தை வலியுறுத்துகிறார்.

தொகுத்துப் பார்க்கும்போது, சுயநிர்ணய உரிமையின் உள்ளடக்கங்களும், நோக்கங்களும் உன்னதமானவையாக இருக்கலாம். வரலாற்றில் எதிர்பாராமல் ஏற்பட்ட சில சாதகமான சந்தர்ப்பங்களினால் அவை வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் சிக்கலடைந்து வரும் சர்வதேச அரசியலில் அவை ஏற்படுத்தக்கூடிய விபரீதங்களும் பல உண்டு. யதார்த்தமாகப் பார்க்கும்போது, சுயநிர்ணய உரிமையானது, தேசியவாதத்துக்கு கொள்கையடிப்படையாகவோ அல்லது பிரச்சாரக் கருவாகவோ அமையலாம். ஆனால், சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் ஒரு மக்கள் பிரிவோ அல்லது அதன் அமைப்போ, குறித்த பிரச்சினை தொடர்பாக தேசிய — பிராந்திய — சர்வதேச சக்திகளுக்கிடையில் ஏற்படுகின்ற அரசியல் சமன்பாட்டைச் சீர் செய்யத்தக்க வல்லமையையும், செல்வாக்கையும் பெறும்போதே சுயநிர்ணய உரிமையும் நடைமுறைச் சாத்தியமாகிறது.

மற்றோர் விதமாகக் கூறின், தேசிய — பிராந்திய — சர்வதேச எல்லைகளைத் தொட்டு நிற்பதே நவீன சுயநிர்ணயத்தின் முனைப்பம்சமாகும். இது சுயநிர்ணயம் எனும் பதம் வெளிக்கொணரும் அர்த்தத்தையே கேள்விக்குரியதாக்குகிறது. 'சுயநிர்ணயம்' என்பது 'பொதுநிர்ணயம்' என்பதனை நோக்கி அதிக தூரம் முன்னேறிவிட்டது. ஆயினும் இம் மாற்றம் பற்றிய தர்க்க - விஞ்ஞான அடிப்படைகள் அபிவிருத்தியடையவில்லை.

REFERENCES:

1. Some of the exclusive works on self determination are Alfred Cobban, The Nation State And National Self-Determination (New York, 1969); Rupert Emerson, From Empire to Nation: The Rise to Self-Assertion of Asian And African Peoples (O.U.P. London, 1960); A. R. Sureda, The Evolution of the Right of Self-Determination: A Study of United Nations Practice (Leiden, 1973); L. C. Buchcheit, Secession, The Legitimacy of Self-Determination (New Haven, London, 1978); and Dov Ronen, The Quest of Self-Determination (London, 1979).

2. U N document E/CN. 4/1199 (1978).

3. U N document A/CN. 4/291/Add. 2 (1977).

4. Ibid.

5. U N document A/8188 (1976).

6. Quoted by James Avery Joyce, The New politics of Human Rights (S. T. Martins Press, New York, 1979), P. 158.

7. See, J. M. Robson (ed) Collected Works of John Stuart Mill, 1861 (University of Tronto Press, Tronto, 1977) PP. 371 - 577

8. U. S. Congressional Records, Vol. 56, pt. 2, P. 1952.

9. Quoted by Michael Lowy, "Marxism and the National Question" in Robin Blackburn (ed), Revolution And Class Struggle (Fontana Gollins, 1977) P. 157.

10. Wilson's Speech of 17 September 1919 in R. S. Baker And W. E. Dodd (eds), War And Peace: Presidential Messages, Addresses And public papers (1917 - 1924) 1927, p. 244.

11. Robert Lansin, The Peace Negotiations New York, 1921, Chap. VII, "Self-Determination", quoted in Sarah Wamb-

augh, plebiscites Since the World War (Carnegie Endowment for International Peace, Washington, 1933), P. 15.

12. See, Rostislav Ulyanovsky, National Liberation, Progress publishers, Moscow, 1978, PP. 32 - 33.

13 V. I. Lenin, "Critical Remarks on the National Question", Colleeted works, (Progress Publishers, Moscow, 1964), Vol. 20, P. 27.

14. Quoted by Ralph Pettman, State and Class: A Sociology of International Affairs, (Croom Helm London, 1979) P 125.

15. The leading protagonists of this view are Hans kelsen, Leland M. Goodrich, Edward Hambro and Anne P. Simons; See Hans Kelson, The Law of the United Nations, (Praeger New York, 1951). PP. 51 - 53. Leland M. Goodrich, Edward Hambro and Anne P. Simons, Charter of the United Nations: Commentary and Documents, (Columbia University Press, New york, 1969.) PP. 29 - 31.

16. Quincy Wright, "Recognition And self, Determination", (Proceedings A. S. I. L) 1954), PP. 23 - 27: Rosalyn Higgins, Development of International Law through the Political Organs of the United Nations, (O. U. P., London, 1963) PP. 100 - 105; Also see Norman Bentwich and Andrew Martin, A Commentary On the Charter of the United Nations, (Columbia University Press, New York, 1969) PP. 29 - 31.

17. See Article 6, of Resolution 151+ (XV) of the General Assembly.

18. For Commentary On the Declaration, see Rosenstock, The Declaration of Principles of International Law Concerning Friendly Relations: A Sur. vey, (A. J. I. L., 1971), pp. 713 - 735.

19. Last but one para of the Declaration.

20. UN Monthly Chronicle (New York, February, 1970), P. 36.

ஓர் நாட்டின் ஈர் தேசியவாதங்கள்

அ. கௌரிகாந்தன்
பிரதம ஆசிரியர் —
''சாளரம்''

ஓர் நாடென்பது இலங்கை; ஈர் தேசிய வாதங்கள் என்பது தமிழீழ தேசிய வாதமும், சிறீ லங்கா தேசிய வாதமுமாகும்.

''தமிழீழ நோக்கின்'' மே - ஆகஸ்ட் 1991 இதழில் தேசிய வாதம் பற்றியும், இலங்கைத் தமிழ் தேசியவாதம் பற்றியும் வெளியான இரு கட்டுரைகளுமே என்னை இக்கட்டுரையை எழுதத் தூண்டின. அக்கட்டுரைகளுக்கு நேரடியாகவே பதில் என்று இதை எழுதவில்லை. ஆனால், அக்கட்டுரைகளில் கூறப்பட்ட கருத்துகளை மறுதலித்தே இக் கட்டுரையை முன்வைக்கின்றேன்.

முதலில், எனது கட்டுரையில் உபயோகிக்கப்படும் பதங்களை என்ன எண்ணக்கருவில் இருந்து நான் பிரயோகிக்கிறேன் என பதைக் குறிப்பிட அனுமதியுங்கள்.

நாடு : ஒன்றுக்குமேற்பட்ட இன, மொழிவழிக் குழுமங்களோ, மத வழிக் குழுமங்களோ ஒரு பூகோளப்பரப்பின் கீழ், தமது விருப்பத்துக்கு மாறாக ஒன்றிணைக் கப்பட்டு, ஓர் அரசின் ஆட்சி எல்லைக்குள் வாழும் நிலை இருக்குமானால், அவ் அரசின் ஆளுமைக்குட்பட்ட பூகோளப் பரப்பே நாடு என்று அழைக் கப்படும். இலங்கை ஒரு நாடு; இந்தியா, ஒரு நாடு. முதலாளித் துவத்திற்கு முன்னைய சமூக அமைப்பு நிலவிய பூகோளப் பரப்பில் முதலாளித்துவத்தின் அதிகாரம் நிலைநாட்டப்பட்ட பின்பே, முன்கூறிய இவ்வித பூகோளப் பரப்புகள் நாடு என்ற மேற் சொன்ன எண்ணக் கருவைப் பெற்றன. முதலாளித்துவத்தின் அதிகாரம் நிலைநாட்டப்படமுன் அவை ராஜ்ஜியங்கள், ராசதானிகள் பேரரசுகள் என்றே கருதப்பட்டன. நாடு என்ற பதம் முன்னைய வரலாற்றில் பயன்படுத்தப்பட்டாலும், முதலாளித்துவத்தின் பின்பு அவை முன் சொன்ன நவீன அர்த்தத்தைப் பெறுகின்றன.

தேசிய மேலாதிக்கவாதம்: முதலாளித்துவத்தின் பின்னைய உருவாக்கமான இந் நாட்டில் வாழும் பல குழுமங்களில் ஏதோ ஒன்று, தான் ஏனையவற்றையும விட உயர்வானது என்று கருதுவதும்; நாட்டின் அரசியல் அதிகாரம் உட்பட அனைத்து வளங்களையும் தானே தனித்து அபகரித்துக் கொள்ள விரும்புவதுமே, தேசிய மேலாதிக்கவாதம் எனப்படும்

இலங்கை நாட்டில் சிங்களத் தேசிய மேலாதிக்கவாதமும் இந்தியாவில் ஹிந்தி தேசிய மேலாதிக்க வாதமும், நிலவுகின்றன. சோவியத் ஒன்றியத்தில் ருஷ்ய தேசிய மேலாதிக்க வாதம் நிலவியது.

இலங்கையில் பெருந்தேசிய வாதம் என்ற பதமே பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது. National Chauvinism என்ற பதத்தின் தமிழ் மொழி பெயர்ப்பே இதுவாகும். சோவினிஸம் என்ற பதம் பல இடங்களில் பயன் படுத்தப் படுகிறது. Male Chauvinism என்பதை ஆண் மேலாதிக்கம் எனப் பயன்படுத்துகிறோம். Social Chauvinism - சமூக சோவினிஸம் என்றோர் பதமும் உண்டு. பேச்சளவில் சமதர்மமும் செயலில்

சமூகத்தின் அனைத்து அதிகாரங்களையும், வளங்களையும் தமது கைகளில் எடுக்க முற்படும் குழுவினருக்கே இப்பதம் பயன்படுத்தப்படுகிறது. இது சமூக மேலாதிக்கவாதம் எனப் பயன்படுத்தப்படுகிறது.

சிங்களப் பெருந்தேசியவாதம் என்ற பதத்தைவிட, சிங்களத் தேசிய மேலாதிக்கவாதம் என்ற பதமே அதிக பொருத்தப்பாடுடையதாகத் தோன்றுகிறது. சோவியத் மொழிபெயர்ப்புகளில் தேசிய வெறிவாதம் எனப் பயன்படுத்தப்படுகிறது. எது பொருத்தப்பாடானது என்பது ஆராயப்பட வேண்டும்.

தேசம் (Nation) : ஒரு இனவழி / மொழிவழி / மதவழி குழுமம் தனித்தோ அல்லது இவ்விதக் குழுமங்கள் சுயவிருப்புடன் ஒன்று சேர்ந்தோ தமக்கென்றோர், தாமாகத் தீர்மானித்த தனியான அரசையும், அந்த அரசின் கீழான ஒருபூகோளப் பரப்பையும், அப்பூகோளப்பரப்பில் ஒரு பொதுச் சந்தையையும் கொண்டிருந்தால் அல்லது கொண்டிருக்க அவாவி நின்றால், அம் மக்கட் பிரிவுக்குரிய நவீனகால (முதலாளித்துவப் புரட்சிக்குப் பிந்திய) அரசியல் பதமே தேசமாகும்.

இலங்கை தமிழீழம், சிறீலங்கா என்ற இரு தேசங்களின் கட்டாய இணைப்பிலான ஒரு நாடு. இந்தியா ஒருதேசமல்ல; அது பலதேசங்களைத் தனது கர்ப்பப்பையில் கொண்டிருக்கும் ஒரு நாடு. ஜேர்மனி ஒரு தேசம், பிரான்ஸ் ஒரு தேசம், பிரித்தானியா இங்கிலாந்து, அயர்லாந்து ஆகிய இரு தேசங்களின் கட்டாய இணைப்பினாலான ஒரு நாடு. சீனா பல தேசங்களின் இணைப்பினாலான ஒரு பல்தேசம் (Multi-Nation). (தீபெத் கட்டாய இணைப்பு என்றோர் கருத்தும் நிலவுகிறது.) இது உண்மையா அல்லது சீனாவையும் சிதறப்பண்ணும் அமெரிக்கச் சதியா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தேசியவாதம்: இத்தேசங்களின், -அவை ஏற்கெனவே தனி அரசாக நிறுவப்பட்டிருக்கலாம் அல்லது இன்னமும் அந்த நிலையை அடையாது இருக்கலாம் - தனித்துவம் தொடர்பான அரசியலே தேசியவாதம் எனப்படும்.

திட்டவட்டமான பூகோளப் பரப்பையும், அப்பரப்பில் சுதந்திரமாகச் செயற்படும் தகைமையையும், அப்பரப்பில் நிறுவப்பட்ட பொதுச் சந்தையையும் கொண்டிருக்கும் பட்சத்திலேயே தனி அரசு என்பது முழுமை பெற்றதாக இருக்கும். இவ்விதம் முழுமை பெறுவதற்காக நடைபெறும் அரசியலே தேசியவாதம் எனப்படும். தேசம் சர்வதேச விவகாரங்களில் சுதந்திரமாகச் செயற்படுவது தொடர்பான அரசியல் விவகாரங்களும் தேசியவாதமேயாகும்.

முற்போக்குத் தேசியவாதம்: இன்று உலகின் அரசியல் நிலையை நோக்கும்போது ஒரு சில வல்லரசுகள் உலக மேலாதிக்கத்திற்காகப் போட்டியிடுவதையும், பிற தேசங்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொணர அவாவி நிற்பதையும், காணக்கூடியதாய் உள்ளது. இவ் வல்லரசுகளின் நலனுடன் தம்மைப் பிணைத்துள்ள தேசியவாதங்கள் பிற்போக்கானவையாகும்; அவ்விதம் இல்லாத தேசியவாதங்கள் முற்போக்குத் தேசிய வாதங்களாகும்.

தேசியத் தனித்துவத்திற்காக மாத்திரமல்லாது உழைக்கும் மக்களின் நலனுக்கு அவசியமான அடிப்படைச் சமூக மாற்றங்களையும் தமது நோக்கமாக வகுத்துக் கொண்ட தேசியவாதங்கள், புரட்சிகரத்தேசியவாதங்கள் எனப்படும்.

தேசிய இனம் : ஒன்றுக்கு மேற்பட்ட இனவழி அல்லது மதவழி அல்லது மொழிவழிக் குழுமங்கள் இணைந்து பல் தேசமாக உருவாகி இருக்குமானால், இப் பல்தேசத்துள் உள்ள இக் குழுமங்கள் தேசிய இனம் எனப்படும். அவர்களிடையேயான பிரச்சினை தேசிய இனப் பிரச்சினை எனப்படும்.

அதேபோல் ஒருநாட்டில் அல்லது தேசத்தில் தனித்தோ அல்லது கூட்டாகவோ தேசம் என்ற தகைமையை அடையக் கூடிய உரிமைகள் கொண்டிருந்தும் அதற்குரிய புறநிலைச் சாத்தியப்பாட்டையும், அகநிலைப் பக்குவத்தையும் அல்லது இரண்டில் ஒன்றைக் கொண்டிராத நவீனகாலக் குழுமங்களே தேசிய இனம் எனப்படும். குழுமங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து இவற்றில் ஒன்று தேசிய பெரும்பான்மை இனம் என்றும், மற்றையது தேசிய சிறுபான்மை இனம் என்றும் அழைக்கப்படும்.

வகுப்புவாதம் (Communalism) : தேசிய ரீதியாகவோ, தேசிய இனரீதியாகவோ வர்க்க ரீதியாகவோ, பால்ரீதியாகவோ தோன்றும் சமூக முரண்பாடுகளைவிட இன ரீதியாகவோ (race), மதரீதியாகவோ, மொழிரீதியாகவோ தோன்றும் சமூக முரண்பாடுகள் வகுப்புவாத மோதல்கள் எனப்படும்.

இலங்கைத் தமிழ்த் தேசியவாதம்?!

இப்பொழுது கட்டுரைக்குச் செல்வோம். இலங்கையில் (இலங்கைத் தமிழ்த் தேசியவாதம்) என்றொன்று உண்டா? அல்லது இருந்ததா? அப்படியொன்று இன்று இல்லை; இதுவரை இருந்ததும் இல்லை.

மொழிவழிக் குழுமமாக எடுத்துப்பார்த்தால் இலங்கையில் இரு பிரதான மொழிவழிக் குழுமங்கள் இருந்து வருகின்றன. ஒன்று தமிழர் மற்றையது சிங்களவர். கட்டுரையாளரான எஸ். சத்தியசீலன் மேற்சொன்ன காரணத்தினால் இரு தேசிய வாதங்கள் இருந்துவருகின்றன என்ற முடிவுக்கு வருகிறார்.

முதலாவதாக தமிழர் என்ற மொழிவழிக் குழுமம் என்றுமே குறைந்தது தன்னை ஒரு தனித் தேசிய இனமாகக்கூடக் கருதியதில்லை; இன்றும் கருத வில்லை. வடக்கு - கிழக்கு மாகாணத்தை தமது பாரம்பரிய பிரதேசமாகக் கொண்டிருந்த தமிழர்கள் - இனி வரும் இடங்களில் இவர்களைத் தமிழீழத் தமிழர்கள் என அழைப்போம் —, மலையகத் தமிழர்கள், இஸ்லாமியர்கள் என மூன்று தனித்தனி அரசியல் தனிமங்களாக அவர்கள் பிரிந்துள்ளார்கள்.

இம் மூவரினது தேசிய இன தேசிய வரலாறும் வெவ்வேறுபட்டவை. இம் மூவரினதும் தேசிய இன அல்லது தேசிய அபிலாசைகளும் வெவ்வேறுபட்டவை. பொது மொழி என்ற ஒன்று அவர்கள் எல்லோரையும் ஒன்றுசேர்த்து, ஒரு தனித்தேசிய இனமாக்கிவிடவில்லை.

இலங்கைத் தேசியவாதம்

முழு இலங்கையும் தனி ஒரு அரசின் ஆட்சிக்குக் கீழ் வந்த நாளில் இருந்து 1930 கள்வரை - சர்வ ஜன வாக்கெடுப்புரை - தமிழீழத் தமிழர்கள், சிங்களவர்களுடன் சேர்ந்து இலங்கைத் தேசியவாத அரசியல் மார்க்கத்தையே கடைப்பிடித்தார்கள். தமக்கென்றோர் தனியான பிரதேசம் பற்றியோ, தமக்கென்றோர் தனியான அரசு பற்றியோ அவர்கள் கவலைப்படவேயில்லை. அக்கால தமிழீழத் தமிழ்த் தலைவர்கள் இலங்கை எங்கும் பரவி வாழ்வதையே குறிப்பாகக் கொழும்பில் குடியேறி வாழ்வதையே அதிகமாக விரும்பினார்கள். இவர்கள் பிரித்தானிய காலனியல் வாதிகளுக்கு மிக விசுவாசமானவர்களாகவும், அவர்களின் நலனைப் பாதுகாப்பவர்களாகவும் இருந்தார்கள். இதனால் இவர்களின் இலங்கைத் தேசியவாதம் பிற்போக்குத் தேசியவாதமாகவே இருந்தது. பல தேசிய இனங்கள் வாழக் கூடியதும், பிரித்தானியர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கக் கூடியதுமான ஒரு இலங்கைத் - தேசமே தமிழீழத் தமிழ்த் தலைவர்களின் குறிக்கோளாக இருந்தது. இந்தக் குறிக்கோளில் அவர்கள் கொண்ட மிக ஆழ்ந்த ஆர்வத்தின் காரணத்தால், தாம் ஒரு தேசிய சிறுபான்மை இனம் என்பதையும் அவர்கள் மறந்தார்கள். தேசிய சிறுபான்மை இனத்துக்கு அவசியமான அரசியல் பாதுகாப்புப் பற்றி அவர்கள் அதிகமாக எதுவும் அலட்டிக் கொள்ளவில்லை. இலங்கைத் தேசியவாதத்தை வளர்ப்பதற்கு அவசியமான கருமங்களைச் செய்வதில், அத் தலைவர்கள் முன்னணியில் நின்றார்கள்.

இலங்கைத் தேசிய காங்கிரசை அமைப்பதில் முன் நின்றது மாத்திரமல்ல, அதன் தலைவராக இருந்தவரும் சேர் பொன். அருணாசலமேயாகும்.[1] இலங்கையின் ராஜ்ஜியசபைக்கு முதன் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட படித்த வாலிபர் பிரதிநிதி சேர் பொன். இராமநாதனேயாகும்.[2] அது மாத்திரமல்ல பௌத்த மத மறுமலர்ச்சிக்கு சேர் பொன். இராமநாதன் அளப்பரிய பங்குகள் ஆற்றியுள்ளார்.[3] சிங்கள மக்களின் பௌத்த மத சார்பு தேசிய இன உணர்வைத் தட்டி எழுப்புவதிலும், பௌத்த மத மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதிலும் சேர் பொன். இராமநாதன் அளப்பரிய பங்காற்றியுள்ளார் இது தொடர்பாக அவர் ஆற்றிய உணர்ச்சிப் பிரவாகமான சொற்பொழிவுகள் இன்றும்கூட சிங்கள பௌத்தர்களால் நினைவுகூரப்படத் தக்கனவாய் இருக்கின்றன.[4]

முடிவாகச் சொல்வதானால் 1930 கள் வரை தமிழ்த் தேசியவாதம் என்ற ஒன்று தமிழீழத் தமிழர்களிடையே தோன்றியிருக்கவில்லை. இலங்கைத் தேசியவாதமே இவர்களிடையேயான ஆதிக்கம் மிகுந்த ஒரே அரசியல் போக்காக இருந்தது. 1920 களின் பிற்பகுதியில் இருந்து 1930 களின் முற்பகுதி வரை யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் பிரித்தானிய எதிர்ப்பு முற்போக்குத் தேசியவாதத்தை முன்வைத்தது;[5] ஆனாலும் இதுவும் இலங்கைத் தேசியவாதமாகவே இருந்துள்ளது.

சமய மறுமலர்ச்சி

1930 களின் முன்பாக ஆறுமுகநாவலரினதும், சைவ பரிபாலசனபை, இந்து மகாசபை போன்றவற்றினதும் இந்து மத வளர்ச்சி நடவடிக்கைகளையும் இன்னும் பலரால் மேற் கொள்ளப்பட்ட தமிழ் மொழி வளர்ச்சி நடவடிக்கைகளையும் இலங்கைத் தமிழ்த் தேசியவாதத்தின் ஆரம்பங்கள் என்றே பலர் கருதுகிறர்கள். திரு சத்தியசீலனும் தனது கட்டுரையில் இதே கருத்தையே முன்வைக்கிறார்.

ஐரோப்பியரின் ஆக்கிரமிப்புக்குத் துணையாக கலாசார ஆக்கிரமிப்பும் இடம் பெற்றது. இக்கலாசார ஆக்கிரமிப்பில் கிறீஸ்தவமும் ஒரு கருவியாக இருந்தது. கிறீஸ்தவ மதமாறறம் பெற்ற இலங்கையர்கள். குறிப்பாக தென் இலங்கையின் கரையோரப் பகுதி சிங்கள உயர்வர்க்கங்கள், கறுத்தத்தோலுள்ள வெள்ளையாகளாகவே தம்மைக் கருதினார்கள். இந்நிலைமை இலங்கைத் தேசிய வாதத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தது. இத்தடையை அகற்றவேண்டிய அவசியம் இலங்கைத் தேசியவாதிகளுக்கு ஏற்பட்டது. அவர்கள் அவ் அவசியத்தைப் பூர்த்தி செய்யக்கூடிய நடவடிக்கைகளில் இறங்கினார்கள். இதற்கான நடவடிக்கைகளில் ஒன்றாக இலங்கையின் தொல் மதங்களான பௌத்தத்தையும், இந்துமதத்தையும் மீளவும் சக்திபெறச் செய்வதில் இலங்கைத்தேசியவாதிகள் ஈடுபட்டார்கள். சைவப் பெரியார் ஆறுமுகநாவலர் அரசியல் நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடாவிட்டாலும், மிகுந்த அக்கறை உள்ளவராய் இருந்துள்ளதை மறந்துவிடக் கூடாது.[6]

இது பிரச்சினையின் ஒருபக்கம். இத்தொல் மதங்களுக்கு மீள் சக்தியூட்டும் இயக்கத்திற்கு வேறோர் பக்கமும் இருந்துள்ளது. பிரித்தானியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுப் பாதுகாக்கப்பட்ட புதிய பண்பாடும், அப்பண்பாட்டின் ஓர் அங்கமாய் இருந்த கிறீஸ்தவ மதமும், இத் தொல்குடிகள் மத்தியில் நிலவிவந்த பாரம்பரிய நிலப்பிரபுத்துவப் பண்பாடுகள் பலவீனப் படுவதற்கான நிலைமைகளைத் தோற்றுவித்தது. தமிழீழத் தமிழர் மத்தியில் நிலவிய சாதி அமைப்பும்[7], சிங்களவர் மத்தியில் பௌத்த மதபீடங்கள் அனுபவித்து வந்த அரசியல், பொருளாதார மிகைச் செல்வாக்கு நிலையும்[8] பாதிபபுக்குள்ளாக்கப்பட்ட இருதொல் பண்பாடுகளாகும். இந்நிலப்பிரபுத்துவசமூக ஒழுங்கு இத்தொல்மதங்களுடன் தொடர்புபட்டதாகவே அமைந்துள்ளது. ஆகவே, செல்வாக்கிழந்து போய்விடக்கூடுமோ என அஞ்சப்பட்ட இந்நிலப்பிரபுத்துவப் பண்பாடுகளை மீளவும் சக்திபெறச் செய்வதற்காக, தொல்மதங்களுக்குமீளவும சக்தியூட்டும் இயக்கம் துரிதமாக நடைபெற்றது. நிலப்பிரபுத்துவப் பண்பாட்டை மீள் ஊக்கப்படுத்துவதே (re - activate) இச்சமயத்துறைப் புத்தெழுச்சி இயக்கத்தின் நோக்கமாகும். இக்கோணத்தில் இருந்து நோக்கும்போது, இச்சமயத்துறைப் புத்தெழுச்சி தனியே தேசியவாதம் மாத்திரமல்ல என்பதைப் புரிந்துகொள்ள முடியும்

மொழியை எடுத்துக்கொண்டால், தமிழ் மொழியின் வளர்ச்சி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தமிழ் மொழியின் அரசியல் அந்தஸ்துடன் தொடர்புற்றதாக இருக்கவில்லை. ஆறுமுகநாவலர், உயர்திரு. விபுலானந்தர், அருட்தந்தை ஞானப்பிரகாசர் ஆகியோர் தமிழ மொழியின் வளர்ச்சி சம்பந்தமாக நிறையவே பங்காற்றினார்கள் ஆனால், இந்த மூவரும் ஒரே அரசியல் அணியைச் சேர்ந்தவர்கள் அல்ல. இவர்களில் எவரும் ஆங்கில மொழியின் அரசியல் அந்தஸ்தையும், அரசியல் மேலாதிக்கத்தையும் கண்டிக்கவில்லை. அனைவரும் அதை ஏற்றுக்கொண்டவர்களேயாவர். தமிழ் மொழியின் அரசியல் அந்தஸ்தைப பற்றி இவர்கள் கவலை கொண்டதாகவும் தெரியவில்லை.

தமிழீழத் தமிழர்கள் மிக நேர்மையாகவும் மிக நம்பிக்கையுடனும், இலங்கைத் தேசியவாதத்துடனேயே தம்மை இனங்காட்டிக் கொண்டார்கள். ஒரு மொழிவழி அரசியல் குழுமம் என்ற முறையில் தமிழீழத் தமிழ்த் தலைவர்கள் மலையகத் தமிழர்களுடனோ, இஸ்லாமியர்களுடனோ எந்தவித நட்புத் தொடர்பும் கொண்டிருக்கவில்லை. மாறாக இஸ்லாமியர்களுக்கு எதிராக சிங்களவர்கள் மேற்கொண்ட வகுப்புவாத நடவடிக்கையில் தமிழீழத் தமிழ்த்தலைவர்கள் தம்மைச் சிங்களவர்களுடனேயே இனங்காட்டிக் கொண்டார்கள்.[9] தமிழீழத்தமிழர்கள் மலையகத் தமிழர்களுடனும், முஸ்லிம்களுடனும் கொள்ளும் உறவிலும்விட சிங்களவர்களுடன் இணைந்த ஒரு இலங்கைத் தேசியவாத உறவிலேயே அதிகம்நாட்டங் காட்டினார்கள். பிரித்தானியர்கள்மேல் கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கையினால் தமிழீழத் தமிழர்கள் சிங்களவர்களை நம்பினார்கள்; பிரித்தானியரையும் மீறி சிங்களவர்களால் தம்மை ஏமாற்றமுடியாது என, இறுமாப்புக் கொண்டிருந்தார்கள்.

20ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை இலங்கைத் தமிழ்த் தேசியவாதம் என்ற ஒன்று நிலவவே இல்லை என்பதையே இவை காட்டுகின்றன.

முடிவாக நோக்கினால் 1930கள் வரை தமிழ்த்தேசியவாதம் என்பது தோன்றியிருக்கவில்லை. ஆகக்குறைந்தது தமிழீழத் தமிழர்கள் தாம் ஒரு தேசிய சிறுபான்மையினர் என்பதைக் கூடவாவது, அரசியல் ரீதியில் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. 1930களின் பின்பே அது புரிந்து கொள்ளப்படும் நிலை தோற்றமுறுகிறது.[10]

மலையகத் தமிழர்பற்றி

20ஆம் நூற்றாண்டின் முற்பாதிவரை மலையகத் தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டை எடுத்துக் கொள்ளுவோம். கோப்பித்தோட்டங்களிலும், தேயிலைத் தோட்டங்களிலும் தொழிலாளர்களாகச் செயற்கை அழைத்துவரப்பட்ட இம்மக்கள் ஆரம்பத்தில் பருவகாலத் தொழிலாளர்களாக, தென் இந்தியாவில் இருந்து வருவதும் போவதுமாகவே இருந்தார்கள். மிகச் சிறு தொகையினரே நிரந்தரமாகக் குடியேறி இருந்தார்கள். வர்த்தகர்களாக வந்தவர்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் சொத்துக்கள் உள்ளவர்களாக இருந்தார்கள். தொழிலாளர்களை இவ்விதம் வருவதும் போவதுமான நிலையில் தொடர்ந்துவைத்திருப்பதை எதிர்த்து, இலங்கையின் தொழிற் சங்கங்களும், மலையகத் தமிழ் மக்களின் சங்கங்களும் குரல் கொடுத்தன. இதனாலும், கோப்பிக்குப் பதில் தேயிலை வந்ததனாலும் அவர்களை நிரந்தரமாகத் தங்கவைக்கும் நிலை தோற்றுவிக்கப் பட்டது.

இதன் பிற்பாடும் மலையகத் தமிழர் மத்தியில் இந்தியத் தொடர்புடன் கூடிய ஸ்தாபனமே செயற்பட்டுவந்தது. அவர்கள் இந்திய தேசிய காங்கிரசுடனேயே அதிகத் தொடர்புள்ளவர்களாக இருந்தார்கள். இம் மக்கள் இலங்கைத் தேசியத்துடன் இணைக்கப்பட்ட வரலாறுக்கும் தமிழீழத் தலைவர்களுக்கும் எதுவித தொடர்பும் இருக்கவில்லை.[11]

பிரித்தானியத் தோட்டத் துரைமாரால் அடக்கப்பட்ட அம் மக்களின் நலனில், தமிழீழத் தமிழ்த் தலைவர்கள் எதுவித அக்கறையும் செலுத்தவில்லை. இத்தலைவர்கள் பிரித்தானியருடன் அதிக நட்புள்ளவர்களாக இருந்தார்களே தவிரப், பிரித்தானியர்களின் கூலி அடிமைகளான மலையகத் தமிழ் மக்களுடன் நட்புக் கொள்ளவில்லை. யாழ்ப்பாணத்தில அதிக செல்வாக்குடன்

திகழ்ந்த இந்து சமயத்துறைப் புத்தெழுச்சி இயக்கம், மலையகத்தில் எந்தத் தொடர்பும் அற்றதாகவே இருந்தது.

கொழும்பு நகரத்தில் மையங்கொண்டு இலங்கைத் தேசியவாத நிலைப்பாட்டை எடுத்திருந்த இடதுசாரி இயக்கங்கள், இந்திய — இலங்கைத் தேசிய காங்கிரசிற்கு அடுத்ததாக மலையகத்தில் அதிக செல்வாக்குப் பெற்றனவாக இருந்தன.

மலையகத்தமிழ் மக்களின் குடியுரிமையையும் ,வாக்குரிமையையும் பறித்தெடுப்பதில் தமிழீழத் தமிழ்த் தலைவர்கள் சிங்களத் தலைவர்களுடன் நெருங்கி ஒத்துழைத்தார்கள்;[12] இதனால் மலையகத் தமிழ் மக்களின் பகைமையையும் சம்பாதித்துக் கொண்டார்கள்.

இலங்கை ''சுதந்திரமடையும்'' காலம் வரை மலையகத் தமிழர்களும், தமிழீழத் தமிழர்களும் தனி ஒரு தேசிய அரசியல் அணியின் கீழ் அணிதிரள்வதற்கான எந்த முயற்சியும் மேற்கொள்ளப் படவில்லை.[13]

1930 களின் பின்னர்தான் தமிழீழத் தமிழர்கள் தம்மை ஒரு தேசிய சிறுபான்மை இனமாகப் புரிந்துகொள்கிறார்கள் ; தமக்கு ஒரு தேசிய இனப் பிரச்சினை உண்டு என்பதை உணர்ந்து கொள்கிறார்கள்; தமது தேசிய இனத் தனித்துவத்தைப் பேணும் நோக்குடனான அரசியல் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தத் தொடங்கினார்கள்.[14]

ஆனால் மலையகத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் தாம் ஒரு தேசிய சிறுபான்மை இனம் என்பதை 1930களின் முன்னரேயே புரிந்துகொள்ளத் தொடங்கி விட்டார்கள். மிக ஆரம்பகாலத்தில் அவர்கள் இலங்கைத் தேசியத்தில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. ஆனால் பிற்பட்ட பகுதிகளில் அவர்கள் இலங்கைத் தேசியத்தில் நம்பிக்கை கொண்டு இலங்கைத் தேசியவாத அரசியலில் ஈடுபடுகிறார்கள். ஆனால் இவர்களின் தேசியவாதம் பிரித்தானிய எதிர்ப்புத் தன்மை பெற்றதாய் இருந்த காரணத்தால் அது முற்போக்குத் தேசிய வாதமாக இருந்தது.[15] இதனால இவர்கள் ஆரம்பத்தில் இலங்கைத் தேசிய காங்கிரசிற்கும் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எதிரான அரசியல் நிலைப்பாட்டையே மேற்கொண்டார்கள்: இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் அங்கமானார்கள்.

இதே காலப்பகுதியில் தமிழீழத் தமிழ்த் தலைவர்கள் இலங்கைத் தேசிய காங்கிரசுடனும் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் நெருங்கி ஒத்துழைத்தார்கள் என்பதை, மறந்துவிடக்கூடாது.[16] இதன் மூலம் இவர்கள் பிற்போக்கு இலங்கைத் தேசிய வாதத்தை ஏற்றுக் கொண்டவர்களாக இருந்தார்கள்.

இவ்விதம் நோக்கும் போது இலங்கைத் தேசிய வாதத்தையே இரு பிரிவினரும் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் மலையகத் தமிழ் மக்கள் முற்போக்கு இலங்கைத் தேசியவாதத்தையும், தமிழீழத் தலைவர்கள் பிற்போக்கு இலங்கைத் தேசியவாதத்தையும் பின்பற்றினார்கள். மலையகத் தமிழர்கள் தாம் ஒரு தேசிய சிறுபான்மை இனம் என்பதை உணர்ந்திருந்தார்கள்; தமிழீழத் தமிழ்த் தலைவர்களோ தம்மைக் குறைந்தது ஒரு தேசிய சிறுபான்மையினத்தின் தலைவர்களாகக்கூடக் கருதாது இருந்தார்கள். இது 1930 கள் வரை நீடித்தது. அதன்பின் 1940 கள் வரை இவர்கள் தாம் ஒரு தேசிய சிறுபான்மை இனம் என்பதைப் புரிந்து கொண்டார்கள். ஆனால், அண்டிப் பிழைப்பவர்களாகவே இருந்தார்கள்.

இந்தச் சூழலில் எங்கிருந்து வந்தது ''இலங்கைத் தமிழ்த் தேசியவாதம்?.'' தமிழரசுக் கட்சியின் தோற்றம்வரை அவ்விதமான எண்ணக்கருவே இலங்கையில் இருந்ததா என்பது சந்தேகமே. சில தனி நபர்களிடம் அது இருந்திருக்கலாம்; ஆனால் அது ஒரு பொது அரசியலாக இருக்கவில்லை.

சிங்கள - பௌத்த தேசிய மேலாதிக்க வாதம்:

சிங்கள - பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் எதிர்வினைதான் இந்து - தமிழ் மறுமலர்ச்சி என்று நிலவும் கருத்து தவறானது. பிரித்தானியர் இலங்கைத் தீவு முழுவதையும் இணைத்து ஒரு நாடாக்கிய காலத்தில் இருந்து 1930 கள் வரையான காலப் பகுதியில், சிங்கள பௌத்த மறுமலர்ச்சி இயக்கமும் தமிழ் இந்து மறுமலர்ச்சி இயக்கமும் ஒன்றுக்கொன்று எதிர் எதிரானதாக இருக்கவில்லை. மாறாக ஒன்றுக்கொன்று துணைபோவதாகவே இருந்தது. இவை இலங்கைத் தேசியவாதத்தின் இரு நட்புறவுப் போக்குகளாகவே இருந்துள்ளன. தமிழீழ மேற்குடியினரின் அரசியற் கட்சியும் - குறிப்பாக யாழ்ப்பாண -, சிங்கள மேட்டுக் குடியினரின் அரசியற் கட்சியும் வகுப்புவாதக் குணாம்சங்களை இடையிடையே காட்டி வந்தன, என்பது உண்மை. ஆனால் இது ஒரு அரசியல் விவகாரமாக, பிரதான அரசியல் முரண்பாடாக வடிவெடுக்கவில்லை இரு மறுமலர்ச்சி இயக்கங்களினது நோக்கமும் கிறிஸ்தவ மத ஆதிக்கத்திற்கு எதிரானதாகவும் நிலப்பிரபுத்துவத்தை மீள ஊக்கப்படுத்துவதாகவும் இருந்தது.[17] ஆனால் இவ் எதிர்ப்புக்கூட நேரடியான அரசியற் போராட்ட வடிவெடுக்கவில்லை.

சிங்கள மேட்டுக் குடியினரின் மிகக் கணிசமான பகுதியினர், அதுவும் பிரித்தானியர் அறிமுகப்படுத்திய பொருளாதாரத்தால் புதிதாகத் தோன்றிய மேட்டுக் குடியினர்,[18] கிறிஸ்தவ மதத்தைத் தழுவியதுடன்

மேற்கத்தைய மோகம் மிக்கவர்களாகவும் இருந்தார்கள். இவர்களே பொருளாதார, அரசியல் அதிகாரம் மிக்கவர்களாகவும் இருந்தார்கள். சிங்கள-பௌத்த பேரினவாத குணாம்சங் கொண்ட சிங்கள - பௌத்த மேட்டுக் குடியினர் அரசியல் ரீதியில் பலவீனப் பட்டிருந்தார்கள். கிறீஸ்தவ மதத்தால் மிகக் குறைவாக ஈர்க்கப்பட்ட கண்டியச் சிங்களவர்களே சிங்கள பௌத்தப் பேரினவாதத்தைப் பாதுகாத்து வந்தார்கள். ஆச்சரியமானது என்னவென்றால், கிறீஸ்தவ ஆதிக்கத்திற்கு எதிராக இவர்கள் தமிழீழ அரசியல் தலைமையுடன்கூட ஐக்கியப் படத், தயாராய் இருந்தார்கள்.

இதனால், சிங்களவரிடையே பல நூற்றாண்டுகளாக நிலவிவரும் சிங்கள - பௌத்த பேரினவாதம் கிறீஸ்தவத்தினதும், ஐரோப்பிய நாகரிக மோகத்தினதும் ஆதிக்கத்தால் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள முடியாமல், ஒழிவுமறைவு நிலையில் செயற்பட்டது: வெளித் தோற்றத்தைப் பொறுத்தவரை வகுப்புவாதம் என்ற மட்டத்திற்குத் தன்னைக் குறுக்கியும், மட்டுப் படுத்தியும் இருந்தது.

தமிழீழப் பிரதேசங்களைச் சிங்களமயப்படுத்துவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டன; அரசியல் அதிகாரத்தைச் சிங்களவர்களின் : கைகளிலேயே வைத்திருப்பதற்கான திட்டங்கள் மெது மெதுவாக நடைமுறைப்படுத்தப்பட்டன;[20] பொருளாதார வளங்கள் சிங்களவர்களின் கைகளிலேயே இருப்பதற்கான அடிப்படைத் தயாரிப்புகள் செய்யப்பட்டன.[21] ஆனால் இந் நடவடிக்கைகள் இலங்கைத் தேசியவாதத்தைப் பாதிக்காத முறையில் ஒழிவுமறைவான முறையிலேயே செய்யப்பட்டன.

1930களின் பின் இது வெளிப்படையாக நடைபெற ஆரம்பித்தது அரசியல் அரங்கத்தில் சிங்களத் தேசிய மேலாதிக்கத்தை நிலைநிறுத்த எடுக்கப்பட்டு வந்த விடாப்பிடியான முயற்சிகளையே இங்கு குறிப்பிடுகிறோம். சிங்களத் தேசிய மேலாதிக்க பாராளுமன்றம் ஒன்றை உருவாக்குவதில், சிங்களப் பௌத்த தேசிய மேலாதிக்கத் தலைவர்கள் நிச்சயத் தன்மை பெற்ற பல வெற்றிகளைப் பெற்றுக் கொண்டார்கள்.[22]

தமிழரசுக் கட்சி

தமிழரசுக் கட்சியின் தோற்றத்துடன்[23] இலங்கையின் தேசியவாத வரலாற்றில் புதியதோர் பரிமாணம் ஏற்படுகின்றது.

இலங்கைத் தமிழ்த் தேசியம் என்ற ஆடை அணிகளுடன் தமிழீழத் தேசியம் என்ற குழந்தை பிரசவமாகிறது. ஆனால் துரதிஷ்டவசமாக தீர்க்கதரிசனமும் பொறுப்புணர்ச்சியும் அற்ற மருத்துவிச்சியாக தமிழரசுக் கட்சி செயற்பட்டுவந்தது. குழந்தையும் சரியாகப் பராமரிக்கப்படவில்லை: ஆடை அணிகளும் அதற்குப் பொருத்தமானதாய் இருக்கவில்லை.

சமஷ்டிக் கோரிக்கை பாரம்பரியப்பிரதேசத்தை அடிப்படையாகக்கொண்டது. பாரம்பரிய பிரதேசம் என்ற பிரச்சினை ஒரு அரசியல் விவகாரமாக மாறியமை தமிழீழ தேசியவாதத்தின் பிறப்பைக் குறிகாட்டுகின்றது. ஆனால் தேசியவாத அரசியலின்மூலம் அக் குழந்தை போஷித்து வளர்க்கப்படுவதற்குப் பதிலாக, மொழி என்பது பிரதான அரசியல் விவகாரமாக மாற்றப்படுகிறது. தமிழீழத் தேசியப் போராட்டமானது, இலங்கையில் மொழி சமத்துவத்திற்கான போராட்டமாகக் குறுக்கப்படுகிறது.

இதன்மூலம் 'இலங்கைத் தமிழ்த் தேசியவாதம்' என்றோர் மாயைக்குள், பொய்மைக்குள் தமிழீழத் தேசியவாதம் வீழ்த்தப்படுகிறது. இலங்கைத் தமிழர்களை ஓர் தலைமையின் கீழ் ஒரே 'தேசிய இயக்கத்தின்' கீழ் சேர்க்கப் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டன. தமிழரசுக்கட்சி மலையகத்திலும் செயற்படத் தொடங்கியது. ஆனால் அவ்வேளையில் அதனால் எந்த வெற்றியையும் காண முடியவில்லை. முஸ்லிம்கள் மத்தியில் செயற்படப் புறப்பட்டது; அங்கும் அதனால் வெற்றி பெற முடியவில்லை. தமிழீழத்திற்கு வெளியில் உள்ள முஸ்லிம்கள் மத்தியில் கட்சி ரீதியாக எந்த ஆதரவையும் எடுக்க முடியவில்லை. தமிழீழத்தினுள் சிறிது காலம் செல்வாக்குப் பெற்று இருந்தது. ஆனால் அங்கும் இறுதியில் தோற்றுப் போனது.

இது தமிழரசுக்கட்சியின் செயற் திறமையீனத்திற்கோ, சுயநலப்போக்கிற்கோ கிடைத்ததோல்வியல்ல. இலங்கைத்'தமிழ்த் தேசியவாதம்' என்ற அரசியல் சித்தாந்தத்திற்குக் கிடைத்த தோல்வியேயாகும். 'இலங்கைத் தமிழ்த் தேசியவாதம்' என்பது 'இலங்கைத் தேசியவாதத்தின்' மற்றோர் மாறுவேடமேயாகும். தமிழரசுக் கட்சி தானே மருத்துவிச்சியாக இருந்து பிறப்பித்த தமிழீழத் தேசிய வாதத்தைத் தானே ஏற்றுக்கொள்ளவில்லை. தனது கட்சி நலனைப் பாதுகாக்கவும், மக்கள் கவனத்தைத் திசைதிருப்ப அவசியமான தமிழ் வகுப்புவாதத்தை அள்ளிக்கொட்டவும், இடையிடையே தமிழீழத் தேசியவாதத்தைக் கொச்சைப்படுத்தி, சிறுமைப் படுத்திப் பயன்படுத்தி வந்தது. அதேவேளை தமிழீழத் தேசியவாதத்தின் வளர்ச்சியைத் தடுத்தும், திசைதிருப்பியும் வந்தது. தமிழீழத் தேசியவாதத்தின் முதலாம் நம்பர் நேரடி எதிரியாக பௌத்த- சிங்கள தேசிய மேலாதிக்க வாதத்தை எடுத்துக் கொண்டால், தமிழீழத் தேசிய வாதத்தின் உள்ளூர் முதலாம் நம்பர் துரோகியாக தமிழரசுக் கட்சியை எடுத்துக்கொள்வதில், தவறொன்றும் இருக்கமாட்டாது.

தமிழீழத் தேசியவாதம்

இன்றும் தமிழீழத்தின் பல புத்திஜீவிகள் தமிழீழத் தேசியத்தை ஏற்றுக்கொள்ளத் தயங்குவது வெட்கப்

படவேண்டிய ஒரு விடயமேயாகும். தமிழீழத் தேசியம் என்ற எண்ணக்கருவை அவர்கள் இன்னமும் கிரகித்துக் கொள்ளவில்லை. இலங்கையின் இனப் பிரச்சினையை இரு தேசங்களுக்கிடையேயான பிரச்சினையாகப் பார்க்கத் தவறுவதும், இலங்கைத்தமிழ்த் தேசியம் பற்றிப்பிரஸ்தாபிப்பதும் இதனால்தான் என்பதைப் புரிந்து கொள்வது, அவ்வளவு சிரமமான தொன்றல்ல.

1940களின் பின்னரே 'தமிழீழத் தேசியவாதம் அரசியல் விவகாரமாக மாறியது. அதைப் பிறப்பித்த பெருமை தமிழரசுக் கட்சியையே சாரும். அதே தமிழரசுக் கட்சி அக்குழந்தையை முடமாக்கி அரசியல் வியாபாரம் நடாத்தியது. தேசியவாதத்தை வகுப்பு வாதமாகத் திசை திருப்பி விட்டது. சரணடைவுத் தேசிய இனவாதத்தை முன்வைப்பதன் மூலம் தமிழீழத் தேசம் இலங்கைத் தேசியத்துள் அடிபடும் ஒரு தேசிய இனமாக வாழ வழி சமைத்தது.

சிங்கள - பௌத்த தேசிய மேலாதிக்க வாதிகளின்' பிரம்படிக்கும், தமிழரசுக்கட்சியின் ஏமாற்றுக்கும்- இடதுசாரிக் கட்சிகளின் மாக்ஸிஸ - லெனினிஸ விரோத சிந்தனா முறைக்கும் எதிர்த்துநிற்க முடியாத நிலையில் இருந்த தமிழீழத் தேசியவாதம், சுமார் 30 வருடங்கள் இருட்டறையில் மூழ்கிக் கிடந்தது; 70ஆம் ஆண்டுகளில்தான் அது வெளியுலகைப் பார்க்கும் நிலை ஏற்பட்டது. அதன் பின் துரிதமாக வளரத் தொடங்கியது. இன்று இலங்கைத் தீவில் இரு தேசியவாதங்கள் என்ற நிலையை அடைந்து விட்டது; இலங்கைத் தீவில் மாத்திரமல்ல உலக அரங்கிலேயே ஒரு தனித்துவ தேசியவாதம் என்ற முறையில், உலகின் கவனத்தை ஈர்க்க ஆரம்பித்துள்ளது.

மொழிவழி ஐக்கியம்

இலங்கைத்தீவில் இரு தேசியவாதங்களே நிலவுகின்றன என்பதன் அர்த்தம் தமிழீழத் தமிழர்கள் தனியானவர்கள் - அவர்கள் வேறு எவருடனும் எந்தவித ஐக்கியத்தையும் ஏற்படுத்த முடியாதவர்கள் என்பதல்ல. ஒரே மொழி பேசுபவர்கள் என்ற முறையில தமிழீழத் தமிழர்கள், தமிழ் முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் ஆகியோரிடையே ஒரு ஐக்கியம் ஏற்படுவது இயல்பேயாகும். எந்தவித அரசியல் வரையறைகளுக்கும் உள்ளடங்காத ஒரு ஐக்கியம் இங்கு இயல்பாகவே வந்து சேரும். இவ்விதமான ஐக்கியத்தைச் சிங்களப் பௌத்த தேசிய மேலாதிக்கவாதிகள் விரும்பாவிட்டாலும், வரலாறு அவர்கள் வீட்டு வளர்ப்பு நாயல்ல- ஆகவே ஐக்கியம் ஏற்பட்டே தீரும்.

இன்னொரு புறத்தில் சிங்கள - பௌத்த தேசிய மேலாதிக்கவாதிகளால் அடக்கப்படுபவர்கள் என்ற முறையில் இம்மூன்று பிரிவினருக்கிடையிலும் ஒரு ஐக்கியம் ஏற்படுவது மிக மிக அவசியமானது. இது அரசியல் வகைப்பட்ட ஒரு ஐக்கியமேயாகும். ஒவ்வொரு பிரிவினரும் மற்றவர்களது அரசியல் தனித்துவத்தை ஏற்றுக்கொள்வதன் மூலமும், அரசியல் தனித்துவத்தை நிறைவேற்றுவதற்கு ஒருவருக்கு ஒருவர் பரஸ்பரம் உதவுவதன் மூலமுமே இந்த ஐக்கியம் சாத்தியமாகும். ஆனால் இந்த ஐக்கியம் 'இலங்கைத் தமிழ்த் தேசியவாதம்' என்ற அடிப்படையிலான ஒரு ஐக்கியமல்ல.

தமிழீழ தேசிய இனச் சிக்கல்

இதற்கு மேலதிகமாக, தமிழீழத் தமிழர்களும். முஸ்லிம்களும் தமிழீழக்குடிமக்களேயாவர். இவர்கள் ஒரே தேசியத்தினர். தமிழீழத் தாயகத்தின் புதல்வர்கள். சிங்கள - பௌத்த மேலாதிக்கவாதிகளினதும் ஏனைய அந்நிய சக்திகளினதும் நடவடிக்கைகளினால் இவ் ஐக்கியம் இன்று குலைந்துபோய் இருப்பது, வேதனைக்குரியதேயாகும் இது தமிழீழத்தின் ஒரு தேசிய இனச் சிக்கலாகும்.

இலங்கை என்ற இந்த நாட்டின் ஈர் தேசியவாதங்களையும், தேசியவாதங்களின் குணாம்சங்களையும், அத்தேசியங்களில் உள்ள தேசிய இனச் சிக்கல்களையும் புரிந்து கொள்ளாமல், நிகழ்கால இலங்கையின் வரலாற்றை எம்மால் புரிந்து கொள்ள முடியாது.

தமிழீழ தேசியவாதத்தின் காலதாமதம்

தமிழீழத் தேசியவாதத்தின் வளர்ச்சியைப்பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும்போது, அதைச் சிங்களத் தேசிய மேலாதிக்கத்துடன் அல்லது சிங்களப் பேரினவாதத்துடன் இணைத்துப் பார்ப்பதே வழமையான ஆய்வு முறைபாகிவிட்டது. பின்னையதன் தாக்கந்தான் பின்னையதைத் தோற்றுவித்தது என்றே கூறப்படுகின்றது. இது மிகத் தவறானதும், தவறான அரசியல் முடிவுகளுக்கு இட்டுச் செல்லக் கூடியதொன்றுமாகும்

1950 கள் வரை தமிழீழத் தேசியவாதத்தின் வளர்ச்சிக்கு சிங்களப்பேரினவாதமோ, அல்லது சிங்களத்தேசிய மேலாதிக்கவாதமோ எந்தவித நேரடித் தடையாகவும் இருக்கவில்லை கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றம் ஒன்று நடைபெற்றது. மற்றும்படி தமிழீழத் தலைவர்கள்தான இலங்கைத் தேசியவாதத்துடன் வலியச் சென்று ஒட்டிக்கொண்டார்களே தவிர, சிங்களப் பேரினவாதிகள் வலிந்து இழுக்கவில்லை. தமிழீழத் தேசியவாதத்தைத் தம்முடன்வலிந்து இழுத்துச் சேர்த்துக் கொள்வதற்கான எந்தவிதப் பிடிமானமும் சிங்களப் பேரினவாதிகளிடம் இருக்கவில்லை. இலங்கையின் தென் பகுதியில் சென்று குடியேறுவதன் மூலமும், அங்கு தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வதன் மூலமும், தவர்கள்தான் சிங்களப் பேரினவாதத்திற்குப்பிடி கொடுத்தார்கள்; ''பொல்லுக் கொடுத்து அடிவாங்கிய கதை தான்.''

இலங்கையில் ஏற்பட்ட முதலாளித்துவ வளர்ச்சி சிங்களப் பௌத்த பேரினவாதத்தை, சிங்களப் பௌத்த தேசிய மேலாதிக்கமாக வளர்த்து விட்டது. இது 50ஆம் ஆண்டுகளில் நடைபெற்றது.[25] அந்த நிலையிலுங் கூட, அல்லது பிரச்சினை இவ்வளவு தூரத்திற்கு மோசமாகி விட்டதைக் கண்ட பிறகும்கூட, தமிழீழத் தேசியவாதம் உரியமுறையில் வளரத் தொடங்கவில்லை. இது ஏன்?

தமிழீழத்தேசியவாதத்தின் இக் காலங்கடந்த வளர்ச்சிக்கான காரணத்தை தமிழீழத் தேசியத்தின் அகநிலையில்தான் கண்டுபிடிக்க வேண்டுமே தவிர, புறநிலையில் தேட முடியாது என்பதே எனது கருத்தாகும். ஐரோப்பியர் காலத்தில் இருந்து தமிழீழமும் சிறீலங்காவும் கிட்டத்தட்ட ஒரேவிதமான புறநிலைமைக்கே முகங்கொடுத்தன. ஆனால் சிறீலங்காவில் ஏற்பட்ட தேசியவாத வளர்ச்சி தமிழீழத்தில் ஏற்படவில்லை.

ஒரே கோழியில் இரண்டு முட்டைகள் அடைவைக்கப்பட்டன. ஒன்று முதலில் பொரித்தது; மற்றையது காலதாமதமாகிப் பொரித்தது. புறநிலை ஒன்றுதான் (கோழியின் சூடு); முட்டையின் அகநிலையில்தான் காரணம் உள்ளது.

1930களிலேயே சிறீலங்காவில் சக்தி மிக்கதொரு தொழிலாளி வர்க்கமும், துரிதவளர்ச்சிக்கான வாய்ப்புகளைக் கொண்டிருந்த ஒரு தரகு முதலாளிவர்க்கமும் இருந்தது. இத் தரகு முதலாளிவர்க்கம் தொழில்துறையுடன் (Industry) தொடர்புபட்டதாகவும் இருந்தது. 1950 களில் தொழில்துறை வளர்ச்சியை நாடிநின்ற ஒரு உள்ளூர் முதலாளி வர்க்கமும் அரசியலில் துடிதுடிப்பான பங்கு வகித்தது.[26] இதன் காரணத்தால் சிறீலங்காத் தேசியவாதம் துரிதமாக வளரத் தொடங்கியது. பல்வேறு அகநிலை, புறநிலைக் காரணங்களால், இது தேசிய மேலாதிக்கவாதம் என்ற நிலையையும் அடைந்தது.

ஆனால் தமிழீழம் ஒரு றயத்வாரி நிலஉடைமை அமைப்பைக் கொண்டிருந்ததன் (மட்டக்களப்பு சற்று வித்தியாசமானது) காரணத்தாலும், மிக மலிவான அடிமைகளை வழங்கும் சாதி அமைப்பு முறையைக் கொண்டிருந்ததாலும், தொழில் துறை தொழிலாளி வர்க்கமோ, தரகு முதலாளிவர்க்கமோ இங்கு தோற்றம் பெறவில்லை. நெஞ்சில் நரம்பில்லாத, தன்மானமில்லாத, ஒட்டுண்ணித் தன்மை பெற்ற வியாபாரிகளும் (வர்த்தக முதலாளிகள் என்றும் கூறமுடியாது); தொடை நடுங்கி அரச அதிகார வர்க்கமுமே புதிதாகத் தோன்றிய வர்க்கங்களாகும். இவர்கள்தான் தமிழீழத் தேசிய அரசியலைத். தீர்மானிப்பவர்களாகஇருந்து வந்தார்கள். முதுகெலும்பில்லாத இவ்வர்க்கங்களுக்கு அண்டிப் பிழைக்கத் தெரியுமே தவிர, போர்க்குணமிக்க அரசியலை உருவாக்க முடியாதல்லவா?

ஒடுக்கப்பட்ட சாதியினரின் உழைப்பாளர்களும், ஒரு சிறு அளவு மத்தியதரவர்க்கத்தினரும் இடதுசாரிக் கட்சிகளின் கீழ் போர்க்குணம் மிக்கவர்களாகச் செயற்பட்டார்கள்.[27] ஆனால் இடதுசாரிக்கட்சிகள் சிங்களத் தேசிய மேலாதிக்கவாதத்திடம் மண்டியிட்டுச் சரணடைந்ததன் காரணத்தால், இச்சக்தியும் வீண்விரயமானது.

1960 களின் பின் விவசாயத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணத்தால் உப — உணவுப் பயிர்ச் செய்கையிலும், நெல் விவசாயத்திலும் புதிய பணக்கார விவசாய வர்க்கம் ஒன்று தோன்றியது. இவ்வர்க்கம் உள்ளீடுகளுக்கும், விற்பனவுக்கும் கொழும்புச் சந்தையிலேயே தங்கி இருந்தது. இதனால் சிங்களத் தேசியத் தலைவர்களுக்கு மிளகாய் மாலை போடுவதிலும், வெங்காயம் பரிசளிப்பதிலும் அக்கறை காட்டினார்களே தவிர, தமிழீழத் தேசியவாதத்தை நாடவில்லை: தேசிய உணர்வு பெற்ற வர்க்கமாக இவர்கள் வளர்ச்சி பெறவில்லை.

தேசியவாத போர்க்குணமிக்க வர்க்கம் ஒன்று இன்மைதான், தமிழீழத்தேசியவாதம் காலம்பிந்திக்கனிந்ததற்கான காரணமாகும். யாழ்ப்பாணத்தில் பலவர்க்கங்களைச் சேர்ந்த இளைஞர்களும், தென்தமிழீழத்திலும் வன்னியிலும் வாழும் விவசாயிகளுமே, இன்று தமிழீழத் தேசியவாதத்தின் முன்னணிச் சமூகத்தட்டினராக (வர்க்கங்கள் அல்ல) உள்ளனர் இதனால்தான் தமிழீழத் தேசியவாதம், முற்போக்குத் தன்மையும் போர்க்குணமும் பெற்றதாகத் திகழ்கின்றது.

ஓர் நாட்டின் ஈர் தேசிய வாதங்கள் என்ற எனது கட்டுரையில் ஒரு நீண்டகால வரலாற்றைக் கோட்படுப்புச்செய்ய (Theoratize) முயற்சித்துள்ளேன். இதற்காக வரலாற்று நிகழ்வுகள் குறித்துக் காட்டப்பட்டுள்ளதே அல்லாமல் இந் நிகழ்வுகளின் விவரங்கள் தவிர்க்கப்பட்டுள்ளது. வரலாற்று நிகழ்வுகளுடன் பரிச்சயமில்லாத வாசகர்களுக்கு இவ் விவரணங்களைப் பின்னிணைப்பாகத் தரலாம் என்றிருந்தேன். ஆனால், தவிர்க்க முடியாத சில காரணங்களால் அவ்விதம் செய்ய முடியாது போய்விட்டது என்பதை வருத்தத்துடன் அறியத்தருகிறேன்.

— அ. கௌரிகாந்தன்

"பல்லினத் தேசியவாதத்தைப் பிரதேசத் தேசியவாதம் (Territorial Nationalism) என்றும், அரச மத்தியத் தேசியவாதம் (State Centric Nationalism) என்றும் அழைப்பதுண்டு. இவற்றுள் அரசமத்தியத் தேசியவாதமென்ற பதம் தற்போது முக்கியத்துவம் பெற்றுவருகிறது.

பல்லினங்களுள்ள ஒரு நாட்டில் அரசு என்பது மையக்கருத்தாக அமைய, அதனைப் பொதுமையாகக் கொண்டு தேசியவாதம் வளர்வதுண்டு. அல்லது அரச மத்தியத் தேசியவாதம் தோல்வி காண (இனங்களுக்கிடையிற் பாரபட்சம் எழும்போது) தேசிய இனப்பிரச்சினை உருப்பெற்று தேசிய இனம் சார்ந்த தேசியவாதம் வளர்வதுண்டு. எவ்வாறாயினும் புள்ளிவிபர ரீதியாக நோக்கும்போது பல்லினத் தேசியவாதம் ஒரு முக்கிய அம்சமாக விளங்குகின்றதென்பதும், அத்தேசியவாதம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றதென்பதும் கவனிக்கத்தக்கது.

தேசியவாதம் ஒரு வாழ்க்கை முறைமை (System) ஆகவும், சர்வதேச ஒழுங்கமைப்பாகவும் விளங்குகின்றது. தனி மனிதன் தொடக்கம், ஐக்கிய நாடுகள்சபை ஈறான சர்வதேச ஸ்தாபனங்கள் வரை, தேசியவாதமென்பது ஓர் ஒழுங்கமைப்பாக, ஒரு முறைமையாகக் காணப்படுகின்றது. தனிமனிதன் சிறுதேசிய இனமாகவோ (National Minority) அன்றேல் தேசிய இனமாகவோ (Nationality) அமைய, தேசிய இனம் தேசிய அரசாகவோ (Nation State) அல்லது பல்தேசிய இனம் (Multi Nationalities) பல்தேசிய இன அரசாகவோ (Multi Nation - State) அமைய, அரசுகள் சர்வதேச ஸ்தாபனங்களாக அமைய உலகம் ஓர் ஒழுங்கமைப்பைப் பெற்றுள்ளது.

தேசியவாதம் தேசங்களின் சுயநிர்ணய உரிமை (Right of Self - Determination of Nations) என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றது. இந்த உரிமையின் அடிப்படையிற்றான் அரசுகளும், தேசிய இனங்களும் ஒழுங்கமைக்கப்பட வேண்டுமென்பது பொதுவிதி. இந்த விதி மீறப்படும் போது இவ்வொழுங்கமைப்பும் மீறப்படுகின்றது. அரசுகளுக்கிடையேயான ஒழுங்கமைப்பு (நாடுகளின் சுயநிர்ணய உரிமை) மீறப்படும் போது அது நாடுகளுக்கிடையேயான பிரச்சினையாகவும், பல்தேசிய இன அரசுக்குள் தேசிய இன ஒழுங்கமைப்பு (தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை) மீறப்படும்போது அது தேசிய இனப் பிரச்சினையாகவும் உருவெடுக்கிறது''.

— மு. திருநாவுக்கரசு

('இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள்' என்ற நூலில்,)

விபுலாநந்த அடிகளார்

(நாடு - மக்கள் - மொழி - கல்வி - பண்பாடு பற்றிய நோக்கு)

கலாநிதி இ. பாலசுந்தரம்
தமிழ்த்துறைத் தலைவர்,
யாழ். பல்கலைக்கழகம்.

தென் தமிழீழத்தின் ஒளி விளக்கெனவும், ஈழத்தின் அறிவுச் சுடரெனவும் திகழ்ந்த விபுலாநந்த அடிகளார் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்னும் உயரிய கருத்தில் ஊறித் திளைத்தவர். நாட்டுக்கும் மக்களுக்கும் பணி செய்தலையே குறிக்கோளாகக் கொண்டு தமிழ் மொழிக்கும், தமிழர்தம் மேம்பாட்டிற்கும் அவர் ஆற்றிய பணிகள் ஒப்புநோக்கில் உயர்ந்தவை; சிறந்தவை.

இளைஞர்கள், பொதுமக்கள், அறிஞர்கள் ஆகிய அனைவரும் செவிமடுத்து ஏற்கத்தக்க புரட்சிகரமான சமூக சீர்திருத்தக் கருத்துக்களைச் சொற்பொழிவுகளிலும் எழுத்துக்களிலும் எடுத்துக் கூறி, மக்களிடையே எழுச்சியையூட்டிய சிறந்த கருத்தாளர். சாதியொழிப்பு, சமபந்திப் போராட்டம், கல்விச் சீர்திருத்தம், தாய்மொழிவழிக் கல்வி, அநாதைகள் பேணல் என்ற எண்ணக் கருத்துக்களின் அடிப்படையிற் செயற்பட்ட செயல் வீரர். நாட்டுப்பற்று, சமூகத்தொண்டு மாநிலம் கடந்த சேவை, அறிவுத் தேடல், பெண்கல்வி, விடுதலையுணர்வு, தமிழ்மொழிப் பற்று முதலிய எண்ணங்களோடு செயல் வீரங்கொண்டவர் விபுலாநந்தர்.

அடிகளார் இந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்த காலத்திலே தமிழ் மொழிக்கும் தமிழர் பண்பாட்டுக்கும் ஆற்றிய பணிகள் அளப்பரியன. அடிகளார் முன்னெடுத்துச் சென்ற பணிகளும், செம்மை சான்ற கருத்துக்களும் இன்றைய சமூகத்திற்கு வழிகாட்டியாகவும், இளைஞர்களைச் சிந்திக்கத் தூண்டுவனவாகவும் இருப்பதனாலேயே அடிகளார் பிறந்த தினத்தையொட்டி நூற்றாண்டு விழாக்காணும் பெருமை பெறலானார்.

போர்ப் பயிற்சியும் நாட்டுப் பற்றும்

ஒவ்வொருவரும் தாய் நாட்டுப் பற்றும், தம் மண்ணுக்காகத் தற்கொடை செய்யத் துணிவும் கொண்டவராக இருக்க வேண்டுமென்பதையும், தாய்நாட்டைக் காக்கும் போர் எனில் துணிச்சலுடன் போர்க்களம் செல்லுதல் தலையான கடன் என்பதையும், தம் வாழ்நாளில் செய்து காட்டிய செயல் மறவன் விபுலாநந்த அடிகள். ஈழத் தமிழர் வராற்றிலிடம் பெறும் எப் பெரியாரும் இப் பண்பில் விபுலாநந்த அடிகளாருக்கு நிகரற்றவராவர். ஆங்கிலேய ஆட்சியாளரிடமிருந்து இன்ப நுகர்ச்சிகளையும், சலுகைகளையும், பட்டம் பதவிகளையும், பாராளுமன்ற இருக்கைகளையும் பெற்று ஈழத்தமிழர் வரலாற்றில் போலித்தனம் புரிந்த பல அறிஞர்களையும். அரசியல்வாதிகளையும் காண்கின்றோம். ஆனால் தகுதிகள் இருந்தும் அத்தகு போலிப் புகழுக்கு ஆட்பட்டவரல்லர் விபுலாநந்த அடிகளார்.

அவர் ஈழ மண்ணை விரும்பியவர். அதன் தன்னாட்சியை நாடியவர்.

முதலாம் உலகப்போர் நிகழ்ந்த காலத்தில் பண்டிதர் மயில்வாகனன் எனப் பெயர் பெற்றிருந்த அடிகளார், இலங்கைத் தரைப்படையிற் சேர்ந்து போர்ப்பயிற்சி பெற்று, கடற்கரையைக்காவல் புரிந்து, தமது நாட்டிற்குள் பகைவர் புகுந்திடா வண்ணம் பணி புரிந்துள்ளார்.

ஆங்கில மேலாதிக்கத்திற் கெதிரான கோட்பாடு அடிளாரிடம் ஊறிக்கிடந்தது. ஆட்சியாளரின் மதத் திணிப்பு, மதவழிக் கல்வி என்பவற்றுக்கெதிராக தாய் நாட்டுக்குச் சுதந்திரமான கல்வி நிறுவனங்களை அடிகளார் ஏற்படுத்திக் கொடுத்தார். ஆனால் அவரிடம் மத வேறுபாட்டுக் காழ்ப்புணர்வு இருக்கவில்லை. தாய்நாட்டு மக்களின் மதவழி நின்றே பணி புரிய முற்பட்டார். அடிப்படையில் அவரிடம் பிரித்தானிய மேலாதிக்க வெறுப்புணர்வு அமைந்திருந்தமை அவரது பல்வேறுபட்ட செயற்பாடுகளில் காணப்படுவதாயிற்று.

1933 ஆம் ஆண்டில் அடிகளார் அண்ணாமலையில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த போது, அங்கு பட்டமளிப்புவிழா மிகச் சிறப்பாக நடைபெறுவதற்குரிய ஒழுங்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பட்டமளிப்பு விழா மண்டபத்திலும் பேராசிரியர்களின் இல்லங்களிலும் அடிமைத்தனத்தின் சின்னமாகவும், ஆங்கிலேய மேலாதிக்கத்தின் வெளிப்பாடாகவும், ஆங்கிலேய 'ஜூனியன் ஜாக்' கொடிகள் பறக்க விடபட்டிருந்தன. ஆனால் பிறநாட்டு மேலாதிக்க வெறுப்பும், தாய்நாட்டுப் பற்றும் கொண்டிருந்த விபுலாநந்த அடிகளார் தங்கியிருந்த இல்லத்தில் மட்டும் இந்திய தேசியக் காங்கிரஸின் மூவர்ணக் கொடியை மிக எடுப்பாகப் பறக்கவிட்டிருந்தார் அக்கொடியை அகற்றி விட்டு ஆங்கிலேயரது கொடியை ஏற்றுவதற்கு அலுவலர்கள் முற்பட்ட போதிலும், அடிகளார் அதனைத் துணிவோடு தடுத்தார். இச் செயல் 'அடிவருடி' களுக்கு அடிகொடுப்பதாகவும், நாட்டு மக்களுக்கு நல்லறிவும், நாட்டுப் பற்றும் ஊட்டுவதாகவும் அமைவதாயிற்று.

அடிகளார் காலத்தில் திருக்கோணமலையில் பிரித்தானிய ''சாம்ராச்சிய தினம்'' ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகக் கொண்டாடப்படுவது வழக்கம். கடற்படைத் தலைவர், அரசாங்க அதிபர், உயர்தர அதிகாரிகள் எல்லோரும் அதில் பங்குகொள்வர். வெள்ளையர்கள் லண்டன் மாநகரில் எப்படிக் கொண்டாடுவார்களோ அதேமுறையில், திருக்கோணமலையில் நடப்பது வழக்கம். கொடி வணக்கம் (பிரித்தானியக் கொடி), பாண்டு வாத்தியம், கடற்படை பொலிஸ், பாடசாலை மாணவர்களின் அணிவகுப்பு விளையாட்டுப் போட்டிகள் அதில் இடம்பெறும். விளையாட்டுக்கான பரிசில்களை ஏதோ ஒரு ஆங்கிலப் பாடசாலையே தட்டிக் கொள்ளும். அவ்வெற்றிபெற்ற மாணவர்கள் பாண்டு வாத்தியத்துடன் ஊர்வலஞ் சென்று மக்களின் நன் மதிப்பைப்பெறுவது வழக்கம். தாங்கள் வெற்றியீட்டுவோம் என்ற திட நம்பிக்கை ஆங்கிலப் பாடசாலைகளுக்கு இருந்தபடியால், அவர்கள் விளையாட்டு மைதானத்துக்கு வரும் பொழுது பாண்டு வாத்தியம் முழங்க, பட்டாளத்தார் போன்று உடையணிந்து பவனி வருவர். இந்துக் கல்லூரி மாணவரில் தேசிய உணர்ச்சி எவ்வளவு வேரூன்றியிருக்கிறது என்பதை மதிப்பிடுவதற்கு இந்த வாய்ப்பை அடிகளார் பயன்படுத்திக் கொண்டார். ஆசிரியர் மாணவர்களை அழைத்து அவர்களுக்குப் பின்வருமாறு அறிவுரை வழங்கினார்;

'' நாம் இதுவரை மூன்றாந்தர மாணவர்களாயிருந்து வந்தோம். இனிமேல் நாம் இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். ஆசிரியரும் மாணவரும் இடையறா முயற்செய்து விளையாட்டுப் போட்டிகளில் பெருமளவில் பரிசில்களைப் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள். இரண்டாவதாக, நாம் அனைவரும் தேசிய உடை தரித்தல் வேண்டும். அன்று மட்டும் வேஷ்டியும் பெனியனும், போதுமானது. அவை தூய வெள்ளை நிறமாக இருத்தல் வேண்டும். பாடசாலையிலிருந்து ஒருவர் பின் ஒருவராக அணிவகுத்து, அமைதியாக மெல்ல நடந்து முற்ற வெளியை அடைய மேண்டும். விளையாட்டுப் போட்டிகளில் எத்தகைய தோல்வியோ வெற்றியோ உங்களுக்குக் கிடைக்கலாம். அதைத் தாழ்ந்த மனப்பான்மையுடன் அமைதியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். பிற பாடசாலை மாணவர்களின் தோல்விகள் கண்டு அவர்களை இகழ்ந்து பேசலாகாது. விழா நிர்வாக அதிகாரிகளின் கட்டளைக்கு அமைந்து நடப்பதே சாலச் சிறந்ததாகும். நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன். இவற்றைச் செயற்படுத்துவது உங்களையும் உங்களை வழிநடத்தும் ஆசிரியர்களையும் பொறுத்தது'' என்று கூறிமுடித்தார்.

அவ் விழா தொடங்கியது. பாண்டு வாத்தியம் முழங்கியவாறு கடற்படையினரும் ஏனைய ஆங்கிலப் பாடசாலையினரும், வந்துவிட்டனர். கடைசியாக இந்துக்கல்லூரி மாணவர்கள் வெள்ளைக் கொக்குகள் பவனி வருவது போல் வந்து அரங்கை அடைந்தனர். வேடிக்கை பார்க்க வந்தவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர். ஆட்சியாளரின் முகங்கள் வெளுத்தன. என்றுமில்லாக் காட்சி எங்கிருந்து வந்ததெனத்

திகைத்தனர். அதுவே இந்துக் கல்லூரி ஈட்டிய முதல் வெற்றியாகும். விளையாட்டுக்கள் ஆரம்பமானதும் என்றும் காணாத உத்வேகத்தோடு முயன்று, ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒவ்வொரு பரிசாகுதல் பெற்றனர். பரிசளிப்பு விழா தொடங்கியது.

இந்துக் கல்லூரியினது பெயர் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் வந்து கொண்டேயிருந்தது. பொதுமக்களின் கைதட்டலும், பெருமகிழ்வும் வானைப் பிளந்தது வெற்றி நமக்கேயென்று பழைய நம்பிக்கையுடன் பாண்டு வாத்தியத்துடன் வந்தவர்கள், அமைதியாகப் பாடசாலைக்குத் திரும்பினர். இச்செயல்கள் யாவும் விபுலாநந்தரின் செயல் திறமைக்கும், மாணவரை நாட்டுப்பற்றுடையவர்களாக மாற்றும் நடைமுறைகளுக்கும் சான்றுகளாகும்.

தமிழர்தம் பண்டைய மேம்பாட்டினையும், இன்றைய இழிநிலையையும் உணர்ந்த அடிகளார் வருமாறு கூறுதல் ஈண்டும் பொருத்தமானதாகும்.

"நம்முடைய சிறுமைக்கெல்லாம் காரணமாயிருக்கின்ற பொறாமையையும், பிரிவினையையும் ஒருங்கே களைந்து விட்டு உடல், பொருள், ஆவி மூன்றையும் தேச சேவைக்கே ஒப்புக்கொடுத்து நமது தேசத்தையும், மொழியையும், பெருக்கமுறப் பண்ணுவோமாயின் நாமும் பெருமையடைவோம்; நம் முன்னோரும் பெருமையடைவர்."

தாய்நாட்டுப் பற்றை வளர்ப்பதிலும், தேசிய உணர்வைப் பெருக்குவதிலும் அடிகளார் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். 1928 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாணவர் காங்கிரஸ் கூட்டத்தின் தலைமையுரையிலே வருமாறு குறிப்பிடுகின்றார்;

"...... பல தரப்பட்ட சமயவாதிகளும், சமூக நிலையங்களும், தமது தேவையற்ற வேற்றுமைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, நாட்டின் முன்னேற்றத்தின் முக்கியத்துவத்தில் கவனம் செலுத்துவது அவைதம் கடமையாகும். குறிப்பாகத் தமிழரும் சிங்களவரும், தமது பொதுப் பண்பாட்டையும் பொதுநலத்தையும் கவனத்திற் கொண்டு தம் தாய் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டும்."

வீரமும் இலக்கியமும்

"பழைய இலக்கியங்கள் யாவும் அரும்பெருஞ் செல்வங்கள். ஒரு காலம் வீர வாழ்க்கையை நடாத்திய ஆடவர், மகளிர் ஆகியோரின் அடிச்சுவட்டினை நாம் பின்பற்றுவதற்கு இவை துணைபுரிவன என்கிறார் விபுலாநந்தர். வீரத் துறவி விவேகானந்தரின் கொள்கையில் நாட்டம் கொண்ட அடிகளார், அவரது கருத்துக்களையே தம் மதம் நிலைநாட்ட எடுத்தாண்டதுமுண்டு. எடுத்துக் காட்டாக ஒரு பந்தி:

"எழுந்திருங்கள்! சோம்பலையும், மூடத்தனத்தையும் வீசியெறிந்து விட்டு வெளியே உலாவி, உலகத்தின் ஏனைய பாகங்களிலுள்ள மாந்தர் முன்னேற்றம் அடைந்து கொண்டு போவதைப் பாருங்கள். எத்தனை நாளைக்கு மூலையில் ஒதுங்கிக் கிடக்கப் போகிறீர்கள்? நீங்கள் சுத்த வீரர்களின் வழிப் பிறந்தவர்கள் என்பதை மறந்துவிட்டீர்களா? சூரனுக்கு உயிர் துரும்பு, தேச முன்னேற்றத்துக்காக உயிரையும், கொடுக்கத் தயாராயிருக்கும் வாலிபர்கள் ஆயிரக்கணக்கான பேர் முன்வர வேண்டும். மேனிலை அடைவதற்கு முயல்வோம். அம்முயற்சியில் உயிர் போனாலும் போகட்டும்".

மொழிப் பற்றும் தன்மான உணர்வும்

அடிகளாரின் எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் மிகுந்து காணப்பட்டன. அனைவரும் நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும் உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதோடு அதற்குரிய வழி நெறிகளையும், குறிப்பிட்டுள்ளார். மனிதன் ஒவ்வொருவருக்கும் தம் தேசத்திலே பற்று இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தன் நாட்டைப் பற்றிப் பெருமையுடன் பேச வேண்டும். நாட்டுப் பற்று வளர மொழிப் பற்றும் கூடவே வளரும் என்பதை அடிகள் வற்புறுத்தியுள்ளார்.

ஆங்கிலம் - தமிழ் இரு மொழிகளிலும் புலமை பெற்றிருந்த அடிகளார், 1915 இல் கொழும்பு அரசினர் பொறியியற் கல்லூரியிலே அறிவியல் பயின்று தேர்ச்சி பெற்றார். 1916 இல் அறிவியல் டிப்ளோமாப் பட்டம் பெற்றார். இக்காலப் பகுதியில் ஆங்கில, விஞ்ஞான நூல்களையெல்லாம் துருவித்துருவிப் படித்துக்கொண்டிருந்தவரெனினும், அவர் தமிழ் மொழியினைச் சிறிதும் மறந்தாரல்லர். அரச பதவிகளையே பெரிதெனக் கருதி ஆங்கில மோகத்தில் மூழ்கித், தமிழ் மொழியைப் பெரிதாக மக்கள் அக்கறைப் படுத்தாது விட்ட காலத்தில் - எவரும் தமிழ்கற்று, தமிழ்த் தேர்வுகளை விரும்பாத அக் காலத்தில்- அடிகளார் மதுரைத் தமிழ்ச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட தமிழ்த் தேர்வை இலங்கையிலிருந்தே எழுதி, 1916 இல் அதில் தேர்ச்சியும் பெற்றார் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

தமிழன், தமிழ் அறிஞர் எங்கும் எப்போதும், தலைநிமிர்ந்து தன்மானத்துடன் நிற்கவேண்டும்

என்பதே அடிகளார் கண்ட கனவாகும். அடிகளாரின் நண்பர்களில் ஒருவராகிய முது தமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் அடிகளார் வருமாறு குறிப்பிடுதல் நோக்கத்தக்கது.

''இமயத்துக்கு வந்த என்னையும் தமிழ்த் தொண்டு விடேனென்று பற்றிக் கொண்டிருக்கிறது. நீங்கள் எந்நாளும் தமிழ்த்தொண்டு புரிய வேண்டும். கூழுணவுதான் கிடைத்தாலும், தமிழ்த்தாயின் அருளெனக் கருதி ஏற்றுக் கொண்டு விரிந்த முறையில் தொண்டாற்ற வேண்டும். எனது வாழ்க்கையிலே பொருள் வருவாய் பெரிதாகவிருந்த உயர்ந்த உத்தியோகங்கள் பலவற்றை ஏற்று நடத்தினேன். ஒன்றுக்காவது கேள்விக் கடிதமோ பிறருடைய நற்சான்றோ நான் விடுத்தது கிடையாது. தொண்டு புரிவதையே குறிக்கோளாகக் கொண்டு இரவு, பகல் ஓய்வற்று கல்வியைப் பெருக்கிப் பொதுக் கழகங்களில் விரிவுரையாற்றுதல், நூலெழுதுதல், திங்கள் வெளியீடுகளில் ஆராய்ச்சி முடிவுகளை வெளியீடுதல் என்று இத்தகைய தமிழ்த்தொண்டுகளைச் செய்து வந்தால், வேண்டிய உயரிடமெல்லாம் தானாகவே வரும். தமிழ்ப் புலவராகிய நாம் கம்பனுடைய வழித் தோன்றல்களென்பதையறிய வேண்டும். அவனைப் போல் நாமும் மன்னன் முன்னிலையிலே ஏமாப்போடு நின்று.

''மன்னவனும் நீயோ வளநாடு முன்னதோ
உன்னையறிந்தோ தமிழை ஓதினேன்''

என்று துணிவாகச் சொல்ல வேண்டும். ஈழ நாட்டில் உயர்ந்த தமிழறிவு குறைவெய்தி வருகிறது.

நானொருவன் தாய்நாட்டிலும் சிறிது பெயர் பரவத் தொண்டாற்றிக் கொண்டு வருவது போதாது. ஏதாவது வாழ்க்கைக்கு சிறிது ஊதியம் தரும் தொழிலைப் பார்த்துக்கொண்டு உயர்ந்த தமிழ்த் தொண்டுக்குத் தகுதியெய்தும் வண்ணம் நூலாராய்வதிலும், நூலெழுதுவதிலும், பொழுது கழிக்கும்படி பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.''

இக் கடிதம் நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும், தமிழனின் தன்மான உணர்வும், நம்மால் உணரப்பட வேண்டியதன் அவசியத்தையும், உயர்பதவிகளில் அமர்ந்திருக்கும் பலரைத் தம்மக்களையும் தம் மண்ணையும் பற்றி எண்ணத் தூண்டுவதாகவும் அமைதல் குறிப்பிடத்தக்கது.

மாநில எல்லை கடந்த பணி

தென் தமிழீழம் அடிகளாரின் பிறப்பிடமாக இருந்தபோதிலும், அப்பெருந்தகையின் சீரிய பணிகள் அம்மாநிலத்தில் மட்டும் அமைந்துவிடாது தமிழீழம் முழுவதையும் தழுவியனவாய், தமிழ் நாட்டிலும் பரந்ததாய், இமயம்வரை விரிந்ததாய் அமைவதாயின. மட்டக்களப்புச் சிவானந்த வித்தியாலயம், திருக்கோணமலை இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயம், யாழ்ப்பாண வாலிபர் சங்கம், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம், மத்திய மாகாண சைவ மகாசபை, லுணுகலை நாகலிங்கம் வித்தியாசாலை, இலங்கைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், இராமகிருஷ்ண மிஷன், சிதம்பரம் திருவேட்களச்சேரி, இமயமலைச்சாரலிலுள்ள மாயாவதி ஆச்சிரமம் முதலியன அடிகளாரின் உயரிய பணிகளுடன் நெருங்கிய தொடர்புடையனவாகவும், அவரது பரந்த நோக்குக்கும் சேவைக்கும் சான்று கூறுவனவாகவும் அமைகின்றன.

இப்பின்னணியில் நாவலர் கொண்டிருந்த நிறுவன சார்பான தொடர்புகளை ஒப்பிட்டு நோக்கும்போது, நாவலருக்கு இத்தகைய பரந்த வாய்ப்புக்கள் கிடைக்கவில்லையென்பதை முதலிற் குறிப்பிட்டே ஆகவேண்டும். யாழ்ப்பாணத்துக்கு வெளியே நாவலரது பணிகள் தமிழகத்து ஆதீனங்களுடன் மட்டுமே முடங்கிக் கொண்டன. சைவசித்தாந்த வரம்புக்குட்பட்டுப் பணி புரிந்த நாவலருக்கு எல்லை விரிவடையக் கூடிய வாய்ப்பு இல்லாது போனமை வியப்புக்குரியது அன்று. விபுலாநந்த அடிகள் சைவ சித்தாந்தத்திலும் துறைபோனவர் என்பதற்கு, அவரது 'நடராஜ தாண்டவம்' என்ற சிறு நூலே சான்றாகும். சைவ சித்தாந்த சாகரம் எனப் போற்றப்பட்ட திருவிளங்கம் என்பார் மீது பற்றும் பெருமதிப்பும் கொண்டிருந்த அடிகளார், சைவ சித்தாந்த நெறிமுறைகளை நன்கு உணர்ந்திருந்தார். ஆனால் வேதாந்த வழி நின்று உண்மைகளைத் துறைபோக உணர்ந்தமையினாலேயே அடிகளார் இமயம்வரை சென்று பணிபுரியக் கூடிய வாய்ப்பும் பேறும் பெற்றார்.

ஆய்விற் சிறந்து விளங்கிய ரா. இராகவையங்கார், டாக்டர் உ. வே. சாமிநாதஐயர் முதலியோர் அடிகளாரைச் சிறந்த மகாவித்துவானாக மதித்துவந்தனர். திருவாளர்கள் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சேதுப்பிள்ளை, சோமசுந்தர பாரதியார், கதிரேசன் செட்டியார், கலியாண சுந்தர முதலியார், மறைமலை அடிகள் ஆகியோரும் அடிகளைப் பேரறிஞராகவே மதிப்பளித்து வந்தனர். சென்னை அரசினரும் இவர் பெருமையை உணர்ந்து இவரின் உதவியைப் பன்முறை பெற்றதுண்டு. தமிழ்க் கலைச் சொற்களைத் தொகுக்கும்படி சென்னை அரசினர்

நியமித்த சபைக்கும், இவரே தலைவராக இருந்து செயற்பட்டார். பல்கலைக்கழகங்களில் கல்வித்திட்டங்கள் புதிதாகச் சமைக்கப்படும்பொழுதும் மாற்றங்கள் செய்யப்படும்பொழுதும் இவரின் துணையைப் பெறுவது வழக்கமாக இருந்தது.

இவரின் ஆற்றலையுணர்ந்த மயிலாப்பூர் இராமகிருஷ்ண சங்கம் ''வேதாந்த கேசரி'', ''இராமகிருஷ்ண விஜயம்'' என்னும் மாத இதழ்கட்கும், பின்னர் ''பிரபுத்த பாரதம்'' என்னும் ஆங்கில இதழுக்கும் இவரை ஆசிரியராக நியமித்தது. இவரின் தலைமையில் இப்பத்திரிகைகள் நன்கு வளர்ச்சியடைந்தன. அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இருந்த காலத்தில் தமிழ்ப் பொழில், செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி போன்ற சஞ்சிகைகளில் கட்டுரை எழுதி வந்தார்கள். தர்க்கம், சமயம், சாஸ்திரம், இசை, மொழியாராய்ச்சி, அறிவியல் முதலிய பல்வேறு துறைகளிலும் இவரது பணி விரிந்து சென்றது. ''ஈழமுதற் பணி இமயம்வரைக் கொடிகட்டும் இசைத்தமிழன்'' என்று புலவர் மணியும், 'கலியுக அகத்தியர்', 'தமிழ் காத்த மறைமுனி', 'புதுமைக் கபிலன்' என்றெல்லாம் பிறரும் போற்றும் அடிகளார், பலதுறைகளிலும் சிறந்து விளங்கிய முதற்றமிழ்ப் பேராசிரியராவார்.

பண்டிதர்களால் வெறுத்தொதுக்கப்பட்ட பாரதியாரை 'புரட்சிக்கவி', 'தேசியக்கவி' என்ற நிலைக்கு உயர்த்திய பெருமை அடிகளாருக்கேயுரியது. அடிகளார் பழந்தமிழ் இலக்கியத்தில் எவ்வளவுக்கு ஆழ்ந்த அறிவு பெற்றிருந்தாரோ அதேயளவுக்குப் புதுமை இலக்கியத்திலும் அறிவுபெற்றிருந்தார்.

சமூக சேவை

சுகாதார முறைகளைக் கைப்பற்றியொழுகாமையினாலே நோயுண்டாகிறது. சுத்தக்காற்றும், சூரிய வெளிச்சமும், நல்ல நீரும், தூய உணவுமே உண்மை மருத்துவர்கள். கிராமங்கிராமமாகச் சென்று நாம் இவ்வுண்மைகளை ஏழை மக்களுக்குப் போதிக்க வேண்டும். கல்விகற்றுத்தேறினோர் வேலையில்லை என்று திண்டாட வேண்டியதில்லை. மக்களுக்குத் தொண்டு புரிகின்ற பெரிய வேலை அறிவுடையோர் அனைவருக்கும் உரியதாக அமைந்து கிடக்கின்றது. ஆடம்பரம் வேண்டாம், உயர்ந்த சம்பளம் வேண்டாம், தொண்டு புரிதலே வேண்டும் எனத் தூய சிந்தையோடு மக்களுடைய நலத்துக்காக உழைப்போர் தமது உணவுக்கும், உடைக்கும் திண்டாட வேண்டியதில்லை. உண்மையறிவு நமக்கு வலிமையைத் தருவது.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் தலைமை ஆசிரியராக இருந்தகாலத்தில் மயில்வாகனனார் மாணவர்களை நோக்கி ''சிவபெருமான் காட்சி தந்து உங்களுக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்டால் நீங்கள் என்னகேட்பீர்கள்?'' என்று வினவியபோது, ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகப் பதில் அளித்தார்கள். சுவாமிகளோ ''நானென்றால் முத்தி தரும்படி கேட்கமாட்டேன். முத்தி என்னளவில் நின்றுவிடும் அதிலும் பார்க்க எல்லோரும் இன்புறும்படி சேவை செய்வதானால் அதிலுள்ள இன்பமோ ஒப்பற்றது. ஆனபடியால் சேவைசெய்ய வரம் தா என்றே கேட்பேன்'' என்றார்கள். தம் விருப்பப்படி மயில்வாகனனார் சுவாமியான பின்பு, தாம் இயல்பாக நெடுநாளாகவே விரும்பிய பெருஞ்சேவையிலே தான் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். பிறருக்குச் சேவை செய்யும்படி அறிவுறுத்தும் போக்கு, மக்களை நெறிப்படுத்தும் செயலாகவே அமைகின்றது. இத்தகு சேவை மனப்பான்மை அடிகளாரிடம் அவர் இளைஞனாக இருக்கும் போதே இருந்தமை உன்னிப்பாக நோக்கத்தக்கதாகும்.

சமூக சேவையில் இயல்பாகவே நாட்டம் கொண்டிருந்த அடிகளாருக்குப் பாரதியின் வாழ்க்கையும் சமூகப்பணியில் தீவிரமாக ஈடுபடுவதற்குத் தூண்டுதலாக இருந்தது. பாரதியார் தம் 22ஆம் வயதில் சென்னையில் வசித்தபோது பெண்கல்வி தடுக்கப்பட்டமை, சமத்துவமின்மை முதலிய சமூக ஒடுக்கு முறைகளுக்கு எதிராகக் குரல்கொடுத்தார். சமூக சீர்திருத்தவாதிகளை ஒன்றுகூட்டி கடற்கரையில் மகாநாடுகள் நடத்தினார். சமபந்தி போசனம் நடத்தினார். இது தொடர்பாக ''தீவிர சமூக சீர்திருத்தம்'' என்ற பத்திரிகையிலும் கட்டுரைகள் எழுதிவந்தார். இதே முறையில் அடிகளாரும் தீண்டாமை ஒழிப்பு பெண்கல்வி - சமபந்தி போசனம் - வறுமை ஒழிப்பு முதலிய முற்போக்கு விடயங்களில் மிகத் தீவிரமாக ஈடுபட்டார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த காலத்தில் அடிகளார், மாணவர்கள் நாட்டிற்கும் மொழிக்கும் எம்முறையிலே தொண்டு செய்ய வேண்டுமென்பதைப் பற்றி அடிக்கடி எடுத்துக் கூறுவதோடு அமையாமல், தாமும் சிறந்த தொண்டுகளைச் செய்துகாட்டினார்கள். ''தீண்டாமை'' என்னும் பேயினை நாம் நாட்டினின்றும் துரத்தல் வேண்டும் என்று, பலகாலும் சுவாமிகள் கூறுவதுண்டு. அடிகளாரின் துணையைக் கொண்டு, அண்ணாமலை நகருக்கு வடகிழக்குப் புறத்திலமைந்த திருவேட்களச்சேரியில் இராப் பாடசாலை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதிலே தீண்டத்தகாதோர் பலர் படித்துப் பயன் பெற்றனர். இப்பாடசாலையிலே படிப்பதற்குத் தேவையான புத்தகங்கள் போன்றவற்றை சுவாமிகளே வாங்கிக் கொடுத்தார்கள். அடிகளாரின் விருப்பப்படி அச்சேரியில்- 1933ஆம் ஆண்டில்- சுவாமி விவேகானந்தரின் திருநாள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சுவாமி விவேகானந்தரின் படம்

மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு ஊர்வலமாக வந்தபோது, அச்சேரியிலுள்ள ஒவ்வொரு குடிசையிலும் பூரண கும்பங்கள் வைக்கப்பட்டிருந்தன. குடிசையிலுள்ள மக்கள் அப்படத்திற்குத் தீபாராதனை செய்தார்கள். இங்ஙனமாகத், தீண்டப்படாத மக்களுக்குச் சுவாமிகள் செய்த தொண்டு அளப்பரியதாகும்.

இதனைப் பொறுக்காத உயர்சாதிக்காரர், அடிகளார் நன்னீர்க் கேணியில் நீர் எடுக்கக் கூடாது எனத் தடை விதித்தனர். அதனால் அடிகள் உவர் நீரையே பயன்படுத்தினார் என்பர். தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகளுக்குப், பல்கலைக் கழகத்தில் படித்த ''உயர் சாதியினர்'' எனக் கருதப்பட்ட பிராமண குல மாணவர்களையும் அழைத்துச் சென்றமையும் சுவாமியார் திறமையைக் காட்டுகிறது.

அடிகளார் அண்ணாமலையில் பேராசிரியராக இருந்த காலத்தில் அடிக்கடி சேரிகளுக்குச் சென்று, அவர்களது சமூக உயர்ச்சிக்கு வேண்டியன செய்வதும், அச்சேரிக் குழந்தைகளுக்குக் கையுறைகள் வழங்கி அவர்களை மகிழ்வித்து கல்வியில் நாட்டம் கொள்ளச்செய்வதும் அவரது வழக்கமாக இருந்தது என்கிறார், பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்.

தீண்டாமையையும் சமூக ஏற்றத் தாழ்வுகளையும் போக்கும் வகையில், தாம் கிழக்கிலங்கையில் நிறுவிய பாடசாலைகளில், அனைத்து நிலை மாணவர்களும் கல்விபயில சமவாய்ப்பளித்தார். தம் வறுமையினாலும் பொருளாதாரப் பின்னணியினாலும் குலம், சாதி நிலைமைகளினாலும் உயர் பள்ளிக்கூடங்களில் காலடி எடுத்து வைக்கமுடியாத மாணவர்களுக்கு சிவானந்தா வித்தியாலயம், சாரதா வித்தியாலயம் முதலிய கல்லூரிகளில் கற்க இடம் கொடுத்தார்.

1922ஆம் ஆண்டிலிருந்து தமிழகத்தோடு அடிகளாருக்குத் தொடர்புகள் இருந்து வந்தன. தமிழகத்தில் நிலைபெற்றிருந்த சாதிக் கொடுமைகளைக் கண்டு மனம் வருந்தினார். தம்மால் இயன்றவரை சாதி ஒழிப்பிலீடுபட்டார். சேரிகளுக்குச் சென்று பாடசாலைகள் அமைத்தார். ஏழை மாணவர்களுக்கு தம் செலவில் புத்தகங்களை வாங்கிக் கொடுத்து கல்வியில் ஊக்குவித்தார்.

வட இந்தியாவில் வீர விவேகானந்தரைப் போன்றும், தமிழகத்தில் மகாகவி பாரதியாரைப் போன்றும், கிழக்கிலங்கையிலே சுவாமி விபுலாநந்தர் சமூகப்பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார். விவேகானந்தர், அன்னை நிவேதிதா ஆகிய இருவரது அருட்டுணர்வினாலும் கவரப்பட்ட பாரதி தேசிய விடுதலைக் கவிஞரானார். அது போன்றே சுவாமி விபுலாநந்தர், தாம் பிறந்த ஊரிலே விவேகானந்தரின் சீடர்களில் ஒருவரான அவாமி அம்மையாரின் தரிசனம் பெற்றவர்; யாழ்ப்பாணத்தில் யோகர் சுவாமிகளின் தொடர்பு கொண்டவர்; இராமகிருஷ்ண மடத்து சிவானந்தரின் அருட் பார்வை பெற்றவர். இத்தகைய தொடர்புகள் சுவாமி விபுலாநந்தரைப் பெரும் சமூகத்தொண்டராக மாற்றின.

ஆறுமுகநாவலருடன் விபுலாநந்தரை ஒப்பிட்டுக் கூறுவது மரபாக இருந்து வருகின்றது. ஆனால் விபுலாநந்த அடிகளாரின் சமூகத்தொண்டைத் தனித்து நோக்கும்போது, அவை சிறிய வட்டத்தினுள் அமையாது மதம் கடந்து, சமூகம் கடந்து, மாநிலங்கள் கடந்து, இலங்கையையும் கடந்து பரந்து செல்வதைக் காணலாம். அவரது சமூகத் தொண்டு தமிழ் கூறு நல்லுலகெங்கும் பரந்து காணப்படுகிறது. இவர் ஈழத்திற்கு மட்டும் உரியவர் அல்லர். ஈழம், தமிழகம் என்ற வேறுபாடின்றி பொதுமையாளனாக விளங்குகிறார். என்கடன் பணி செய்து கிடப்பதே என்ற சமூக நோக்கே விபுலாநந்தரிடம் மேற்கிளம்புகின்றது.

அறிவுத் தேடல்

''பிறநாட்டு நல்லறிஞர் நூல்களெல்லாம் தமிழிற் பெயர்த்தல் வேண்டும்'' எனப் பாடிய பாரதியார் காலத்தில் வாழ்ந்து, அவரது மறைவுக்குப் பின்னர் பாரதியார் பாடல்களுக்குச் சமூகமதிப்பளித்தார். மேலை நாட்டவரது செல்வப் பெருக்கிற்குக் காரணம் என்ன? அதற்குரிய அரசியற் பின்னணி என்ன? பொருளாதார வளர்ச்சிக்குரிய காரணங்கள் எவை? என்பன பற்றியெல்லாம் ஆராய முற்பட்ட விபுலாநந்தரின் சிந்தனைகளே '' மேற்றிசைச் செல்வம் '', ''ஆங்கிலவாணி'' என்னும் இரு பெருங்கட்டுரைகளாகும். இவ்விரு கட்டுரைகளும் வாசிப்போரைத் தமிழ்மேல் ஆர்வம் கொள்ளத் தூண்டும் தன்மையன, அவற்றை விட்டுப் பண்டைய பெருமைகளையும், நடைமுறைகளையும் கூறி நம்முன்னோர் சிறப்புற்றிருந்தார் என வாளா புராணம் பாடிக்கொண்டிருப்பதால் உறுபயன் யாதோ? எனக் குரல் எழுப்புகிறார். தமிழும் ஆங்கிலமும் கற்றோர் தம் நாட்டு மக்களுக்கு நற்பயன் செய்யாது வீணே காலங் கழித்துவிட்டனரே என்று கழிவிரக்கப்படுதலையும், விபுலாநந்தரிடம் காணக்கூடியதாக இருக்கின்றது.

''அவர் பன்னாள் வருந்திச் செய்த அரிய ஆராய்ச்சியின் பயனாகத் திரட்டி வைத்திருக்கிற எண்ணிறந்தனவாகிய கணிதநூல், உடல்நூல், மனநூல், சீவநூல், பொருட்டன்மை நூல், இரசாயன நூல், உலக சரித்திரம், பூகோள விவரணம், சிற்பநூல், வர்த்தக

நூல் முதலியவற்றில் ஒன்றையேனும் நாம் தமிழ்ப் படுத்தவில்லை. என்னே நம் பேதமையிருந்தவாறு. இங்ஙனஞ் செய்யா தொழிந்தது ஆங்கிலங் கற்ற தமிழ் மக்கள் அனைவர் மேலும் பொறுத்த குற்ற மாகும்''

(பக். 34-35)

தமிழ் அறிவோடு ஆங்கிலப் புலமையும் வாய்க்கப்பெற்றவர்கள் சுயநலமிகளாக இருந்து வந்திருக்கிறார்கள். தம்மறிவைப் பொதுமக்களுக்குப் பயன்படுத்தாது ஆட்சியாளரின் நிர்வாக இயந்திரங்களாகவே செயற்பட்டு வந்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுதல், மக்கள் நலன்கருதிய ஒரு செயற்பாடாகும். கற்றறிந்தோர் தம் அறிவையும், ஆராய்ச்சிகளையும் நாட்டுமக்களுக்குப் பயன்படும் வகையிற் செயற்படுத்த வேண்டும் என்ற கருத்தாக்கம், விபுலாநந்தரிடம் இருந்திருக்கிறது.

வேற்று மொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது, மொழி பெயர்ப்பு நூல் தெளிவும் எளிமையும் கொண்டனவாக இருத்தல் வேண்டும். அல்லாவிடின் அந்நூலினால் விளைபயன் அரிதாகலாம் என்று குறிப்பிட்டுள்ளார். உதாரணமாக 'Structuralism' என்ற ஆங்கில நூலைத் 'தமிழவன்' என்பார் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். அந்நூலின் தலைப்பைத் தமிழில் 'ஸ்ரக்சுரலிசம்' என்றே மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார். தலைப்பைப் போன்றே நூலின் உள்ளடக்கத்திலும் "பயிற்றுப்பச்சரிசி" நடையில் நூல் எழுதப்பட்டு வாசிப்போருக்கு விளக்கமின்மையும் தெளிவின்மையும் கொண்டமைந்துள்ளது. இவ்வகையில் சுவாமி விபுலாநந்தர் பின்வரும் உறுதியான கருத்துக்களைக் கொண்டிருந்தார்.

> "மொழி பெயர்ப்பு நூலெழுத முன்வருபவர் சிலர் நிரம்பிய தமிழறிவின்மையால் ஆங்கில மக்களும் தமிழ் மக்களும் ஒருங்கு வெறுக்கத்தக்க 'பயிற்றுப் பச்சரிசி' நடையில் நூலெழுதி முடிக்கின்றார்கள். இவ்வாறெழுந்த அயனாட்டுச் சொற்களைச் சேர்த்துக்கொள்வதனாற் குற்றமில்லை. முடிந்த நூல் தமிழர் மனங்கவர்வதாக இருத்தல் வேண்டும். அல்லாவிடில் இன்றும் நில்லாது''
>
> (பக். 36-37)

உள்ளூர் உற்பத்தி, உள்ளூர் வெளியீடு என்பவற்றிலும் அதிவிருப்பங்கொண்ட விபுலாநந்தர் "பட்டணவாசிகளாகிய தமிழ் மக்கள் பெரிலும் ஆங்கிலப் பத்திரிகைகளையே ஆதரிக்கிறார்கள்" எனக்கூறுவது அவரது பட்டுணர்வின் வெளிப்பாடாகும். "இராமகிருஷ்ண விஜயம்", "வேதாந்த கேசரி", "பிரபுத்த பாரதம்" என்னும் பத்திரிகைகளுக்கு ஆசிரியராகப் பணிபுரிந்த அடிகளார், பத்திரிகைகளுக்கும் மக்களுக்குமிடையிலான தொடர்பின் பயன்பாட்டை நன்குணர்ந்திருந்தார். தமிழ் மக்கள் தமிழ்ப் பத்திரிகைகளைப் படிப்பதன்மூலம் தமிழ்மொழி, கலை, பண்பாடு, அரசியல் முதலான விடயங்களை எளிதில் அறிந்துகொள்ள வாய்ப்புண்டாகிறது. அதை விடுத்து ஆங்கிலப் பத்திரிகைகளை (பட்டணவாசிகள்) தமிழ் மக்கள் வாங்கிப் படிப்பதற்குக் கண்டனக்குரல் எழுப்புகிறார் அடிகளார்.

1960 களில் 'தாய்மொழி மூலம் கற்றல்' இலங்கையில் சட்டமாக்கப்படுவதற்கு முன்பே, தாய்மொழிக் கல்வியின் இன்றியமையாமையை வலியுறுத்தியவர் விபுலாநந்தர். தமிழ் அறிஞர் தாம் ஆராய்ந்தறிந்த உண்மைகளைத் தமிழ் மொழியிலேயே எழுதி நூலாக வெளியிட வேண்டும் என்ற கருத்துடையவராக, விபுலாநந்தர் விளங்கினார். ஆங்கிலத்திற் கவிதை எழுதத் தொடங்கியவர்களையும் கண்டிக்கிறார். "கவி சிரேட்டராகிய ரவீந்திரநாத் தாகூர் தமது தாய்மொழியில் (வங்காளி) கவிதை எழுதினமையினாற்றான் உலகத்தாரது நன்மதிப்பைப் பெற்றாரென்பதை ஆங்கிலங்கற்ற தமிழறிஞர்கள் அறியார்கள் போலும்" என்று எடுத்துக்காட்டு முறையாலும் தமிழ்மொழியின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறார்.

தாய்மொழியில் எண்ணித் தெளிந்த விடயங்களைத் தாய் மொழியில் எழுதி வெளியிடுதல் என்பதுபற்றியும் திடமான கருத்துடையவராக விபுலாநந்தர் விளங்கினார். சிறந்த எண்ணக்கருத்தாளர் பலர் தத்தம் தாய்மொழியினூடாகவே சிறந்த நூல்களை எழுதி வெளியிட்டிருக்கின்றனர். ஒரு மொழியில் எண்ணி இன்னொரு மொழியில் நூல் எழுதுதல் தவறானது என்பதை விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்.

> "எட்டுமுறை குட்டிக்கரணம் போட்டாலும் தாய்மொழியன்றிப் பிறிதொரு மொழியில் அம்மொழியாளரால் முதற்றரத்ததென்று மதிக்கப்படத்தக்க நூலியற்றல் இயலவேயியலாது''
>
> (பக். 35)

என்ற அடிகளார் கருத்தும் உன்னிப்பாக நோக்கத் தக்கதாகும்.

ஈழ நாட்டிலே சிங்களவராயினுஞ் சரி, தமிழராயினுஞ்சரி அவர்கள் தத்தம் தாய் மொழியில் பட்டம் பெற்று வெளியேறும் பொறியியலாளர்கள், மருத்துவர்கள், விஞ்ஞானமாணிப் பட்டதாரிகள் முதலியோர் ஆங்கிலமொழிமூலம் கல்வி கற்றுப் பட்டம் பெற்றதும் தொழில் தேடி வெளிநாடுகளுக்குச் சென்றுவிடுகிறார்கள். அவர்களால் நாட்டிற்கு ஒரு பயனும் இல்லாது போகிறது. அன்றியும் ஆங்கிலக்

கல்வியில் பொருள் தெளிவின்மையும் காலவிரயமும் ஏற்படுவதோடு, மாணவர்களுக்கு மொழித்தடை உயர்கல்வியில் வெறுப்பையே ஏற்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. இதனாலேயே '' உயர்தரகல்வியும் தாய் மொழியிலே ஊட்டப்பட வேண்டுமென்பது மறுக்கொணா உண்மையாகின்றது'' என்பதில் விபுலாநந்தரின் கல்விக்கொள்கை புலனாகின்றது.

அறிவியல்

பண்டைத்தமிழில் ஐம்பூத அறிவிலக்கியங்கள் இருந்திருக்க வேண்டும். ஆயினும் அவை காலவெள்ளத்தால் அழிந்துபோயின. அழிந்ததற்கு இரங்காமல் முன்னேற்றமடைய முயல்வதே தகுதியென்பதொரு தலை என்கிறார் விபுலாநந்தர். ''மேனாட்டார் பஞ்ச பூத வியற்கையை நுணுகவாராய்ந்த வலிமையினாலன்றோ மேலை நாட்டார் நிலமிசை விரைந்து செல்லும் எந்திரவூர்திகளையும், நீர்மிசை மிதந்து செல்வனவாகிய பல்வகை இருப்புக்கலங்களையும், தியின் வேகத்தால் உந்தப்பட்டு, வளிமேற் கிளம்பிச் செல்லும் வானவூர்திகளையும், விசும்பு ஆறாக மின்னியக்கமே தூதுவனாகச் செலுத்தியனுப்பும் வழிவகைகளையும் அறிந்திருந்தார்கள் '' என, மேற்றிசைக்கண் வளர்ந்திருந்த அறிவியல் துறைகளை விஞ்ஞான தீபம் என்ற கட்டுரையில் ஆராய்ந்து விளக்கியுள்ளார்.

படிமக்கருவி (Camera), பாடற்கருவி (Recorder Cassette), நடன விளக்கு (Television), வாய்த்தந்தி (Telephone) முதலியனவற்றை ஐம்பெரும் பூதத்தினியற்கையையுணர்ந்த மேனாட்டு அறிஞர் ஆக்கித்தந்துள்ளனர். அவற்றையும் அறிந்து, தமிழ் மக்களுக்கு உதவத்தக்கவகையிலான கருவிகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்பதே, அடிகளாரின் உட்கிடக்கை ஆகும்.

அறிவியற் கல்வியை இன்ப போகத்திற்கு மட்டும் பயன்படுத்தாது, நாட்டின் பாதுகாப்புக்கும் அதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என சுவாமி எழுதியுள்ளார்.

> '' அன்றியும் பகையரசர் நாட்டினுட் புகாது அரண்செய்து காத்தற்குப் பயன்படுவனவும் 'யவனரியற்றிய பல்வகைப் பொறி' என நம் முன்னோரால் குறிக்கப்பட்டனவுமாகிய யந்திரசங்களை அமைத்தற்குக் கருவியாய் நின்றது ஐம்பூதவாராய்ச்சியாகும் .''
>
> –வி. பு. செல்வம்
> (பக். 47)

நாட்டுக்குத் தேவையான அனைத்துக் கருவிகளையும் உற்பத்தி செய்துகொள்ளலாம் என்பதே விபுலாநந்தரின் குறிக்கோளாகும். இங்கு சிறப்பாக நோக்க வேண்டியது, விஞ்ஞான அறிவை நாட்டுப் பாதுகாப்புக்குரிய ஆயுத உற்பத்திக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை ஒரு துறவி அக்காலத்தில் எழுதினாரே என்றால், அக்காலத்தில் அவர் ஆங்கில ஆட்சிக்கெதிராக ஆயுதப்போராட்டம் நடாத்த வேண்டும் என்ற கொள்கையையுடையவராக இருந்திருக்கிறார் என்பதேயாகும்.

கல்விக் கோட்பாடுகள்

> '' அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல் ......
> அன்ன யாவினும் புண்ணியங் கோடி
> ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்''

என்ற பாரதியின் கருத்துக்குச் செயல்வடிவம் கொடுத்தவர் விபுலாநந்தர். தமிழகத்திலும் ஈழத்திலும் தான் சென்ற இடங்களிலெல்லாம் கல்வி வசதியற்ற கிராமிய மக்கள், ஏழைகள் அனைவரது கல்வி வளர்ச்சியிலும் அடிகளார் அக்கறை செலுத்தினார். விவேகானந்த சபையினரின் பொறுப்பிலிருந்த ஈழத்துப் பாடசாலைகளின் நிர்வாகப் பொறுப்பை 1925 இல் அடிகளார் ஏற்றுக்கொண்டு, மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக உழைத்தார். தமது சொற்பொழிவுகள், அறிவுரைகள் மூலம், பணம் படைத்தோரை கல்வித்துறையில் தொண்டு செய்யும்படி தூண்டினார். அடிகளாரின் இவ்வறிவுரைக்குச் செவிசாய்த்த செல்வந்தர்கள் சிலர், தென்தமிழீழத்திலுள்ள காரைதீவில் பெண்களுக்கு என சாரதா வித்தியாலயம், ஆண்களுக்கென கல்லடி உப்போடையில் சிவாநந்த வித்தியாலயம் ஆகிய கல்லூரிகளைக் கட்டிக் கொடுத்தனர். அடிகளார் இவ்விரு கல்லூரிகளிலும் அநாதை இல்லம் அமைத்து, ஏழை மாணவர்களும் தங்கியிருந்து உயர் கல்வி கற்று முன்னேற வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்திக் கொடுத்தார். சிவாநந்த வித்தியாலயத்திலே ஆங்கிலக் கல்விக்கும் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன.

1930 இல் சிவாநந்த வித்தியாலய அதிபர் பொறுப்பும், இராமகிருஷ்ண சங்கப் பாடசாலைகளை நிர்வகிக்கும் பொறுப்பும் அடிகளாரிடம் ஒப்படைக்கப்பட்டன. இக்காலப்பகுதியில், கிழக்கிலங்கையின் பல கிராமங்களிலே இராமகிருஷ்ண சங்கத்தின் உதவியுடன் பாடசாலைகளை நிறுவியதோடு, கல்வி நிர்வாகத்தையும் சிறந்த முறையில் அடிகளார் நடத்தினார். தென்தமிழீழத்தில் பாடசாலைகள் பரவலாக சுவாமி விபுலாநந்தர் மூலமே நிறுவப்பட்டனவாகும்.

சமூகத்தில் சம கல்வி வாய்ப்புப் பற்றிய எண்ணக் கருத்தில் அடிகளார் மிகவும் அக்கறை கொண்டிருந்தார். பெண்கள் உயர் கல்வி பெற

வேண்டும்; அவர்களின் மூலம்தான் வருங்கால மக்கள் உயர்ந்த கருத்துக்களைப்பெற்று உயர்ந்த காரியங்களைச் செய்ய முடியும்; நமது நாடு சிறப்படைவதற்குரிய வழி இதுவே என்பது, வீர விவேகானந்தரின் கருத்து. ஆண்களைப்போல் பெண்களும் கல்விபெறும்போதுதான் சீரிய சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்ற அடிப்படையில், பெண்கள் கல்விக்காகவும் தம் கல்வித்திட்டங்களையும் செயற்பாடுகளையும் அடிகளார் மேற்கொண்டார். தென் இந்தியாவில் காரைக்குடி, தேவகோட்டையில் அமைக்கப்பட்ட மகளிர் கல்லூரியைத் திறந்து வைத்துப் பேசிய பேச்சு பயனுள்ளதாகும்:

> '' பெண்களுக்குக் கல்வியறிவு மிகவும் தேவையானது. முறையான கல்வி பயிற்றப்படும்போது மாணவிகள் நாட்டுக்குச் சேவை செய்யத்தகுந்த நிலையடைகிறார்கள்.''

சமயத்தை அடிப்படையாகக் கொண்ட உயர் கல்வியினை அறிமுகப்படுத்தி தேசிய மறுமலர்ச்சிக்கு அடிகளார் வித்திட்டார். ஈழ நாட்டில் பெரும்பாலான தமிழ் மக்கள் கல்வி வசதியின்றி வறுமையுற்றுச் சோர்வடைந்திருந்த காலத்தில், தென் தமிழீழ மக்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பெரிதும் பாடுபட்டவர் விபுலாநந்த அடிகளார்.

ஒருவன் கற்கும் கல்வி, அவன் சமூகமயப்பட அவனுக்கு வழிகாட்ட வேண்டும். அதன் மூலம் அவன் சமூகத்திற்கான பணிகளில் ஈடுபட வேண்டும். அன்றியும் எமது கல்வி மூலம் மேற்கத்தைய நாடுகளைப்போன்று நம் நாடும் விடுதலை பெறவும், முன்னேற்றம் காணவும், தன் பலத்திலேதான் நிற்கவும், மக்கள் ஆண்மையும் சுதந்திரமும் உள்ளவர்களாக வாழவும் வழிவகுக்கும் வகையில் தேசியக்கல்வி அமைய வேண்டும் என்ற அடிப்படையில், விபுலாநந்த அடிகளாரின் கல்விச் செயற்பாடுகள் காணப்பட்டன.

தாய்மொழி மூலமான கல்விக் கோட்பாட்டில் மிக்க உறுதியுடையவர் விபுலாநந்தர். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகத்திலும் தமிழ்மொழி மூலமே பயில வேண்டும் என்பதும், ஆராய்ச்சிகளும் தமிழ் மொழியிலேயே நடைபெற வேண்டுமென்பதும் அடிகளாரின் விருப்பாகும். ஆங்கிலம் எண்ணக்கருத்துக்களுக்குத் தடையாக அமைகிறது என்பதையும் பல்வேறு சான்று காட்டி அடிகளார் நிறுவியுள்ளார்.

பல்கலைக்கழகம் பற்றிய அடிகளார் கருத்து

பல்கலைக்கழகப் பேராசிரியராக விளங்கிய அடிகளார் உள்ளத்திலே, நம் நாட்டுக்கும் ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் என்ற ஓர் உயரிய எண்ணம் இருந்து வந்தது. அப் பல்கலைக்கழகம் எவ்வாறு அமைய வேண்டும் என்ற எண்ணமும் தெளிந்த கருத்தும் கொண்டவராக அடிகளார் விளங்கினார் என்பதற்கு, அவரது எழுத்துக்களே சான்று.

> '' நம் நாட்டிலே நம்மால் நிறுவப்படுகின்ற பல்கலைக்கழகம் ... தொன்று தொட்டு வந்த நமது சிறப்புப்பொருந்திய நாகரிகத்தை வளர்ப்பதாக அமைய வேண்டும். நம் நாகரிகத்தை நாசப்படுத்தி, அந்நிய நவநாகரிகத்தை அறிந்து நாமும் நம்மை அடிமையாய் இருக்கச்செய்கின்ற சர்வகலாசாலை நமக்குத் தேவையில்லை. அரசியற் சுதந்திரம் இல்லாத காரணத்தால் நம் அறிவையும் ஆத்மாவையும் ஆங்கிலேயருக்கு அடிமைச் சீட்டு எழுதிக்கொடுத்து விட்டோமா? இல்லை! அறிவும் ஆத்மாவும் நமக்கேயுரியனவாக இருக்கின்றன. நாம் நமது நாகரிகத்தை நமது நாட்டில் மாத்திரமல்ல பிற நாட்டிலும் பரப்ப வேண்டும். பல்கலைக்கழகங்கள் அறிவையும் ஆன்மீகத்தையும், பண்பாட்டையும் தேசிய உணர்வுடன் சமூக நலனுக்காக வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டனவாக அமைய வேண்டும்.''

தமிழ் மொழியிலே நாம் தொடக்கக் கல்வி பெறுகின்றோம். தமிழ் மொழி மூலம் பல்கலைக்கழகக் கல்விகற்கும் வாய்ப்பும் உண்டு. இருந்தும் மாணவரிடையேயும் பட்டதாரிகளிடையேயும் தமிழறிவு செம்மையாக அமையவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழில் பிழையற எழுதுகிறார்களில்லை. தமிழ்மொழியின் வரலாறு - அதன் இலக்கியப்பரப்பு - உலக இலக்கியங்களோடு தமிழ் இலக்கிய ஒப்புநோக்கு முதலாம் விடயங்கள் பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய விடயங்களாகும். இப் பொருள்பற்றி விபுலாநந்த அடிகளாரின் கருத்து பொருத்தமாகிறது.

> '' சிங்கள, தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் ஆகக் குறைந்தது ஒரு வினாத்தாளையாவது தாய்மொழி இலக்கணத்திலும், இலக்கியப் பகுதியிலும் எடுக்கச் சட்ட ரீதியாகச் செய்ய வேண்டும். இதை மீறக்கூடிய வகையில் ஏதாவது மாற்றுத்திட்டமோ, சட்டப்பலவீனங்களோ இருக்கக் கூடாது.''

பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் தாய்மொழியைக் கட்டாயமாகக் கற்க வேண்டும் என்பதில் கடுமையான போக்குடையவராக இருந்தார்

அடிகளார். அவரது குறிக்கோள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் நிறைவேறும் நாள் தமிழ் மொழிக்குத் தமிழீழத்தில் பொன்னாளாகும்.

பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி முதலிய உயர்கல்வி நிறுவனங்களிற் பயிற்றும் ஆசிரியர்களும், பயிலும் மாணவர்களும் மிகவும் உன்னிப்பாகக் கருத்திற்கொள்ள வேண்டிய ஒரு கருத்தை அடிகளார் வருமாறு குறிப்பிடுதல் மிகப் பொருத்தமாகிறது.

''நம் நாட்டில் வறியோர் கொடுக்கும் வரிப் பணத்தைக் கொண்டு உயர்தர கல்விச்சாலைகள் நடாத்தப்படுகின்றன. ஆதலால் இக் கல்விச்சாலைகளினின்று பிறக்கும் கலையறிவு அனைவருக்கும் பயன்தருவதன்றோ நீதியும் மரபுமாகும்''.

பாவலரும் நாவலரும் வசித்து வந்த யாழ்ப்பாணத்திலே ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்பதை முதன்முதலில் வற்புறுத்தி, ''யாழ்ப்பாணத்திற்கு ஒரு பல்கலைக்கழகம்'' என்ற கட்டுரையை அடிகளார் எழுதினார். யாழ்ப்பாணத்திலே ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டுமென்பதில் அடிகளாருக்கு மிக்க ஆர்வம் இருந்தது என்பதை, ஈண்டுச் சிறப்பாகக் குறிப்பிடுதல் தகும். மேலும் இப் பல்கலைக்கழகம் எவ்வாறு அமைய வேண்டும் என்று கூறும்போது, ''நாம் எதிர்பார்க்கும் சர்வகலாசாலை இலக்கியத்திலும் ஏனைய கலை ஞானங்களிலும் தேசிய இலட்சியங்களை வளர்த்தல் வேண்டும். ஏனைய நாட்டிலுள்ள கலைஞர்கள் இங்கும் ஏதாவது கற்றுக்கொண்டு திரும்பக் கூடியதாக இங்கு வர வேண்டும்'' என்றார்.

கலைச் சொல்லாக்கம்

அறிவியலின் வளர்ச்சி வேகத்திற்கேற்ப அக்கருத்துக்களைத் தமிழில் வெளியிடும் புதுச்சொல்லாக்கங்களும் வெளிவருதல் வேண்டும் என்ற நல்ல நோக்குடையவராக, விபுலாநந்தர் செயற்பட்டார். அறிவியல்சார் சொற்களஞ்சியம் ஒன்றை அடிகளார் தாமே ஆக்கி, அதனைப் பயன்படுத்தி ''விஞ்ஞான தீபம்'' என்ற கட்டுரையை எழுதியுள்ளார். சொல்லாக்கம் பற்றிப் பற்பல சந்தர்ப்பங்களில் அறிவுரை கூறியும் எழுதியும் வந்துள்ளார். 1934 முதலாக சென்னை பச்சையப்பன் கல்லூரியில் கலைச்சொல்லாக்கக் கழகம் ஒன்று செயற்பட்டு வந்தது. இக்கழகத்தார் 20-9-1936 இல் தமிழ்க் கலைச் சொல்லாக்க மகாநாடு ஒன்றை ஏற்பாடு செய்தனர். விபுலாநந்த அடிகளாரே தலைமை தாங்கி அம்மகாநாட்டைச் சிறப்பாக நடாத்தினார்.

''ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் விஞ்ஞான நூல் மிகவும் விருத்தியடைந்து விளங்குகின்றது. அந்த அறிவுச்செல்வத்தை தமிழ்மொழி பெறுவதற்காவன செய்தல் சிறந்த தமிழ்த் தொண்டாகும்.'' அதற்குக் கலைச்சொல்லாக்கம் மிக இன்றியமையாதது.

''தமிழ்நாடு தனக்குரிய ஆக்கத்தினைப் பெறுகின்ற நன்னாளிலே அறிவுக்கடலிலிருந்து எழப்போகின்ற தமிழ் முகிலானது, புன்மையாகிய உவர்த்தன்மையினை முழுதும் நீக்கித் தூயதமிழ் நீரினை நாடெங்கும் பொழியக் காண்போம். மூடநம்பிக்கையோடுகூடிய பௌராணிக மனப்பான்மையென்னும் இருள் அகல்கின்றது.

சொற்களஞ்சியம் தயாரிக்கும்போது வடமொழி, ஆங்கில மொழி முதலிய நூல்களில் பயின்றுவரும் சொற்களில் ஆராய்ச்சிக்குப் பொருத்தமான சொற்களை எடுத்து ஆள்வோம். ஆங்கில நூல்களின் கருத்தினைத் தமிழில் விளக்குவதற்கு ஏற்புடைய தமிழ்ச் சொல்லும், வடமொழிச் சொற்களும் இல்லாதபோது யவனபுர மொழி (Greek), ரோமாபுர மொழி (Latin), ஆங்கில மொழி இலக்கியத்திலிருந்து தக்க சொற்களைத் திசைச்சொற்களாக எடுத்தாள்வோம்'' என்பது, அடிகளார் கருத்தாகும்.

கலைச்சொல்லாக்கத்தின் போது, அக்கறையும் கருத்தும் கொள்ளவேண்டியன எவை என்பதை வருமாறு குறிப்பிடுகிறார்:

i. தமிழில் ஓரெழுத்து, ஈரெழுத்துக்களாலான மணிபோன்ற சிறிய சொற்கள்.

ii. பழந்தமிழ் இலக்கிய வழக்குச் சொற்களைத் திரட்டல்.

iii. கலைச்சொல்லாக்கத்தில் சொற் சுருக்கம், விளக்கம், தெளிவு, தமிழ் உருவம் பெறல் வேண்டும்.

மொழிபெயர்ப்பு

''தமிழ் மொழியிலே புதுப்புது நூல்கள் வெளிவர வேண்டும். மறைந்து கிடக்கும் தமிழ்க் கலைகள் பற்றி ஆராய்ந்து அவற்றை வெளிப்படுத்த வேண்டும். பிறநாட்டு நல்லறிஞர்கள் ஆராய்ந்து தொகுத்து வைத்த நூல் நிதியம் தமிழர்க்குப் பயனாகுமாறு மொழி பெயர்க்கப்பட்டு, தமிழில் வெளிவரல் வேண்டும். நமது மொழிச் செல்வங்களைப் பிறமொழிகளில் பெயர்த்தல் வேண்டும்'' என்பது விபுலாநந்தரின் அறிவுசால் வீர முழக்கமாகும். ''பண்டை நாளில் நமது முன்னோர் சிறப்புற்றிருந்தாரென்று வாளா புராணம் பாடிக்கொண்டிருப்பதனால் உறு பயன்யாதோ அறியோம். அயல் நாட்டாரோடு

கொள்வனவும், கொடுப்பனவும் செய்யாதொழியின் செல்வம் நிலைபெறாது. உயிர்க்கு உறுதியளிக்கும் நூல்கள் அவரிடத்துள்ளன... அவர் பன்னாள் வருந்திச் செய்த ஆராய்ச்சியின் பயனாகத் திரட்டி வைத்திருக்கும் கணித நூல், உடல்நூல், சீவநூல்... முதலியவற்றில் ஒன்றையேனும் நாம் தமிழ்ப்படுத்தவில்லை'' என்று எழுதிய அடிகளார் அக்குற்றச் சாட்டுக்குத் தாமே ஆளாகாமல் மேற்றிசைச் செல்வம், விஞ்ஞான தீபம் என்னும் இரு கட்டுரைத் தொகுதிகளை எழுதி வெளியிட்டார்கள்.

கவிதை மொழிபெயர்ப்பு

ஆங்கிலத்திற் புலமை பெற்றிருந்த அடிகளார் அம்மொழிக் கவிஞர்களின் கவிதைகள் பலவற்றைப் பொருளுணர்ந்து படித்துச் சுவைத்தார். அவற்றின் கவித்திறனையும், சால்பினையும் செவ்வனேயறிந்த அடிகளார் அவ்வளங்களைத் தமிழ் மக்களும் அறிய வேண்டும் என்ற உணர்வோடும், தமது கவிதை உள்ளத்தின் உந்துதலினாலும் ஆங்கிலக் கவிதைகள் பலவற்றைத் தமிழில் மொழி பெயர்த்தார். உலகம் போற்றும் உத்தம கவிஞராகிய ரவீந்திரநாத் தாகூர் இயற்றிய பாடல்களில் உள்ளங்களித்த அடிகளார், அவற்றுள் 'பூஞ்சோலைக் காவலன்' என்ற தொகுதியிலிருந்து சில பாடல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார்கள். இம்மொழிபெயர்ப்புக் கவிதைகள் மொழிபெயர்ப்பு என்றே உணர முடியாத அளவுக்கு இயல்புக் கவிதைகளாகத் தென்படல், அம் மொழிபெயர்ப்பின் திறமாகும்.

சிறந்த ஆங்கிலக் கவிஞர் மில்டன் இயற்றிய சுவர்க்க நீக்கத்திலிருந்தும் சில பகுதிகளை 'ஆங்கில வாணி' என்ற பெயரில் மொழி பெயர்த்துள்ளார். அக்கவிதையில் ஆதாம் - ஏவாள் இருவரையும் முறையே 'அத்தன்', 'அவ்வை' என மொழிபெயர்த்துள்ளார்.

மேலும் ஆங்கிலக் கவிஞன் உவேட்ஸ்வேர்த்தின் கவிதை, கீத்ஸின் கவிதை, ஷெல்லியின் கவிதை, தெனிசன் கவிதை, றொபர்ட் பிறவுணிங் கவிதை ஆகியவற்றையும் மொழிபெயர்த்துள்ளார். இப்பாடல்களில் காதற்சுவை மேலிட்டுக் காணப்படுகிறது. தெனிசன் கவிதை வீரச்சுவை கொண்டதாகும். வீரச் சுவைக்கு ஏற்ப மொழி பெயர்ப்பிற் கையாளும் மொழி நடையும் சங்ககால வீரச் செய்யுள் நடையினை ஒத்திருக்கிறது. (எடு. பக். 112)

நாடகத்துறையிலும் அமைந்த கவிதை மொழி பெயர்ப்புக்கள் இபற்றமிழுக்குரியனவாகும். மதங்கன் என்பது கூத்தரைக் குறிக்கும் சொல்லாகும். அக்கூத்தருள் தலைசிறந்த ஒருவரை மதங்க சூளாமணி என்று பெயரிட்டுள்ளார். நாடக உலகில் தலைசிறந்தவரான சேக்ஸ்பியரை மதங்கசூளாமணி என்றார் அடிகளார். சேக்ஸ்பியரது பல நாடகங்களைத் தமிழில் அடிகளார் மொழிபெயர்த்துள்ளார். அவை தனி நூலாக வெளியிடப்பட்டுள்ளன. அதில் வரும் கவிதைப் பாங்கான பாடற் சிறப்புக்கு ஓர் எடுத்துக் காட்டாக சீசர் கூறும் வீரமொழி சான்று பகருகின்றது.

அஞ்சினர்க்கு...... பக் 127

அண்ணாமலையிலிருந்த காலத்தில் (1931-1933) சுவாமி விவேகானந்தரின் ''விவேகானந்தஞானதீபம்'' ''கர்மயோகம்'', இராசயோகம்'', ''பதஞ்சலி'' ''யோகசூத்திரம்'' ஆகியவற்றைத் தமிழில் மொழி பெயர்த்தார்.

மொழி பெயர்ப்புச் செய்யவேண்டிய முறைமை பற்றி அடிகளார் பின்வரும் கருத்தினைக் கொண்டிருந்தார்.

"மொழி பெயர்ப்பு நூல்களை ஆக்குவோன் மிக்க கவனம் எடுக்க வேண்டும். முதல் நூல் கடின நடையிலிருந்தால் அந் நடையையே மொழி பெயர்ப்பிலும் அனுசரிக்கலாம். எளிய நடையிலிருந்தால் அந்நடையிலேயே மொழிபெயர்ப்பு இருத்தல் வேண்டும்... முதல் நூலை இயற்றிய ஆசிரியன் தமிழ் நாட்டில் பிறந்து தமிழில் எழுதியிருப்பானானால் எங்ஙனம் எழுதியிருப்பானோ என யூகித்து, அவ்வகையில்மொழி பெயர்ப்பு நூலையும் ஆக்கல் வேண்டும். அதை விடுத்துத் தமக்கு இசைவான நடையிலே மொழி பெயர்த்தல் பிழையுள்ளதாகும்''.

மதங்களிடையே ஒப்புரவு நோக்கு

வேதாந்த சமயக் கோட்பாட்டின் வழி நின்றியங்கும் இராமகிருஷ்ண சங்கத்தில், சகல சமயங்களுக்கிடையிலும் ஒப்புரவு நோக்கே காணப்படும். அதன் வழி நின்று சமூக, சமயத்தொண்டு புரிந்த அடிகளாரிடமும் அதே பண்புகளே காணப்பட்டன.

நாவலர் பிறசமயக் கண்டனங்களில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். ஆனால், சைவத்தில் பற்றுக்கொண்டிருந்த விபுலாநந்தர், பிறமதங்களைக் குறை கூறினாரில்லை. பிற மதங்களின் கொள்கைகளையெல்லாம் எடுத்துக் காட்டி, சைவசமயக் கொள்கைகளுடன் ஒப்பு நோக்கி விளக்குவார்.

ஒரு தடவை அடிகளின் நண்பர் ஒருவர் பிறசமயத்தை இகழ்ந்துரைத்தபோது அவரது அறியாமையைப் போக்க, வருமாறு கூறினார்:

''நீ ஒரு சைவ சமயத்தவன். மற்றைச் சமயங்களை இகழாதிருத்தலே சைவசமயத்தின் கொள்கை. சைவ சமயத்தின் பெருமையை மற்றச் சமயத்தவர்

கூட தாமாகவே உணரவேண்டும். ஆகையால் மற்றைச் சமயம் எதையாவது நீ இகழ்ந்து பேசுவாயானால், நீ சைவத்தின் முதலாம் எதிரியாகக் கருதப்படுவாய். ஆகையால் நீ உண்மைச் சமயப்பற்று உள்ளவனாயிருந்தால், இன்று தொடக்கம் மற்றைச் சமயங்களை இகழ்ந்து பேசுவதை விட்டுவிட வேண்டும்'' என்று ஆணித்தரமாகக் கூறினார்.

மதப் பூசல்களும் குலச்சண்டைகளும் நடைபெற்றுக் கொண்டிருந்த சூழலில் ''சமரச சன்மார்க்க நெறியை'' அமைப்பதில் அடிகள் ஈடுபட்டார். ''உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது'' என்ற கொள்கையோடு மதங்களிடையே பொது நெறி காணமுற்பட்டார். மத அடக்கு முறைகளும் மத மாற்றங்களும் ஆங்கிலேய ஆட்சியாளரின் உதவியுடன் திணிக்கப்பட்டுக் கொண்டிருந்த அக்காலத்தில் அவற்றுக்கெதிராக தேசிய மத, பாதுகாப்பில் அடிகளார் ஈடுபட்டார்.

ஈழத்தில் சைவம், கிறீஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்களைச் சேர்ந்த மாணவர் அனைவரும் ஒருங்கே இருந்து கல்விகற்கக்கூடிய ஒரு நிறுவனமாக ''சிவாநந்த வித்தியாலயம்'' அமைக்கப்பட்டது. இக்கல்லூரி மதம் கடந்த தமிழ்த் தேசிய நோக்கின் சின்னமாக விளங்குகின்றது.

உழைப்பில் நம்பிக்கை

காவியுடை தரித்துத் துறவுவழி ஒழுகிய விபுலாநந்த அடிகளார் வேதாந்தியாகவும் இறைநம்பிக்கை மிக்கோராகவும் இருந்தபோதிலும், ''முயற்சி திருவினையாக்கும்'' என்பதில் பெரு நம்பிக்கையுடையவர்.

''தெய்வத்தாலாகா தெனினு முயற்சி தன்
மெய் வருந்தக் கூலி தரும்.''

கர்மக் கோட்பாட்டிலும், விதிக்கோட்பாட்டிலும் நம்பிக்கையுடைய தமிழ் மக்களுக்கு இக்குறட்பாவின் பொருளைத் தம் சொற்பொழிவுகளில் எடுத்துக்காட்டி முயற்சியின் சிறப்பை விபுலாநந்தர் விளக்குவது வழக்கம். கருதியன யாவற்றையும் தவத்தினாற் பெறலாமென்பர். இடையறாத முயற்சியே தவமாகும். தவத்தினால் அனைத்தும் பெறுமாப்போல் முயற்சியினால் விரும்பியதைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற அறிவுரையை மக்களுக்குக் கூறி, வாழ்க்கையில் பற்றுக்கோடும் விடாமுயற்சியும் மேற்கொள்ள மக்களுக்கு வழிகாட்டியவர் விபுலாநந்தர்.

பொது வாழ்வில் வருகின்ற துன்பங்கள் கேடுகளை ஒருவன் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என அடிகளார் எடுத்துரைக்கின்றார்!

''பயனில்லாத செயலும் சிந்தனையும் விவேக மற்று நடப்பதும் ஆத்மத் துரோகமாகும். எல்லாம் அறிந்தவன் என்ற கர்வம் காட்டாதே. எந்தப் பதவியிலும் நல் வாழ்வு வாழலாம். ஒரு வேலை உன் சக்திக்கு மீறினதாகத் தோன்றினால் நீ பின்னின்று, தகுந்த வேறொருவனைச் செய்ய விடு. நீ செய்யும் எக்காரியமும் உலகத்துக்குப் பயன்படுமாறு இருக்க வேண்டும்.''

''மேலும், தடைகளைக் கண்டு வெறுப்புக் கொண்டு போய்விடாமல் அவைகளையும் மீறிப் பிரகாசித்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்று கூறி, ஆண்மையற்றவனே துயரப்படுவான்- சினங்கொள்வான். சினமும் துயரமும் கொள்பவன் கஷ்டத்தைத் தாங்கி நிற்கமாட்டான். தோல்வியடைவான்' எனப் பல்வேறு சிந்தனைகளை மேற்படி கட்டுரையில் விபரித்துச் சொல்கின்றார்.

நமக்குக் கிடைத்த அதிகார பலத்தினால் மற்றவர்களை அடக்கப்பார்ப்பது வீன் வேலையாவதுமல்லாமல் நமக்கே தீங்காக முடியும். விரோதமும் வளரும். அதிகார பலத்தாலோ நயவஞ்சகத்தாலோ இப்போதைக்கு வெற்றி கிடைத்தது போலத் தோன்றினாலும் அவ் வெற்றி அழிவுக்குக் காரணமாகும்.

எளிய வாழ்வு

எளிய வாழ்வென்பது வறுமையான அல்லது சிக்கனமான வாழ்வென்பதன்று. ஒழுகுவதற்கு மிக இலகுவான வாழ்வாகும். கூடியமட்டும் தேவைகளைக் குறைக்கவேண்டுவது அவசியந்தான். அதுதான் சுகமான முறை உடையிலும் மறைப்பொருளிலும் சிக்கனத்தைக் கையாளுதலே நல்லமுறை. எளிய வாழ்வு உண்மையில் நமக்குச் சுதந்திரமானதும் இலகுவானதுமாகும். நீக்கக் கூடிய அனைத்தையும் நீக்கி வாழ்வதே எளிய வாழ்வு.

நாவலரும் விபுலாநந்த அடிகளாரும்

''ஈழத்தின் இரு கண்கள்'' எனப் போற்றப்படும் இப்பெருந்தகைகள் இருவரும் துறவுபூண்டு தொண்டு பல புரிந்தவர்கள்; தமிழ் நாட்டில் நன்கு மதிக்கப்பெற்றவர்கள்; நாவலரை ஆதீனங்கள் பாராட்டின. விபுலாநந்த அடிகளாரைப் பல்கலைக் கழகங்கள் பாராட்டின. நாவலர் தமிழுக்கும் சைவ சமயத்திற்கும். பணிபல புரிந்தார். விபுலாநந்தர் தமிழுக்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கும் அரும்பணிகள் ஆற்றினார். சமயத்துறையில் நாவலர் சைவசித்தாந்தியாக விளங்க விபுலாநந்தர் வேதாந்தியாகவும் சைவசித்தாந்தத் தெளிவுடையவராகவும் திகழ்ந்தார்.

விபுலாநந்தருக்கும் நாவலருக்கும் 1969இல் சிலை எடுப்பு விழாக்கள் நடைபெற்றன. இவ்விருவரது சிலை ஊர்வலங்கள் கொழும்பிலிருந்து மட்டக்களப்

பையும் யாழ்ப்பாணத்தையும் நோக்கி நடைபெற்றிருக்கின்றன. அப்போது இரு சிலைகளையும் வரவேற்று, கொழும்புவாழ் தமிழ் மக்கள் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் வரவேற்பு விழாக்களை நடாத்தி இருக்கின்றனர். இவ்விரு வரவேற்பு விழாக்களையும் ஒப்பிட்டு நோக்கி, விபுலாநந்தர் சிலை எடுப்பு விழாவிற்கு வருகை தந்த மக்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தமையைக் குறிப்பிட்டு, ஒரு செய்தி பின்வருமாறு வெளிவருவதாயிற்று:

''தமிழர்கள் எந்தப் பிரதேசத்தில் வாழ்ந்தாலும் இன ஒற்றுமைப்பாட்டுடன் நமது பெரியார்களைப் போற்ற வேண்டும் என்ற கருத்து, என் அடிமனத்தில் வலியுறுத்தியது. காரணம் அன்றைய விழாவிற்கு வந்திருந்தோர் தொகை மிகக் குறைவு. நல்லூர்த் தேர்த்திருவிழா அல்லது ஆடிவேல் விழா போலத் திரண்டு வந்து நாவலர் சிலையெடுப்பு விழாவினைக் கண்டுகளித்த நமது தமிழர்கள், ஏன் விபுலாநந்தரையும் அவ்வாறு சிறப்பிக்காமல் விடுத்தார்களென்று ஐயப்பட்டேன். ஆனாலும் தமிழருக்குள் இந்தப் பாகுபாடு கூடவே கூடாது.''

போலிகளும் முகமூடிகளும் நீக்கப்பட வேண்டும்; உண்மைகள் உணரப்படவேண்டும். சான்றோர் எவராயினும் எப்பகுதியைச் சேர்ந்தவராயினும் உரிய பாராட்டும் மதிப்பும் கொடுத்துப் போற்ற வேண்டும் என்பதே, இங்கு சுட்டப்பட வேண்டியதாகும். ✱

.... இக்காலத்திற் புறப்பொருளாராய்ச்சியே குறைந்து போயிற்று. இன்னன் என்றிரங்குகிற மன்னைக்காஞ்சி சரம கவிகளில் வெளிப்படுகிறது, யாக்கையுஞ் செல்வமும் இளமையும் நிலையா என்று அழுகிற அழுகையே தமிழ்வாணருக்கு இயல்பாயிற்று. நிலையாப் பொருள்களை விடுவாரோ மிகச் சிலர்; அவற்றைப்பற்றி யணைத்துக்கொண்டு தேடித் துய்ப்பதற்கு வலியின்மையால் ''நிலையா, நிலையா'' என்று பொய்க் காஞ்சி பாடி யிம்மை மறுமைச் சுகத்தை யிழப்பவரே மிகப் பலர். இனிப் பாடாண்டிணையை யவமதித்து ஆண்மையில்லா அசடர்களுக்குப் பாட்டிசைத்து அவர் தலைக்கடையிற் காத்திருந்து வன்சொற்களையே பரிசிலாகப் பெற்று மீளுகிற தமிழ்வாணர் பலர். இவ்வாறு இயல்பிற்றிரிபுபட்ட காஞ்சியும் பாடாணும் ஒழிய ஏனைய ஆண்டன்மைக்குரிய வாகை, தும்பை முதலிய புறப்பொருட் பகுதிகள் மறைந்தொழிந்து விட்டன. கவிநயவினிமையையும் பிறவினிமையையும் தருகிற அகப்பொருணறவினையுண்டு மதுவுண்டு மயங்கிய வண்டைப்போலச் செயலின்றிக் கிடந்தோம்; அடிமைத் தன்மையும் வந்தெய்திற்று. ஐயோ! இந்நிலைமை யினி வேண்டாம். வீரத்தையும் ஆண்மையையுந் தருகிற புறப்பொருளை நாடுவோம். தவராஜசிங்கமாகிய விவேகாநந்தசுவாமி சொல்லுகிறார்: ''எழுந்திருங்கள், சோம்பலையும் மூடத்தனத்தையும் வீசியெறிந்துவிட்டு வெளியே உலாவி உலகத்தின் ஏனைய பாகங்களிலுள்ள மாந்தர்கள் முன்னேற்றமடைந்துகொண்டு போவதைப் பாருங்கள். எத்தனை நாளைக்கு மூலையில் ஒதுங்கிக்கிடக்கப் போகிறீர்கள் நீங்கள் சுத்த வீரர்களின் வழிப்பிறந்தவர்கள் என்பதை மறந்துவிட்டீர்களா? சூரனுக்கு உயிர் துரும்பு; தேசமுன்னேற்றத்துக்காக உயிரையும் கொடுக்கத் தயாரா யிருக்கும் வாலிபர்கள் ஆயிரக்கணக்கான பேர் முன்வரவேண்டும். மேனிலையையடைவதற்கு முயலுவோம். அம்முயற்சியில் உயிர் போனாலும் போகட்டும்'' முந்நாளில் இருந்த நமது தமிழ்நாட்டுத் தாய்மார் எவ்வளவு வீரம் படைத்தவராக இருந்தார்கள்!

(விபுலாநந்த அடிகளார் எழுதிய 'மேற்றிசைச் செல்வம்' என்ற கட்டுரையிலிருந்து.)

ஆதிகால இலங்கைத் தமிழர் வரலாறு-
ஒரு மீள் பரிசீலனை

ப. புஷ்பரட்ணம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

அறிமுகம்

ஒரு இனத்தின் வரலாறானது அவ்வினம் தொடர்பாகக் கிடைக்கும் பல்வேறு சான்றுகளின் அடிப்படையிலிருந்து கட்டியெழுப்பப்பட வேண்டிய தொன்றாகும். இதிலே பழைய மரபுகள், வரலாற்றுக் கதைகள், ஐதீகங்கள் என்பன கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் அதேவேளை புதிய தரவுகளையும், விஞ்ஞானபூர்வமான முடிவுகளையும் வரலாற்றாய்வில் முக்கியப்படுத்திக் கொள்வது அவசியமாகும். இந்த அடிப்படையில் இலங்கையின் ஆதிகாலத் தமிழர் வரலாறு பற்றிய பாரம்பரிய கருத்துக்களை நோக்குகின்றபோது, அவை மறுபரிசீலனை செய்யப்படவேண்டிய தொன்றாகவே தென்படுகின்றன. இலங்கையின் ஆதிக்குடிகள் பற்றிக் கூற எழுந்த முதல் பாளி இலக்கியமான மகாவம்சம் ஆதியில் இங்கு வாழ்ந்தவர்கள் நாகரீகமற்ற 'இயக்கர், நாகர்' எனவும்பின்னர் சிங்கள மக்களின் மூதாதையினரான ஆரியர் (விஜயன் குழுவினர்) வடஇந்தியாவில் இருந்து குடியேறினர் எனவும், தமிழர்கள் தென்னிந்தியாவிலிருந்து பிற்காலத்தில் அவ்வப்போது படையெடுப்பாளராக வந்து குடியேறிய சிறு பிரிவினர் எனவும், கூறுகிறது. மகாவம்சத்தின் இக்கூற்றை உண்மையென ஏற்றுக்கொண்ட வரலாற்றறிஞர்கள் பலர் இலங்கையின் நாகரீகவரலாறு சிங்கள மக்களின் வருகையோடு ஏற்பட்டதெனவும், தமிழர்கள் இலங்கைக்கும் தமிழ் நாட்டிற்குமிடையே இருந்த அரசியல், வர்த்தகத் தொடர்பால் முக்கிய நகரங்களிலும், துறைமுகங்களிலும் வந்து குடியேறிய சிறு பிரிவினர் எனவும் விளக்கமளித்துள்ளனர். அதாவது இரு இன மக்களையும் இந்தியாவிலிருந்து குடியேறியவர்கள் எனக் கூறும் இவர்கள் சிங்கள மக்களின் வரலாற்றை இந்நாட்டோடு தொடர்புபடுத்திக் கூறும்பொழுது, இங்கிருந்த தமிழர்களினால் ஏற்பட்ட சனத்தொகைப் பெருக்கம், பண்பாட்டு அபிவிருத்தி என்பவற்றை மனக்கருத்தில் கொள்ளாது, அவர்களுடைய வரலாற்றைத் தென்னிந்தியாவுடன் இணைத்துப் பார்ப்பதிலேயே அதிக கவனம் செலுத்தினர். ஆனால், சமீப காலமாக இலங்கையில் வளர்ச்சியடைந்து வரும் தொல்லியல் (Archaeology), மானிடவியல்(Anthropology), சமூகவியல் (Sociology) போன்ற ஆய்வுகள்

மகாவம்சம் கூறுவதுபோல் சிங்கள மக்களின் மூதாதையினர் வட இந்தியாவிலிருந்து குடியேறவில்லையென்பதையும், இரு இன மக்களின் மூதாதையினரும் ஏதோ ஒரு காலப்பகுதியில் தென்னிந்தியாவில் இருந்து குடியேறினர் என்பதையும், காலப் போக்கில் இம்மக்கள் மொழிரீதியாகப் பிரிந்து இரு இன மக்களாக இந்நாட்டில் வாழ்ந்து வருகின்றனர் என்பதையும் கோடிட்டுக் காட்டுகின்றன. இம்முடிவுகளை அடிப்படையாக வைத்தே ஆதிகால இலங்கைத் தமிழர் வரலாறு பற்றிய சில கருத்துக்கள், இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

ஆதிக்குடிகள்

இலங்கையில் இதுவரை அறியப்பட்டுள்ள தொல்லியற் சான்றுகளின் அடிப்படையில், இங்குவாழ்ந்த காலத்தால் முந்திய மக்கள் இடைக்கற்காலப் பண்பாட்டிற்கு (Mesolithic Culture) உரியவர்கள் என, அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இம்மக்கள் மலைநாடு தொட்டு தாழ்நிலப்பகுதி வரையுள்ள நீர் நிலைகளையும் கடற்கரைப்பகுதிகளையும் அண்டி ஓரளவு செறிவாக வாழ்ந்துள்ளனர் என்பதை இரத்தினபுரி, பலாங்கொடை, கித்துள்கொட, அனுராதபுரம், முல்லைத்தீவு, திருக்கோணமலை, மாங்குளம், மாதோட்டம், பூநகரி ஆகிய இடங்களில் கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.[1] இப்பண்பாட்டு மக்களுக்கும் தமிழ்நாடு — திருநெல்வேலி, தேரி (மணற்குன்றுகள்) கலாசார மக்களுக்குமிடையே மொழி, இனம், ஆயுதத்தொழில் நுட்பம்[2] என்பனவற்றில் அதிக ஒற்றுமை காணப்படுகிறது. இலங்கையில் இப்பண்பாட்டின் தோற்றம் கி.மு. 28,000 ஆண்டுகள் எனவும், தமிழ்நாட்டில் இது கி.மு. 30,000 ஆண்டுகள் எனவும் சி-14 காலக்கணிப்பு மூலம் அறியப்பட்டுள்ளது.[3] இதனால் இலங்கையின் ஆதிகால மக்கள் தமிழ்நாட்டிலிருந்தே புலம் பெயர்ந்திருக்கலாம் எனத் தொல்லியலாளர் கருதுகின்றனர். மகாவம்சம் கூறும் இயக்கர், நாகர் இப்பண்பாட்டு மக்கள் எனக் கருதும் மானிடவியலாளர் இவர்களைத் தென்னிந்தியாவில் வாழ்ந்த ஆதிஒஸ்ரலோயிட் இனவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறுகின்றனர்.

இப்பண்பாட்டு மக்களைத் தொடர்ந்து பெருங்கற்காலப் பண்பாட்டிற்கு (Megalithic Culture) உரிய திராவிட மக்கள் கி.மு. 1000 இல் இருந்து வாழ்ந்ததற்கான தடயங்கள், இலங்கையின் பல்வேறு பாகங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[4] இவற்றுள் பொம்பரிப்பு (புத்தளம்), மாந்தை, அனுராதபுரம், வவுனியா, திசமாறகம, கதிரவெளி (மட்டக்களப்பு), கந்தரோடை, வல்லிபுரம், ஆனைக்கோட்டை, பூநகரி ஆகிய இடங்கள் இப்பண்பாட்டின் முக்கிய மையங்களாகக் கருதப்படுகின்றன. பெருங்கற்காலப் பண்பாடு என்பது, திராவிட மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்வதிற் பின்பற்றிய ஒரு பண்பாட்டு அம்சத்தைக் குறிப்பதாகும். இவ்வடக்க முறை நாட்டின் பௌதிகத் தன்மைக்கு ஏற்ப பெரிய கற்களையும், தாழிகளையும் பயன்படுத்திப் பல்வேறு வடிவங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை, மேற்கூறப்பட்ட மையங்களிற் கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இவ்வடக்க முறையில், இறந்தவர்கள் வாழ்ந்த காலத்திற் பயன்படுத்திய பல பொருட்களையும் சேர்த்து அடக்கம் செய்யப்பட்டுள்ளதனால் இவை பற்றிய ஆய்வானது அக்கால மக்களது பண்பாடு பற்றிய ஆய்வாக அமைகிறது. இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் இப்பண்பாட்டுடன்தான் அரசதோற்றம், நீர்ப்பாசனத்துடன் கூடிய விவசாயம், இரும்பின் உபயோகம், கறுப்புச் சிவப்பு மட்பாண்டப் பயன்பாடு என்பன தோற்றம் பெற்றுள்ளன. இலங்கையிற் பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இப்பண்பாடு பற்றிய சான்றுகள் இலங்கையின் நாகரீக வரலாறும், சிங்கள மக்களின் மூதாதையினரும் வடஇந்தியத் தொடர்பால் ஏற்பட்டதென்ற பாரம்பரியக் கருத்தை முற்றாக நிராகரித்துள்ளன.[5] இப்பண்பாடு தொல்லியல், மானிடவியல், சமூகவியல் ரீதியாகத் தென்னிந்தியாவுடன் சிறப்பாகத் தமிழ் நாட்டுடன் நெருங்கிய ஒற்றுமைத்தன்மையைக் கொண்டுள்ளது. அதிலும் ஆதிச்ச நல்லூருக்கு எதிரே அமைந்த மாந்தையும், அரிக்க மேட்டிற்கு எதிரே அமைந்த பொம்பரிப்பும் ஒரே பிராந்தியம் எனக் கூறக்கூடிய அளவிற்கு, இப்பண்பாட்டில் அதிக ஒற்றுமை இருப்பதாகத் தொல்லியலாளர் கூறுகின்றனர்.[6] இதனால் இடைக்கற்காலப் பண்பாட்டைப் போல் இப்பண்பாடும் பெருமளவுக்குத் தமிழ்நாட்டில் இருந்து பரவியதாகக் கருத இடமுண்டு. தென்னிந்தியாவில் இப்பண்பாடு தோற்றம் பெறப் பெருமளவுக்கு இப்பண்பாட்டைப் பின்பற்றியிருந்த மத்திய தரைப் பிரதேச மக்களின் புலப்பெயர்ச்சி காரணம் என, நீண்ட காலமாகக் கூறப்பட்டு வந்தது. ஆனால், அண்மைக்காலங்களில் இக்கருத்து பெருமளவிற்கு நிராகரிக்கப்பட்டு, இரு நாடுகளுக்குமிடையே நிலவிய வர்த்தக கலாசாரத் தொடர்பினால் தென்னிந்தியாவில் வாழ்ந்த புதிய கற்கால மக்களே இந்நாடுகளிடமிருந்து இவற்றைக் கற்றுப் பின்னர் பெருங்கற்காலக் கலாசாரத்தை வளர்த்தெடுக்க உதவினர் எனக் கூறப்படுகிறது.[7] இக்கருத்தையே அறிஞர் பலரும் இன்று ஏற்றுள்ளனர். இலங்கையில் இப்பண்பாட்டிற்குரிய சின்னங்கள் பல இடங்களில் இடைக்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்களின் மேற்படையில் காணப்பட்டாலும், வேறுபல இடங்களில் புதிய குடியேற்றத்தின் ஆரம்பச் சின்னங்களாகக் காணப்படுகின்றன. இதனால் இலங்கையில் இப்பண்பாடு பரவ திராவிட மக்களது புலப்பெயர்ச்சியை ஒரு காரண

மாகக் கொள்ளும் அதே வேளை, இருநாடுகளுக்கு மிடையிலான பண்பாட்டுத் தொடர்பையும் ஒரு காரணமாகக் கொள்ளவேண்டியுள்ளது.

பல மொழிப் பண்பாட்டின் தோற்றம்

தென்னாசியாவிற் பெருங்கற்காலப் பண்பாடு பற்றிய சான்றுகள் பரவலாகக் காணப்பட்டாலும், அது திராவிட மொழி பேசும் பிராந்தியமான தென்னிந்தியாவில் சில தனித்துவமான அம்சங்களுடன் வளர்ச்சியடைந்ததொன்றாகும்.[8] இங்கு தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்ற வேறுபாடுடைய மொழிப் பண்பாடுகள் தோற்றம் பெற பண்பாடே அத்திவாரமாக இருந்துள்ளது. இது போல் இலங்கையிலும் தமிழ், சிங்களப் பண்பாட்டின் தோற்றம் இப்பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் ஏற்பட்டதாகத் தொல்லியலாளர் கூறுகின்றனர். தமிழ்நாட்டில் ஆதித்திராவிட அடிப்படையில் இருந்து தமிழ்மொழி செம்மைப் படுத்தப்பட்டுச் சங்க இலக்கியம் படைக்கும் அளவிற்கு இம்மொழி பெருங்கற்காலப் பண்பாட்டின்முதிர்ச்சி நிலையிலே தோன்றியதாக, அறிஞர் கூறுவர். இதனால்தான் தென்னிந்தியாவில் தொன்மையான இலக்கியவரலாறுகொண்ட நாடு என்ற சிறப்பு தமிழ்நாட்டிற்கு உண்டு. இதை மேலும் உறுதிப்படுத்துவதில் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களில் இருந்து கிடைத்த சாசனங்கள் சான்றாக அமைகின்றன. தென்னாசியாவில் எழுத்துக்களின் தோற்றக் காலத்தையிட்டு முரண்பட்ட கருத்துக்கள் நிலவினாலும் கி.மு. 3ஆம் நூற்றாண்டளவில் அசோகன் ஆட்சியுடன் பிராமி என்ற வரிவடிவம் பரவலாகப் பயன்படுத்தப்பட்டதற்குப் போதிய சான்றுகள் உண்டு. இதை அசோகபிராமி எனவும், வடபிராமி எனவும் அறிஞர் அழைத்துள்ளனர். இதையொத்த வரிவடிவங்கள் சமகாலத்தில் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், அசோக பிராமியில் காணப்படாத தமிழுக்கே சிறப்பான இ,ம,ழ,ற,ன,ள போன்ற எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவை தமிழ்ப் பிராமி எனவும், திராவிடி எனவும், அழைக்கப்படுகின்றன.[9] இச்சாசனங்களை முதலில் வாசித்த வெங்கோபராவ், கிருஷ்ணராவ், ராவ்வாகிப் போன்ற அறிஞர்கள் இந்தியாவின் ஏனைய பிராந்தியங்களைப்போல் இச்சாசனங்களும் பிராகிருத மொழியில் எழுதப்பட்டதாகக் கூறினர்.[10] இவர்களைத் தொடர்ந்து ஆய்வு செய்த சுப்பிரமணிய ஐயர் இச்சாசனங்களிற் பல தமிழ்ப்பெயர்கள் இருப்பதைக் கொண்டு, இவை தமிழ் மொழியிற் பிராகிருதச் சொற்கள் கலந்து எழுதப்பட்டன எனக் கூறினார். 1968 இல் புகளூர் கல்வெட்டுக்களை ஆராய்ந்த ஐராவதம் மகாதேவன் அவர்கள், கல்வெட்டிலுள்ள தமிழ் மொழியின் சிறப்பை மிக விரிவாக எடுத்துக்கூறியதுடன், சங்க இலக்கியத்தில் வரும் சில வரலாற்றுச் செய்திகளை இக்கல்வெட்டிலிருந்து எடுத்துக் காட்டியுள்ளார்.[11] இச்சான்றுகள், கி.மு. 3 ஆம் நூற்றாண்டிற்கு முன்பாகவே தமிழ்நாடு (இன்றைய கேரளம் உட்பட) மொழி ரீதியாகத் தனியொரு பிராந்தியமாக விளங்கியதென்பதை, எடுத்துக்காட்டுகின்றன.

இலங்கையில் தமிழ்மொழியும் தமிழரும்

இலங்கையிலே தமிழ் இலக்கியம் சங்க காலத்திலிருந்து வளர்ந்து வருவதாகக் கொள்ளும் மரபு காணப்படுகிறது. அவ்வாறு கூறுவதற்குச் சங்ககாலப் புலவர்கள் சிலர் இலங்கையைச் சேர்ந்தவர்களாக இருந்ததே காரணம். வெவ்வேறு காரணங்களைக் காட்டித் தொல்காப்பியர், முரஞ்சியூர் முடிநாகராயர், அம்மூவனார், ஈழத்துப் பூதந்தேவனார் முதலியோர் இலங்கையைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்பட்டுள்ளது.[12] இவர்களுள் ஈழத்துப் பூதந்தேவனார் இலங்கையைச் சேர்ந்தவர் என்பதைப் பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இலங்கையைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாடு சென்று சங்ககாலப் புலவர்களாகப் புகழ் பெற்றுள்ளனர் என்றால், அவர்களது சொந்த நாட்டிலே தமிழ்மொழி வளர்ச்சி கொண்ட மொழியாக இருந்ததே காரணம். இதை உறுதிப்படுத்தும் முக்கிய சான்றுகளில் ஒன்றாக, இலங்கையிற் கிடைத்த காலத்தால் முந்திய பிராமிச் சாசனங்களைக் கொள்ளலாம். இலங்கையில் இதுவரை 1500 இற்கு மேற்பட்ட பிராமிச் சாசனங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுட் பெரும்பாலானவை பிராகிருத மொழியிற் பௌத்தமதம் சார்ந்த செய்திகளைக் கூறுகின்றன. இச்சாசன மொழி இங்கிருந்த திராவிட எலு மொழியுடன் கலந்தே பிற்காலத்திற் சிங்கள மொழி தோற்றம் பெற்றது இதனாற் சாசனவியலாளர் சிலர், சிங்கள மக்களின் மூதாதையினர் வட இந்தியாவிலிருந்து வந்ததற்கு இச்சாசனங்களை ஒரு சான்றாகவும் காட்டியுள்ளனர்.[13] ஆனாற் பௌத்த மதமும், அசோக பிராமியும் இலங்கைக்கு அறிமுகமாவதற்கு முன்னர் தமிழ்மொழியும், தமிழ்ப் பிராமி எழுத்துக்களும் இலங்கையிற் புழக்கத்தில் இருந்துள்ளன என்பதற்கு இச்சாசனங்களையே சான்றாதாரமாக இங்கு காட்டலாம்.

இலங்கைப் பிராமிச் சாசனங்களை ஆராய்வதில் ஆரம்பத்தில் அதிக அக்கறை காட்டிய பேராசிரியர் பரணவிதான அவர்கள், மகாவம்சத்தின் வரலாற்றை ஏற்றுக் கொண்டதால் இச்சாசனங்களுக்கு வட இந்தியப் பின்னணியில் விளக்கம் கொடுத்தார். தமிழ்நாட்டில் இச்சாசனங்கள் பற்றிய ஆய்வு வளர்ச்சியடைந்ததைத் தொடர்ந்து, அந்நாட்டு அறிஞர்கள் பலரும் இலங்கையில் அதன் செல்வாக்கையும் சுட்டிக் காட்டத் தொடங்கினர். இன்று தென்னிலங்கை

அறிஞர்கள் பலர் இதை ஏற்று, அதற்குப்புதிய விளக்கம் கொடுத்து உள்ளனர். இருநாடுகளுக்குரிய சாசனங்களை ஒப்பிடுகின்றபோது, பல்வேறு அம்சங்களில் அவை வட பிராமி எழுத்துக்களில் இருந்து வேறுபட்டுத், தமக்குள் ஒற்றுமை கொண்டு காணப்படுகின்றன. சாசனங்களை எழுதுவதற்குப் பயன்படுத்தப் பட்டுள்ள கற்குகையின் தோற்றமும், ஓரிரு வசனங்களில் எழுதப்பட்ட வரிவடிவ அமைப்புக்களும், ஒரே பிராந்தியம் என மயங்குமளவிற்கு நெருங்கிய ஒற்றுமை உடையது எனப் பெர்ணாந்தோ என்ற அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.[14]

இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளில் வரும் அ, இ, ம, ய, ப, த, ச, க, உ ள ஆகிய ஒலிப்பெறுமான எழுத்துக்கள் வட பிராமிச் சாசனங்களிற் காணப்பட்டாலும், வடிவ அமைப்பிலே தமிழ்ப்பிராமி எழுத்துக்களையே ஒத்துக் காணப்படுகின்றன. அத்துடன் நெடில், குறில் ஆகிய ஒலிப்பெறுமானங்களைச் சுட்டி நிற்கும் அடையாளங்கள், கூட்டெழுத்தற்ற தன்மை என்பனவும் இலங்கைப் பிராமியைத் தமிழ் நாட்டுப் பிராமியுடன் ஒற்றுமைப் படுத்தும் மற்றொரு அம்சமாகும். வட பிராமியிலிருந்து தமிழ்ப் பிராமியை வேறுபடுத்திக் காட்டும் பிரதான அம்சம், தமிழ்மொழிக்குரிய சிறப்பெழுத்துக்கள் தமிழ்நாட்டிற் பயன்படுத்தப்பட்டிருப்பதாகும். இவ்வெழுத்துக்கள் சமகாலத்தில் இலங்கையில் எண்ணிக்கையிலே தமிழ் நாட்டைவிடக் கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வொற்றுமைகளை அவதானித்த பெர்ணாந்தோ,[15] சத்தமங்கல கருணரத்தின,[16] ஆரிய அபயசிங்கா[17] போன்ற அறிஞர் பௌத்தமதத்துடன் வட பிராமி எழுத்துக்கள் இலங்கையில் அறிமுகமாவதற்கு முன்னர், தமிழ் நாட்டிலிருந்து பரவிய தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் இலங்கையிலே புழக்கத்தில் இருந்துள்ளதெனக் கூறினர். இதன்மூலம் சிங்களமொழியின் தோற்றத்திற்கு மூலமாக இருந்த பிராகிருத மொழிச் சொற்கள் இலங்கையில் அறிமுகமாவதற்கு முன்னர் தமிழ்மொழியும் தமிழ்வரிவடிவமும் பயன்பாட்டிலிருந்ததெனக் கூறலாம். இதை மேலும் இச்சாசனங்களில் வரும் தமிழ்ப் பெயர்கள் உறுதிப்படுத்துகின்றன.

தமிழ்நாட்டுப் பிராமிக் கல்வெட்டில் வரும் பட்டப்பெயர், உறவுப்பெயர், இனக்குழுக்களைக் குறிக்கும் பெயர் என்பவற்றை ஆராய்ந்த அறிஞர்கள் பலர், இவற்றைச் சங்க இலக்கியத்தில் வரும் பெயர்களுடன் தொடர்புபடுத்திக் காட்டினர். இதையொத்த பெயர்களை இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் அவதானித்த பேராசிரியர் மகாலிங்கம் அவர்கள், இவை மேலும் விரிவாக ஆராயப்பட வேண்டும் எனச் சுட்டிக் காட்டினார்,[18] அண்மையில் இந்த நோக்கில் இலங்கைப் பிராமிக்கல்வெட்டுக்களை ஆராய்ந்த பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை[19], கலாநிதி. சிற்றம்பலம்[20] போன்றோர் பல பெயர்களைத் தமிழ்ப்பெயர்களாக அடையாளம் கண்டுள்ளனர். குறிப்பாக இலங்கைப் பிராமிக்கல்வெட்டில் வரும் பருமக, வேள, ஆய், பரத, உதி போன்றபெயர்களை சங்க இலக்கியத்தில் வரும் பெருமகன், வேள், ஆய், பரதவர், உதியன் போன்ற பெயர்களை ஒத்தவையெனச் சுட்டிக்காட்டினர். இவ்வொற்றுமை பெயரடிப்படையில் மட்டுமன்றி அவர்களுடைய சமூக அந்தஸ்து, தொழில், அரசியல் நிலைப்பாடு என்பவற்றிலும் ஒத்துக் காணப்படுகிறது. சங்க இலக்கியத்தில் வரும் ஆய், வேள், பரதவர் போன்ற இனக்குழுக்கள் பெருங்கற்காலப் பண்பாட்டு வழிவந்தவர்கள் எனக் கூறப்படுகிறது. இலங்கையிலும் இப்பண்பாடு நிலவியதினால் அதன் வழிவந்த இனக்குழுக்களே தமிழ் நாட்டுடன் கொண்ட பண்பாட்டுத் தொடர்பால் இப்பெயர்களைத் தமக்கும் சூடிக்கொண்டன எனக் கூறலாம். தமிழ்ச் சமூக அமைப்பு முறை பற்றிக் கூறும் சங்க இலக்கியத்தில் மருமகன், சகலன் போன்ற உறவுப் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இதைச் சில பிராமிச் சாசனங்களும் உறுதிப்படுத்துகின்றன. இத்தகைய ஒரு உறவு முறை சமகாலத்தில் இலங்கையிலும் இருந்ததென்பதை, இங்கு கிடைத்த 12 இற்கு மேற்பட்ட சாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன.[21]

இலங்கையில் பெரும்பாலான சாசனங்கள் கற்களில் எழுதப்பட்டிருந்தாலும் சில சாசனங்கள் மட்பாண்டங்களில் எழுதப்பட்டிருந்தமைக்குச் சான்றுகள் உண்டு. இத்தகைய சாசனங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களிலிருந்து கண்டுபிடிக்கப் பட்டிருப்பதினால், அப்பண்பாட்டுவழிவந்த மக்கள் முதலில் மட்பாண்டங்களிலேயே சாசனங்களை எழுதியிருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு.

அண்மையில் இலங்கையின் புராதன இராசதானி அமைந்த அனுராதபுரத்தில் அகழ்வாய்வினை (Excavation) மேற்கொண்ட சிரான் தெரணியகல என்ற தொல்லியலாளர், பெருங்கற்காலச் சின்னங்களுடன் கிடைத்த மட்பாண்டச் சாசனங்களை அடிப்படையாக வைத்து, இலங்கையில் பிராமி எழுத்துக்களின் தோற்றம் கி. மு. 8 ஆம் நூற்றாண்டு என்ற கருத்தை வெளியிட்டார். இக்கருத்தைப் பலர் ஏற்காவிட்டாலும் இச்சாசனத்தில் உள்ள வாசகங்களும், வரிவடிவங்களும் தமிழ்நாட்டுத் தொடர்பை வலியுறுத்துவதாகக் கூறினார்.[22] மிகச் சமீபத்தில் பூநகரியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வின் போது (Explorations) இவ்வாறான மட்பாண்டச் சாசனங்கள் பல உடைந்தும் உடையாத நிலையிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவ்வளவு பெருந்தொகையான மட்பாண்டச் சாசனங்கள் இலங்கையின் பிறபாகங்களில், அதுவும் சாதாரண தொல்லியல் மேலாய்வின்போது கிடைத்ததாகத் தெரிய

வில்லை. இச்சாசன வரிவடிவங்கள் பல தமிழ் நாட்டை ஒத்த வரிவடிவங்களாக இருப்பதுடன், அவற்றுள் ஈழம், வேளீர் பற்றிய சாசனங்கள் தமிழ் மொழியிலும் அமைந்துள்ளன.[23] இவற்றுள் வேளீர் என்ற சாசனத்தை ஆராய்ந்த தமிழ்நாட்டின் முதன்மைச் சாசனவியலாளரான ஐராவதம் மகாதேவன் அவர்கள், கி. மு. 3 ஆம் 2 ஆம் நூற்றாண்டிற் பூநகரியிலே தமிழ்மொழியும் தமிழ்வரிவடிவமும் இருந்ததிற்கு இது மேலும் ஒரு புதிய சான்று என்றார்.[24] சாதாரண மக்களின் பாவனைப் பொருட்களான மட்பாண்டங்களில் இவ்வரிவடிவங்கள் இடம் பெற்றதைக் கொண்டு, இற்றைக்கு 2300 வருடங்களுக்கு முன் தமிழ்மொழி பேசிய மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை மேலும் உறுதிப்படுத்த முடிகிறது. இப்பின்னணியிலேதான் ஆனைக்கோட்டைப் பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்களுடன் கிடைத்த கோவேதன் பற்றிய சாசன முத்திரையையும் நோக்க வேண்டியுள்ளது.

தமிழ்ச் சிற்றரசுகள்

தென்னிந்தியாவிற் சிற்றரசுகளும் குழு ஆட்சி முறையும் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோற்றம் பெற்றன. இப்பண்பாட்டு வழிவந்த சமூகக் குழுக்களைச் சங்க இலக்கியம் பரதவர் கோசர், ஆவியர், ஓவியர், வேளீர், ஆயர், கள்வர், மறவர், குறவர், கோசர் எனப் பலவாறு கூறுகிறது. இக்குழு ஆட்சிதான் பின்னர் வந்த மூவேந்தர் ஆட்சிக்கு வழிவகுத்தது. இவ்வினக்குழுக்களிடையே ஆட்சியதிகாரம் ஆள்புலம் என்பதையிட்டுப் போர்கள் நடந்ததைப் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய போர்க்கருவிகள் உறுதிப்படுத்துகின்றன. இலங்கையிலும் இதையொத்த பெருங்கற்காலப் பண்பாடு பல்வேறு இடங்களிலும் நிலவியதற்குப் போதிய தடயங்கள் கிடைத்திருப்பதினாலேயே, தென்னிந்தியாவை ஒத்த ஆட்சிமுறை இங்கும் இருந்ததெனக் கூறலாம், கி. மு. 6 ஆம் நூற்றாண்டில் விஜயன் ஆட்சியுடன் ஒரு மைய அரசு தோன்றியதாக மிகைபடக் கூறிய மகாவம்சம்கூட, அனுராதபுரத்திற்குத் தெற்கிலும் வடக்கிலுமிருந்த சிறறரசுகள் பற்றிக்கூறுகிறது. இந்நூல் வடக்கிலிருந்த அரசை நாகதீபம் (நாகதீப) எனவும், மணிமேகலை நாகநாடு எனவும் கூறுகின்றது. இது யாழ்ப்பாணத்தைக் குறித்திருக்கலாம் என்பதை, வல்லிபுரத்திற் கிடைத்த கி. பி. 2 ஆம் நூற்றாண்டிற்குரிய பொற்சாசனம் உறுதிப்படுத்துகிறது.[25] கி. மு. 6 ஆம் நூற்றாண்டில் புத்தர் இலங்கைக்கு வந்தபோது நாகதீப மன்னர்களிடையே ஏற்பட்ட சிம்மாசனப் போராட்டத்தைத் தீர்த்துவைத்ததாக மகாவம்சம் கூறுகிறது. புத்தர் இலங்கைக்கு விஜயம் செய்தது கட்டுக்கதையாக இருப்பதால், இக்கூற்றை உண்மையென ஏற்பது கடினம். ஆயினும் மகாவம்சம் எழுதப்பட்ட கி. பி. 6 ஆம் நூற்றாண்டில் நாகதீபம் தனித்து இனம் காணப்பட்டதை இக்கூற்று உணர்த்துவதாகக் கருத இடமுண்டு.

கி. மு. 3 ஆம் நூற்றாண்டில் இருந்து இலங்கையிற் பயன்படுத்தப்பட்டு வந்த பிராமிச்சாசனங்கள் தென்னிந்தியாவையொத்த அரசமுறைமை தோன்றியதை உறுதிப்படுத்துகின்றன. இச்சாசனங்கள் அக்கால சமூகத்தில் செல்வாக்குப் பெற்ற பிராமணர்கள், வர்த்தகர்கள், கலைஞர்கள், நில உடைமையாளர் என்போர் பௌத்த சங்கத்திற்கு அளித்த தானம் பற்றிக் கூறுகின்றன. இதிற் பெரும்பாலான சாசனங்களிற் தானமளித்தவரது மூதாதையினர் பற்றியும், அவர்களது சமூக அந்தஸ்து, தொழில், சமயம், அரசியல் அந்தஸ்து என்பன பற்றியும் கூறப்பட்டுள்ளது. இத்தகைய தலைவர்கள் பலர் ஆய், வேள், பருமக, கமணி முதலான பட்டப்பெயர்களைச் சூடியிருந்தனர். சங்ககாலத்தில் மூவேந்தர் ஆட்சிக்கு உட்பட்ட தமிழகத்தில் 300இற்கு மேற்பட்ட சிற்றரசர்கள் ஆட்சி செய்ததற்குச் சான்றுகள் உண்டு.[26] இவர்களில் ஆய், வேளீர் என்ற நில உடைமை வகுப்பினர் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தனர். இவர்களில் வேளீர் என்ற சிற்றரசர்கள் பலர் மூவேந்தர் ஆட்சிக்கு உட்படாது சுதந்திர அரசர்களாக ஆட்சி புரிந்தனர். புறநானூற்றில் '' பண்டுகெழு வேந்தரும் வேளீர் '' என்று வேந்தரும், வேளீர் எனப் பதிற்றுப்பத்திலும் வரும் சான்றுகள் சங்ககால அரசியலில் இவர்கள் பெற்றிருந்த செல்வாக்கிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இலங்கையிற் சிற்றரசர்களாக அடையாளம் காணப்பட்ட பலர் வேள் (வேள), ஆய் (ஆய) முதலான பட்டங்களைச் சூடியிருந்தனர். இவை தமிழ்ப் பெயர்களாக இருப்பதுடன் இவர்களது சமூகநிலை, அரசியல் அந்தஸ்து என்பனவும் சங்ககால ஆய், வேள் சிற்றரசர்களை ஒத்துக் காணப்படுகிறது.[27] இவற்றுள் வேள் என்ற சிற்றரசனைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள 'ள்' என்ற பிராமி எழுத்து தமிழ்மொழிக்கேயுரிய சிறப்பெழுத்தாகும். இவற்றை இலங்கையையும் தமிழ்நாட்டையும் தவிரப் பிற இந்திய மாநிலங்களிற் காணமுடியாது. இவ்வெழுத்தைப் பெரிய புளியங்குள (வவுனியா)ப் பிராமிக் கல்வெட்டில் அவதானித்த பாக்கர் என்ற ஆங்கில நாட்டவர், ஆதியிலே தமிழர் இங்கு வாழ்ந்ததற்கு இது ஒரு சான்று என்றார்.[28] இதுவரை ஆய், வேளீர் என்ற சிற்றரசர்களைக் குறிக்கும் 40 இற்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் அனுராதபுரம், மகாகமை, களனி, வவுனியா, பெரியபுளியங்குளம், திருமலை, மட்டக்களப்பு முதலான இடங்களிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அண்மையில் வேளீர் என்றபெயர்கொண்ட சாசனமொன்று பூநகரியிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச்சாசனத்தை ஆராய்ந்த தமிழ்நாட்டுச் சாசனவியலாளரான மகாதேவன் அவர்கள், கி. மு. 3 ஆம் 2 ஆம் நூற்றாண்டில் சங்ககாலத்தை ஒத்த வேளீர் என்ற சிற்றரசு இங்கிருந்ததை இது உறுதிப்படுத்துவதாகக் கூறியுள்ளார்.[29] எனவே சாசனங்களை அடிப்படையாக வைத்து கி. மு. 3 ஆம் நூற்றாண்டில் இருந்து அனுராதபுரத்திற்குத் தெற்கிலும், வடக்கிலும் பல தமிழ்ச் சிற்றரசுகள் இருந்ததெனக் கூறமுடியும். இவைபோன்ற சிற்றரசுகளின் தலைவர்களாக இருந்த சிங்கள மன்னர்கள் தென்னிலங்கையிலிருந்து படையெடுத்து அனுராதபுரத்தைக் கைப்பற்றி ஆட்சிபுரிந்ததாக மகாவம்சம் கூறுகிறது. ஆனால் அனுராதபுரத்திற்குத் தெற்கிலோ வடக்கிலோ இருந்து தமிழ்ச் சிற்றரசுகள் அனுராதபுரத்தைக் கைப்பற்றியதாக இந்நூல் கூறவில்லை. மாறாக அனுராதபுரத்தில் ஆட்சிசெய்த தமிழ் மன்னர்கள் அயல்நாட்டிலிருந்து படையெடுத்த ஆக்கிரமிப்பாளர்கள் என்ற பொருள்படக் கூறுகிறது. இது இலங்கையிலே தமிழர் தொடர்பாகக் கிடைத்துள்ள தொல்லியற் சான்றுகளுக்கு முற்றிலும் முரணாக உள்ளது.

அனுராதபுரத்திலே தமிழ் மன்னர்களின் ஆட்சி

அனுராதபுரத்தில் ஆட்சிசெய்த முதல் தமிழ் மன்னர்களாக சேன, குத்திக என்போர் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்கள் அனுராதபுரத்தில் ஆட்சி செய்த சூளதீசனை வெற்றிகொண்டு 22 வருடங்கள் (கி. மு. 177 - 155) நீதி தவறாது ஆட்சி புரிந்ததாக மகாவம்சம் கூறுகிறது.[30] இவர்களின் பெற்றோர்கள் குதிரைவர்த்தகர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால் இதை அரசசார்பற்ற படையெடுப்பாக வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். இம் மன்னர்களைத் தொடர்ந்து மீண்டும் ஒரு தமிழர் படையெடுப்பு அசேலன் ஆட்சியில் இடம்பெற்றது. சோழ உயர் குடியிற் பிறந்த எல்லாரா (எல்லாளன்) என்ற தமிழன் அனுராதபுரத்தில் ஆட்சிசெய்த அசேல மன்னனை வெற்றி கொண்டு 44 ஆண்டுகள் (கி. மு. 145 - 101) தொடர்ச்சியாக ஆட்சிசெய்தான்.[31] அனுராதபுரகால அரசியல் வரலாற்றில், நீண்டகாலம் ஆட்சிபுரிந்த முதல் மன்னன் என்ற பெருமை இவனுக்குரியது. இவனது நெறிதவறாத, நீதிமாறாத ஆட்சி பற்றிப் பல கதைகள் கூறப்பட்டுள்ளன. இவை மனுநீதி கண்ட சோழன் கதைக்கு ஒப்பானவை என அறிஞர் கொள்வர். இவன் தனது ஆட்சியிற் பௌத்த மதத்திற்கு ஆதரவு அளித்த போதிலும், தன் பழைய மதநம்பிக்கையைக் கைவிடவில்லையென மகாவம்சம் கூறுகிறது. பேராசிரியர் கைகர் அவர்கள் இப்பழைய மதநம்பிக்கையென்பது இந்து மதத்தையே எனக், குறிப்பாகச் சுட்டிக் காட்டியுள்ளார். எல்லாளன் ஆட்சியை அடுத்து வட்டகாமினி ஆட்சிக்காலத்தில் மீண்டும் தமிழ்மன்னர்களின் ஆட்சியேற்பட்டது. வட்டகாமினி ஆட்சியை ஏற்று ஒரு வருடத்திற்குள் (கி. மு. 103 - 102) இரு படையெடுப்புக்களை எதிர்நோக்க நேரிட்டது. தெற்கே உருகுணையில் தீசன் என்ற பிராமணன் இவனுக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டான். வடக்கே மாதோட்டத்தில் வந்திறங்கிய தமிழர் படை அனுராதபுரத்தை நோக்கிப் படையெடுத்தது. இரு படையெடுப்புக்களையும் ஒரே நேரத்தில் எதிர்கொள்ள முடியாத வட்டகாமினி தீசன் என்ற பிராமணனுடன் சமாதானம் செய்து, தமிழர்களை வெற்றிகொண்டால் ஆட்சியை ஒப்படைப்பதாகக் கூறினான். இதையேற்ற தீசன் தமிழருடன் போரிட்டுத் தோல்வியடைந்தான். வெற்றியடைந்த தமிழர் படை அனுராதபுரம் நோக்கி முன்னேறிய போது, கொலம்பகால என்ற இடத்தில் வட்டகாமினியின் படையை எதிர்கொள்ள நேரிட்டது. இதில் வட்டகாமினி தோல்வியடைய வெற்றிகொண்ட தமிழர்களுள் புலகதன், பாஉஸியா, பழையமாறன், பிழையமாறன். தாதிகன் என்போர் மாறிமாறி 14 வருடம் 7 மாதங்கள் (கி. மு 102 - 87) ஆட்சி செய்தனர்.[32] இதன் பின்னர் மீண்டும் வட்டகாமினி ஆட்சிக்கு வந்தான். இவனின் பின் ஆட்சி செய்த மகாதீசன் ஆட்சியிற் (கி. மு. 76 - 62) பல குழப்பங்கள் ஏற்பட்டன. அரச மரபைச் சேராத சோரநாகன், தனக்குப் புகலிடம் அளிக்காத விகாரைகளைத் தரைமட்டமாக்கினான். இதனால் இவன் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்த இவன் மனைவி அனுலாதேவி தமிழனாகிய வடுகனையும், நீலியன் என்பவனையும் அரசனாக்கினாள்.[33] இவ்விரு தமிழ் மன்னர்களும் படையெடுப்பின்றியே ஆட்சியைப் பெறக்கூடிய அளவிற்கு, இக்காலத்தில் தமிழரின் ஆதிக்கம் அனுராதபுரத்தில் நிலவியது எனலாம்.

தமிழ் மன்னர்கள் அந்நியப் படையெடுப்பாளரா?

மேற்குறிப்பிட்ட 200 ஆண்டுகால அரசியல் வரலாற்றை ஆராய்ந்தால் அனுராதபுரத்தில் ஆட்சி புரிந்த 22 மன்னர்களுள் 10 தமிழ்மன்னர்கள் 80 வருடங்களுக்கு மேல் ஆட்சிபுரிந்ததைக் கண்டுகொள்ளலாம். இது வரலாற்றாரம்ப காலத்தில் இலங்கையின் அரசியல் இறைமை தமிழருக்கா சிங்களவருக்கா எனத் தீர்மானிப்பதிலுள்ள ஐயப்பாட்டைக் காட்டுகிறது. ஆனால் இக்கால அரசியல் வரலாற்றைக் கூறும் மகாவம்சம் தமிழ் மன்னர்களுக்கு உரிய சாதனைகள் எதனையுமே விரிவாகக் கூறாது ஒரு சில செய்யுள்களில் மட்டும் ஆட்சியாண்டைக் கூறிமுடிக்கிறது.

உதாரணமாக சிங்கள இனத்தின் விடுதலை வீரனாக வருணிக்கப்பட்ட துட்டகாமினியின் 24 ஆண்டுகால வரலாற்றை 843 செய்யுள்களில் கூறும் இநநூல், 44 ஆண்டுகள் நெறிதவறா ஆட்சிபுரிந்த எல்லாளன் சாதனைகளை 21 செய்யுள்களில் மட்டும் கூறிமுடிக்கிறது. இது மகாவம்சத்தின் பக்கச் சார்புத் தன்மையையும் தமிழருடைய வரலாற்றைத் திரித்துக் கூறும் முறைமையையும் நன்கு புலப்படுத்துகிறது. மகாவம்சமும் அதனையடிப்படையாக கொண்டு பின் எழுந்த வரலாற்று நூல்களும் அனுராதபுரத்தில் ஆட்சிசெய்த தமிழ் மன்னர்களை அயல் நாட்டிலிருந்து- சிறப்பாக தமிழ் நாட்டிலிருந்து படையெடுத்தார்கள் எனக் கூறுகின்றது. ஆனால் தமிழ்நாட்டு வரலாற்று மூலங்களிலே தமிழ்நாட்டு வம்சங்களோ, தனிப்பட்டவர்களோ இக்காலப் பகுதியில் இலங்கை மீது படையெடுத்ததாகக் கூறப்படவில்லை. அதற்காக இரு நாடுகளுக்குமிடையே அரசியல் உறவு இருக்கவில்லையெனவும் அர்த்தம் கொள்ள முடியாது. ஆனால் அந்த உறவு இலங்கைத் தமிழர்களின் தனித்துவத்தை முற்றாகப் புறக்கணித்த நிலையில் இருந்ததெனக் கூறுவதை ஏற்பதே கடினமாக உள்ளது. இக்காலத்தில் அனுராதபுரத்தில் ஆட்சிசெய்த சிங்கள மன்னர்கள் பலரும் தென்னிலங்கையிற் சிற்றரசர்களாக இருந்ததற்கு மகாவம்சமே சான்றாக அமைகிறது. அவ்வாறு சிற்றரசர்களாக இருந்த துட்டகாமினியும், வட்டகாமினியும்தான் அனுராதபுரத்தின் தலைசிறந்த மன்னர்களாக மகாவம்சத்தில் வருணிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தமிழ்ச் சிற்றரசுகளும் அனுராதபுரத்திற்குத் தெற்கிலும் வடக்கிலும் இருந்துள்ளன. எல்லாள மன்னனைச் சோழநாட்டிலிருந்து படையெடுத்தவன் எனக் கூறும் இந்நூலே, துட்டகாமினி எல்லாளனை வெற்றிகொள்ள முன் அநுராதபுரத்திற்குத் தெற்கிலிருந்து 32 தமிழ்ச் சிற்றரசர்களை வெற்றிகொள்ள நேரிட்டதாகக் கூறுகிறது.[34]

இச்சான்றுகள் சிங்களச் சிற்றரசர்களைப் போல் தமிழ்ச் சிற்றரசர்களும் அனுராதபுரத்தைக் கைப்பற்றி ஆட்சி நடத்தியிருக்கலாம் என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றன. மகாவம்சம் அனுராதபுரத்திற்கும் தூரத்தேயுள்ள மகாகமைக்கும் (தென்னிலங்கை) இடையே இருந்த அரசியல் உறவுபற்றி அடிக்கடி கூறுகின்றது. ஆனால் அனுராதபுரத்திற்கு வடக்கே கிட்டிய தூரத்திலுள்ள உத்தரதேசத்துடன் கொண்டிருந்த அரசியல் உறவு பற்றி எதுவுமே கூறவில்லை. ஆனால் மகாவம்ச ஆசிரியர் வாழ்ந்த கால அரசியல் வரலாற்றைக் கூறும் சூளவம்சம், கி. பி. 6 ஆம் நூற்றாண்டிலிருந்து அனுராதபுரத்திற்கு எதிராக உத்தர தேசத்திலிருந்து ஏற்பட்ட படையெடுப்புக்கள், கிளர்ச்சிகள் பற்றி அடிக்கடி கூறுகிறது.[35] மானா என்ற சிங்கள இளவரசன் அனுராதபுர மன்னனுக்கு அஞ்சித் தென்னிலங்கையில் வாழாது உத்தரதேசத்தில் மனைவியுடன் வாழ்ந்து பின்னர் தமிழ்நாடு சென்றதாக இந்நூல் கூறுகிறது. கி. பி. 9ஆம் நூற்றாண்டில் பாண்டியர் இலங்கை மீது படையெடுத்த போது உத்தரதேச தமிழ் மக்கள் (மாதோட்டத்தில் வாழ்ந்த தமிழர்கள்) பாண்டியருடன் சேர்ந்து சிங்கள அரசை அடிபணியச் செய்தனர்.

இச்சான்றுகள் மகாவம்ச ஆசிரியர் வாழ்ந்த காலத்தில் உத்தரதேசத்திற் தமிழ்மக்கள் செறிவாக வாழ்ந்ததையே காட்டுகிறது. ஆனால் இந்நாட்டை ஒரு பௌத்த சிங்கள நாடாகக் காட்ட முற்பட்ட மகாவம்ச ஆசிரியர், தன் காலத்தில் அதற்கு மாறாக இனமக்கள் வாழ்ந்த உத்தரதேசத்து முற்பட்டகால அரசியல் வரலாற்றைக்கூடக் கூறாது தவிர்த்திருக்க வேண்டும். இதனால் அனுராதபுரத்திற்கு எதிரான தமிழர் படையெடுப்புக்கள் தென்னிலங்கையிலிருந்து மட்டுமின்றி வட இலங்கையிலிருந்தும் ஏற்பட்டதெனக்கூற இடமுண்டு. இந்நிலையில் அனுராதபுரத்தில் ஆட்சிநடத்திய தமிழ் மன்னர்கள் அனைவரையும் தமிழ்நாட்டுடன் மட்டும் தொடர்புபடுத்திப் பாரிக்காது, இலங்கையில் வாழ்ந்த தமிழர்களுடனும் தொடர்புபடுத்திப் பார்ப்பது பொருத்தமாகத் தெரிகிறது.

அனுராதபுரத்தில் ஆட்சிசெய்த முதலாவது தமிழ் மன்னர்களான சேன, குத்திக என்போர் குதிரை வர்த்தகர்களின் பிள்ளைகள் எனக்கூறும் மகாவம்சம், இவர்கள் எந்த நாட்டிலிருந்து படையெடுத்தவர்கள் எனக் கூறவில்லை. வரலாற்றாசிரியர்கள் இவர்கள் தமிழ் நாட்டிலிருந்து படையெடுத்தவர்கள் எனக் கருதுகின்றனர். சுதர்சன் செனிவிரட்ண என்ற வரலாற்று ஆசிரியர், சங்க இலக்கியம் பரதவகுலம் குதிரை வர்த்தகத்தில் ஈடுபட்டதை பற்றிக் கூறுவதாலும் மகாவம்சம் சேன குத்திகனைக் குதிரை வர்த்தகர்களின் பிள்ளைகளெனக் கூறுவதாலும் இவர்கள் தமிழ் நாட்டிலிருந்த பரதவ குலத்தவர் எனக் கூறியுள்ளார்.[36] சங்க காலத்தில் கடற்கரையை அண்டிய நெய்தல் நிலப் பகுதியிற் பரதவகுலம் செறிவாக வாழ்ந்துள்ளனர். இவர்கள் வர்த்தகம், கப்பலோட்டுதல், மீன்பிடித்தல், முத்துக் குளித்தல் முதலிய தொழில்களில் ஈடுபட்டனர். இப்பரதவ குலம் தமிழ்நாட்டில் மட்டுமன்றி சமகாலத்தில் இலங்கையிலும் வாழ்ந்ததற்குச் சான்றுகள் உண்டு. இதுவரை இலங்கையிற் கிடைத்த 21 பிராமிக் கல்வெட்டுக்களில் (கி மு 1) இக்குலம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அவற்றுட் பல கல்வெட்டுக்கள் இக்குலத்தின் மூதாதையினரின் பெயர்களையும் குறிப்பிடுகின்றன.[37] அனுராதபுரத்தில் கிடைத்த தமிழ் வணிகர் பற்றிய கல்வெட்

டொன்றில் ஈழபரத (ஈழத்துப் பரதவர்) என்ற பெயர் காணப்படுகிறது. தமிழ் நாட்டிலிருந்து வந்த பரதவர்களில் இருந்து ஈழத்துப் பரதவர்களை இனங்கண்டுகொள்ள 'ஈழ' என்ற அடைமொழி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.[38] எவ்வாறாயினும் பரதவகுலம் பற்றி வரும் கல்வெட்டுக்கள் தமிழகத்தைப் போல் இலங்கையிலும் இக்குலம் வாழ்ந்ததை உறுதிப்படுத்திக் கொள்வதாகக் கருத இடமுண்டு. இதனால் சேன, குத்திக] என்ற தமிழ் மன்னர்களைப் பரதவ குலத்தவர்களாகக் கொண்டால், அம் மன்னர்களை இலங்கையில் வாழ்ந்த பரதவ குலத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்க, இடமுண்டு. சங்ககாலத்தில் முக்கிய துறைமுகமாகவும், முத்துக் குளிக்கும் பிரதேசமாகவும் இந்திய இலக்கியங்களில் வருணிக்கப்பட்ட மாதோட்டப் பிரதேசத்தில் (மன்னார்), இன்று பரவர் என்ற சமூகம் கடற்கரையை அண்டிய பகுதிகளில் வாழ்கின்றது. இவர்களை இலங்கையில் வாழ்ந்த பரதவகுலத்தின் வழிவந்தவர்களாகக் கருத இடமுண்டு.

சேன, குத்திக மன்னர்களைத் தொடர்ந்து 44 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆட்சிசெய்த எல்லாளன் சோழநாட்டிலிருந்து வந்த படையெடுப்பாளன் என, மகாவம்சம் கூறுகிறது. இவன் எந்த நாட்டிலிருந்து படையெடுத்திருந்தாலும் இங்கு வாழ்ந்த மக்களுக்கு இவன் அந்நியப்படாத ஒரு மன்னனாக இருந்தமைதான், மக்கள் ஆதரவோடு நீண்ட காலம் அவன் ஆட்சி செய்யக் காரணமாகும். இவனை வெற்றிகொள்ளத் துட்டகாமினி தென்னிலங்கையிலிருந்த பல சிற்றரசுகளை ஒற்றுமைப்படுத்தியமையும், போருக்கான படை ஆயத்தங்களைப் பல மாதங்களாக மேற்கொண்டமையும், எல்லாளனுக்கு ஆதரவாகத் துட்டகாமினிக்கிருந்த எதிர்ப்பைக் காட்டுகிறது. மகாகமையிலிருந்து புறப்பட்ட துட்டகாமினியின் படை அனுராதபுரத்தை அடைவதற்கு முன்னால் 32 தமிழ்ச் சிற்றரசர்களை வெற்றி கொள்ளப் பல மாதங்கள் எடுத்ததாக மகாவம்சம் கூறுகிறது. அப்போரிலே கூடச் சில படைத் தளபதிகளை நேரில் போரிட்டு வெற்றிகொள்ள முடியாத துட்டகாமினி, சூழ்ச்சி செய்து வெற்றிகொண்டதாகக் கூறுகிறது. இது எல்லாளனுக்கு ஆதரவான பல தமிழ்ச் சிற்றரசுகள் அனுராதபுரத்திற்குத் தெற்கிலிருந்ததைக் காட்டுகிறது. அனுராதபுரத்தில் துட்டகாமினிக்கும் எல்லாளனுக்குமிடையே நடந்த நேரடிச் சமரில் எல்லாளன் இறந்ததும், அவன் இறந்த இடத்தில் சமாதிகட்டி, அவ்வழியாற் செல்வோர் வாகனங்களை நிறுத்தி மரியாதை செலுத்துமாறு துட்டகாமினி கட்டளையிட்டான். இச்செயலைத் துட்டகாமினியின் புகழ்ச்சிக்குரிய ஒன்றாக மகாவம்சம் கூறினாலும், அதில் துட்டகாமினியின் அரசியல் ஆதாயமும் அடங்கியிருந்ததெனக் கூறலாம். இலங்கை வரலாற்றில் சிங்கள மன்னர்கள் சிலர் தமக்கு முற்பட்ட மன்னர்களைக் கௌரவிப்பதிலும், அவர்களின் வழித்தோன்றல்கள் எனக் கூறுவதிலும் மக்கள் ஆதரவுபெற முற்பட்டதைக் காணலாம். இங்கே துட்டகாமினியினால் கொலை செய்யப்பட்ட எல்லாளன், 44 ஆண்டுகள் நெறிதவறாது ஆட்சி செய்த ஒரு மன்னன். இவனது அமைதி நிறைந்த நீண்டகால ஆட்சிக்கு, இவனை இந்நாட்டிற்குரிய மன்னனாக மக்கள் ஏற்று அவனுக்கு ஆதரவாக இருந்ததே காரணம். அத்தகைய ஒரு மன்னனைக் கொன்றதற்காக மக்கள் தனக்கு ஆதரவாக இருக்கமாட்டார்கள் என்ற அச்சமே, துட்டகாமினி எல்லாளன் இறந்த இடத்தில் சமாதிகட்டி அவனைக் கௌரவப்படுத்தக் காரணம் எனலாம்.

அண்மையில் பேராசிரியர் வேலுப்பிள்ளை அவர்கள், தமிழில் ஈழராஜா என அழைக்கப்பட்ட மன்னனே, பாளியில் எலாரா (எல்லாளன்) மன்னன் என அழைக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற புதிய கருத்தை முன்வைத்துள்ளார்.[39] இங்கே ஈழம் என்பது இலங்கையை, சில வேளைகளில் இலங்கையின் ஒரு பாகத்தைக் குறித்து நின்றது என்பதைத் தமிழ் நாட்டு வரலாற்று மூலங்களிலிருந்து அறிய முடிகிறது. சங்ககாலப் புலவர்களில் ஒருவரான பூதந்தேவனார், ஈழத்துப் பூதந்தேவனார் எனவும், தமிழ்நாடு - திருப்பரங்குன்றப் பிராமிக் கல்வெட்டில் வரும் வணிகன் ஒருவன் ஈழக்குடும்பிகன் எனவும் அழைக்கப்பட்டதற்கு, இவர்கள் ஈழத்தவர்களாக இருந்ததே காரணம். அதுபோல் அனுராதபுரம், பெரிய புளியங்குளம் (வவுனியா), குடுவில் (அம்பாறை) போன்ற இடங்களில் கிடைத்த பிராமிக் கல்வெட்டுக்களில் தமிட (தமிழ்) வணிகர் எனக் கூறப்பட்டுள்ளதற்கு இவர்கள் தமிழ் நாட்டவர்களாக இருந்ததே காரணம் எனக் கூறப்படுகின்றது.[40] இங்கே தமிழில் ஈழராஜா என்பவனே பாளியில் எலாரா என அழைக்கப்பட்டிருக்கலாம் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டால், இவனைத் தமிழ்நாட்டோடு தொடர்புபடுத்துவதைக் காட்டிலும் இலங்கையுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதே பொருத்தமாகும். இப் பின்னணியில் தமிழாவேவியின் (தமிழ் மனைவி) கணவனாகிய ஈழநாகனின் ஆட்சியையும் நோக்கலாம்.

வட்டகாமினி காலத்தில் மாதோட்டத்தில் வந்திறங்கிய தமிழர்கள் அனுராதபுரத்தைக் கைப்பற்றி 14 வருடம் 7 மாதங்கள் ஆட்சிபுரிந்ததாக மகாவம்சம் கூறுகிறது. இத்தமிழர்களில் இருவர் பழையமாறன், பிழையமாறன் என்ற பெயர்களைப் பெற்றிருந்தனர். இப்பெயர்களுக்கும் சங்ககால இலக்கியத்தில் பாண்டியரைக் குறிக்கும் மாறன் என்ற

பெயர்களுக்குமிடையே ஒற்றுமையிருப்பதால், இவர்கள் தமிழ்நாட்டிலிருந்து படையெடுத்த பாண்டிய வம்சத்தவர்கள் என, மெண்டிஸ் என்ற அறிஞர் கூறியுள்ளார்.[41] ஆனால் இவர்களின் ஆட்சி இடம் பெறுவதற்கு முன்னரே இப்பெயரையுடைய பலர் இங்கு வாழ்ந்ததற்கு, கல்வெட்டுக்கள் சான்றாய் உள்ளன. அத்துடன் பாண்டிய வம்சத்தவர்களைக் குறிக்கும் பண்டு, பழைய, புலைய போன்ற பெயர்களும் மீன் இலச்சினையும் கொண்ட பல கல்வெட்டுக்கள் இலங்கையின் பல்வேறு பாகங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.[43] கதிர்காமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கி.மு. 2 ஆம் 1 ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டுக்கள் சில, பத்துச் சகோதரர்களின் ஆட்சி பற்றிக் கூறுகின்றன. இக் கல்வெட்டுக்கள் பாண்டிய வம்சத்துடன் தொடர்புடையன என்பதை, இக்கல்வெட்டுக்களில் வரும் மீன் இலச்சினைகளும் மீனைக் குறிக்கும் மஜ்ஜி என்ற பெயரும் உறுதிப் படுத்துகின்றன. மகாவம்சத்தில் இவர்கள் கதிர்காமச் சத்திரியர்கள் எனக் கூறப்பட்டுள்ளது. பேராசிரியர் பரணவிதான இவர்களை வடஇந்தியாவில் இருந்து குடியேறி அரசமைத்த குழுவினர் எனக் கூறியுள்ளார்.[43] ஆனால் கல்வெட்டுக்களில் வரும் அரச வாரிசு உரிமைக்கும் வடஇந்தியாவில் நிலவிய வாரிசு உரிமைக்குமிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. வடஇந்தியாவில் பெரும்பாலும் தந்தை மகன் வாரிசுரிமை முறையே காணப்பட்டது. ஆனால் கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ள சகோதர வாரிசுரிமை சங்க இலக்கியங்களில் ஒன்றான பத்துப்பாட்டில் வரும் வாரிசுரிமை முறையினை நினைவுபடுத்துகின்றன. தாதுவம்சம் போன்ற சிங்கள நூல்களை ஆராய்ந்து பார்த்தால் இவ்விடங்களில் பௌத்தத்திற்கு மாறான சிற்றரசர்கள் ஆட்சிபுரிந்ததற்கு மறைமுகமான சான்றுகள் காணப்படுகின்றன. இந்நூல் கோதாபயன் தனது ஆட்சிக் காலத்தில் (கி.பி. 254 - 266) இங்கு நடந்த கொலைக்குப் பிராயச்சித்தமாக 500 விகாரைகளைக் கட்டினான் எனக் கூறுகிறது.[44] இக்கூற்றானது இது வரை பௌத்தத்திற்கு மாறானவர்கள் ஆட்சி புரிந்தனர் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. இங்கு கிடைத்த கல்வெட்டு ஒன்றும் சிற்றரசன் ஒருவன் கி.பி. 1 ஆம் நூற்றாண்டில் பௌத்தத்திற்கு மாறியது பற்றிக் கூறியிருப்பதும் இக்கருத்திற்கு மேலும் சான்றாகும்.[45] இச்சான்றுகள் அனைத்தும் வட்டகாமினி காலத்தில் தமிழர்கள் அனுராதபுரத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்யமுன்னர் பாண்டிய வம்சத்தை ஒத்த பெயர்களை உடைய தமிழ்ச் சிற்றரசர்கள் தென்னிலங்கையில் ஆட்சி செய்தனர் எனக் கருத இடமளிக்கிறது. மகாவம்சம் கூட, துட்டகாமினி எல்லாள மன்னனை வெற்றிகொள்ள முன்னர் தென்னிலங்கையில் சில தமிழ்ச் சிற்றரசர்களை வெற்றி கொள்ள நேரிட்டதாகக் கூறியிருப்பது, இங்கு நோக்கத்தக்கது. கதிர்காமத்தில் கி.மு. 3 ஆம் 2 ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சிபுரிந்த சிற்றரசர்களை அறிஞர்கள் பலரும் பாண்டிய வம்சத்துடன் தொடர்புபடுத்தியே கூறியுள்ளனர். இதன் மூலம், வட்டகாமினி காலத்தில் அனுராதபுரத்தைக் கைப்பற்றி ஆட்சிபுரிந்த தமிழர்களைப் பெயரடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள பாண்டியரோடு தொடர்பு படுத்துவதைக் காட்டிலும், பாண்டிய வம்சத்திற்குரிய பெயர்களோடு இங்குவாழ்ந்த தமிழர்களுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பது, பொருத்தமாகத் தெரிகிறது.

முடிவுரை

இலங்கையின் ஆதிகால வரலாறு நீண்டகாலமாக மகாவம்சத்தை அடிப்படையாக வைத்தே ஆராயப்பட்டுள்ளது. இதில் சிங்கள மக்களது வரலாறு வட இந்தியாவுடனும் தமிழ் மக்களது வரலாறு தென்னிந்தியாவுடனும், சிறப்பாகத் தமிழ்நாட்டுடனும் தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ளது. ஆயினும் சமீபகால ஆய்வுகள் இரு இன மக்களும் தென்னிந்தியாவை ஒத்த பெருங்கற்காலப் பண்பாட்டின் வழிவந்தவர்கள் என்பதை உறுதியாகக் கோடிட்டுக்காட்டியுள்ளன. கி.மு. 3ஆம் நூற்றாண்டில் பரவிய பௌத்த மதமும் பிராகிருத மொழியும், பெருங்கற்காலத் திராவிட மக்கள் பேசிய எலு மொழியுடன் கலந்ததன் விளைவே பிற்காலத்தில் சிங்கள மொழி தோன்றக் காரணமாயின. இதைச் சிங்கள மொழியின் மூலமாக இருந்த பிராகிருத மொழியில் எழுதப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள், உறுதிசெய்கின்றன. ஆயினும் இக்கல்வெட்டுக்களில் 50% மான தமிழ், எலு மொழிச்சொற்கள் இணைந்திருப்பதாக மொழியியலாளர்கள் கூறுகின்றனர். இதன் மூலம் சிங்கள மொழி தோன்றுமுன்னரே தமிழ்மொழி பேசிய மக்கள் வாழ்ந்தனர் எனக் கூறலாம். இக்கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை பௌத்தமதம் சார்ந்த செய்திகளைக் கூறுகின்றன. இவற்றுள் 22 கல்வெட்டுக்கள், பிராமணர்கள் பௌத்த சங்கத்திற்குத் தானமளித்தது பற்றிக் கூறுகின்றன. இதனால் இக்கல்வெட்டுக்களில் வரும் தமிழர்களில் ஒரு பிரிவினரைப் பௌத்தர்களாக-பௌத்தத்தை ஆதரித்தவர்களாகக் கருத இடமுண்டு. இதற்குத் தமிழ்நாட்டிலிருந்து ஏற்பட்ட பௌத்த மதச் செல்வாக்கும் ஒரு காரணமெனக் கூறலாம். இப்பண்பாட்டு மாறுதல்கள் இடம்பெற்ற வரலாற்று ஆரம்பத்தில்தான் அனுராதபுரத்தில் பல தமிழ்

மன்னர்களும் ஆட்சிபுரிந்தனர். இம் மன்னர்களை மகாவம்சம் அந்நிய ஆக்கிரமிப்பாளர், சோழநாட்டவர் எனக்கூறுகின்றது. ஆனால் இக்காலத்தில் தமிழ்நாட்டைப் போல் (சுட், சுழ), பாண்டியர் (பண்டுமரபு, புலைய, பழைய), சேரர் (உதி, உதிய) என்ற வம்சங்களைக் குறிக்கும் பல பெயர்களை உடைய மக்கள் வாழ்ந்ததற்குக் கல்வெட்டு ஆதாரங்கள் பல காணப்படுகின்றன. இப்பெயர்களையுடைய பலர் சிற்றரசர்களாகவும் சமூகத்தில் செல்வாக்குப் பெற்ற தலைவர்களாகவும் இருந்துள்ளனர். கி.மு. 3ஆம் நூற்றாண்டில் பௌத்த மதத்தை அரச மதமாக்கிய தீசனென்ற இலங்கை மன்னன், வட இந்திய மகதப் பேரரசு மன்னன் அசோகனுடன் கொண்டிருந்த பௌத்தமதத் தொடர்பின் காரணமாக, அசோகனுக்குரிய தேவநம்பிய என்ற பெயரைத் தன்பெயருடன் இணைத்து தேவநம்பிய தீசன் என அழைத்துக்கொண்டான். இதேபோல் இலங்கையில் வாழ்ந்த தமிழர்களும் தமிழ் நாட்டுடன் நீண்டகாலமாகக் கொண்டிருந்த அரசியற் பண்பாட்டுத் தொடர்பு காரணமாக அந்நாட்டு வம்சங்களுக்குரிய பெயர்களையும் தம்முடன் இணைத்துக் கொண்டனர் எனக் கூறலாம். இதனால், மகாவம்சம் கூறும் தமிழ் மன்னர்களது பெயர்களைத் தமிழ் நாட்டு வம்சங்களுடன் தொடர்புபடுத்திப் படையெடுப்பாளர் என்ற மகாவம்சத்தின் கூற்றுக்கு அழுத்தங்கொடுத்து ஆராய்வதைக் காட்டிலும், உள்நாட்டு விருத்தி என்னும் காரணிக்கு முக்கியத்துவம் கொடுப்பது பொருத்தமானதாகத் தெரிகின்றது.

அடிக்குறிப்புக்கள்

1. Ragupathy, P. **Early Settlements in Jaffna on archaeological Survey** (Madras. 1987) p. 179.
2. Allchin, B. " The microlithic sites of Tinnavelly District " **Ancient India No.** 12, p. p. 4 - 20.
3. Ragupathy, P. **Op. cit** P. 179.
4. Sitrampalam, S. K., **The megalithic culture in Sri Lanka** (Unpublished Thesis) Deccan College University of **Poona**, 1980.
5. **Ibid.**
6. **Ibid**.
7. சிற்றம்பலம், சி. க. **பண்டைய தமிழகம்**, (திருநெல்வேலி 1991), பக். 110.
8. Gurumurthy, S. **Ceramic Tradition in south India** (Madras 1981).
9. **Mahadevan, I. Corpus of the Tamil Brahmi Inscriptions** (Madras 1966)
10. Mahalingam, T. V. **Early south Indian Palaeography** (Madras 1967).
11. Mahadevan. I. **Op. Cit.**
12. வேலுப்பிள்ளை, ஆ. **தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும்** (யாழ்ப்பாணம் 1986), ப. 8.
13. Paranavitana, S. **Brahmi Inscriptions in ceylon** (Colombo 1970).
14. பெர்னாண்டோ, ச. பி. "சிங்கள நெடுங்கணக்கின் தொடக்கநிலை" **இலங்கையிற் கல்வி நூற்றாண்டு மலர் பகுதி** 1 (கொழும்பு 1969), ப. 12.
15. மேற்படி.
16. Karunaratne, S. " **New clue to an ancient script** ", **Sunday observer.** (Colombo 26. 7. 1962).
17. Ariyasinghe, A. **Sinhalese palaeography** (London 1965), p. 29.
18. Mahalingam, T. V. **Op. Cit p.** 169.
19. வேலுப்பிள்ளை, ஆ. மு. கூ. நூ. ப. 11.
20. சிற்றம்பலம், சி. க. "பிராமிக் கல்வெட்டுக்களும் தமிழகமும்" , சிந்தனை தொ.1. இதழ் 1 (ப. ஆ) சிற்றம்பலம், சி. க. (திருநெல்வேலி 1983) பக். 56-57.
21. **Paranavitana, S. Op. cit**
22. Sitrampalam, S. K. "On the recent finds relating to the art of writing in Sri Lanka " (Jaffna 1991), pp. 1 - 5.
23. புஷ்பரட்ணம், ப. " பூநகரிப் பிராந்திய தொல்லியல் மேலாய்வில் கிடைத்த தொல்பொருட் சின்னங்கள் - ஒரு வரலாற்று ஆய்வு ". யாழ் பல்கலைக்கழக கல்விசார் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை (திருநெல்வேலி, 1990), ப. 1 - 21.

24. தினமணி, சென்னை. 1. 7. 1990.

25. Gunawardena, R. H. L. A., Preludes to the state early phase in the evaluation of political Institutions in Ancient Sri Lanka, **The Sri Lanka Journal of the Humanitics** vol. viii, vos. 1 & 2 pp. 1 - 39.

26. திருமலை முத்துசுவாமி, அ. தமிழ்நாடும் மொழியும் (மதுரை 1959), ப. 33.

27. Sitrampalam, S. K. The from velu of Sri Lanka Brahmi Inscriptions. A Reappraisal Paper Prensented at the xvii Annual congress of Epigraphical society of Indian Tamil University, Thanjavur in February 1991.

28. Parkar, H. **Ancient Ceylon** (London 1909), pp. 415 - 458.

29. தினமணி (சென்னை 1. 7. 1990).

30. M. V. xxi : 10 - 11.

31. M. V. xxi : 13 - 14.

32. M. V. xxxiii; 54 - 61.

33. M. V. xxxiv : 16 - 28.

34. M. V. xxv : 75.

35. C. V. 44 : 70 - 75, 48: 83 - 85.

36. Seniviratne, S. " The Brata & case of community Intergration in Early history Sri Lanka " **James Thevatham Ratnam Feshchrift** (Ratmalanai 1985) pp. 51 84.

37. Paranavitana, S. **Op. cit**

38. சிற்றம்பலம், சி. க. '' தமிழர் பற்றிக் கூறும் ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுக்கள் பற்றிய சில கருத்துக்கள்'', தமிழோசை 1988 -1989 (யாழ்ப்பாணம்), ப. 32.

39. வேலுப்பிள்ளை. ஆ. மு - கூ - நூ : ப. 12.

40. சிற்றம்பலம், சி. க. மு - கூ - நூ. 1888 - 1989 பக். 29 - 35.

41. திருநாவுக்கரசு, க. கு. இலங்கையில் தமிழர் பணி பாடு (சென்னை 1978), பக். 49.

42. Paranavitana, Op. cit

43. Nicholas, C. W., Paranavitana, S , **A Concise history of Ceylon** (Colombo 1961), p. 60.

44. சிற்றம்பலம், சி. க. மு. கூ. நூ. 1984. ப. 116.

45. Paranavitana, S. Op. cit 1970.

தமிழீழ மண்ணில் சிங்களக் குடியேற்றங்கள் - ஒருநோக்கு

சி. வரதராஜன்
கலைமாணி (சிறப்பு - பொருளியல்)

அறிமுகம்

எந்த ஒரு நாட்டிற்கும் இறுதியாக இரண்டு மூல வளங்கள் காணப்படுகின்றன. அந்த நாட்டின் காணிகளும் அதன் மக்களுமே அந்த மூல வளங்கள் ஆகும். காணி என்பது ஒரு தேசிய மூல வளம். எங்கு அமைந்திருந்தாலும் காணி என்பது மிகப் பெறுமதி வாய்ந்ததும் வரையறுக்கப்பட்டதுமான ஒரு மூல வளம் ஆகும். நீண்ட காலமாகவே மனித சமுதாயத்தின் வாழ்க்கை, அதன் முன்னேற்றம் என்பவற்றுடன் காணி நெருங்கிய தொடர்புடையதாக, இருந்து வந்துள்ளது. இதன் விளைவாகவே காணி தொடர்பான கொள்கைகளும் பிரச்சினைகளும் மனித சமூகத்தில் மிக முக்கியமான இடத்தினை வகித்து வந்துள்ளன. காணிப் பிரச்சினையைச் சரியான முறையில் கையாள்வதன் மூலமே ஆள்பவர்களினதும் ஆட்சிகளினதும் சமூக பொருளாதார முறைகளினதும் வெற்றி தோல்விகள் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதனைக், கடந்த கால வரலாறு பல்வேறு தடவைகள் எமக்கு எடுத்துக் காட்டியுள்ளது.

1815இல் கண்டி ஒப்பந்தம் கைச்சாத்தாகியதைத் தொடர்ந்து இலங்கை பிரித்தானியர் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. 1840ஆம் ஆண்டில் முடிக்குரிய காணிகளில் அத்துமீறிய குடியேற்றம் தொடர்பான சட்டம், காலனித்துவ அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து அரசாங்கத்தின் காணிக் கொள்கைக்கு சட்ட முறையான அங்கீகாரம் கிடைத்தது. கண்டி, வெல்லச மாகாணங்களில் காணப்பட்ட விடுதலைப் போராளிகளின் கிராமியப் பொருளாதாரத்தினைச் சிதைப்பதே, இச் சட்டத்தின் உண்மையான நோக்கமாக இருந்தது. 1818 ஆம் ஆண்டுக் கலவரமும் அதனைத் தொடர்ந்த மக்கள் எழுச்சியும், ஆள்பவர்களின் மனதில் பாதுகாப்பற்ற உணர்வு ஒன்றினை ஏற்படுத்தியது. இதனால், கெரில்லா போர் முறையில் ஆற்றல் கொண்டிருந்த விடுதலை வீரர்களின் புகலிடமாக இருந்த மத்திய மலைநாட்டை, ஏனைய பிரதேசங்களுடன் இணைப்பது என, அரசாங்கம் தீர்மானித்தது. இப்பின்னணியிலேயே காலனித்துவக் காணிக் கொள்கை உருவாக்கப்பட்டது. 1840 ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலம் மக்களின் குடியிருப்பிற்குள்ளாகாத காணிகள் அனைத்தும் முடிக்குரிய காணிகளாக மாற்றப்பட்டன. இதற்கும் மேலாக மக்களின் உடைமையாகவுள்ள, காணிகளைக்கூட முடிக்குரியதாக மாற்றுவதற்கு ஏதுவாக, 1897 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கக் காணிகள் கட்டளைச் சட்டம் உருவாக்கப்பட்டது. இச் சட்டத்தின்

24ஆம் பிரிவு பின்வருமாறு கூறுகின்றது: "தான் உண்மையாகக் குடியிருக்கும் காணிக்குமேல் எவரேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காணித்துண்டுகளுள் குடியேறி இருப்பார்களேயானால் அக்காணிகள் அவர்களது உடைமையாக மாட்டா". பாரம்பரிய காணி உடைமைகளை நசித்துச் சிதைப்பதாக இச்சட்டத்தின் பிரிவுகள் அமைந்திருந்தன. பாரம்பரியமாகக் குடிமக்களின் உடைமையாகக் காணப்பட்ட காணிகள் அவர்களிடம் இருந்து பறித்தெடுக்கப்பட்டன. இத்தகைய காலனித்துவக் காணிக் கொள்கைகளின் பயனாகக் காணி அற்ற நிலையும், விவசாயிகள் இடையே வறுமையும் ஏற்படலாயின. தமது காணிக் கொள்கை விளைவித்த பாதகமான தாக்கங்கள் பற்றி சுமார் ஒரு நூற்றாண்டின் பின்னரே பிரித்தானியர் உணரலாயினர். காணிக் கொள்கையில் மாற்றம் கொண்டு வரப்படல் வேண்டும் என, இலங்கைத் தலைவர்கள்வற்புறுத்தத் தொடங்கினர். இந்நிலையில் 1927 ஆம் ஆண்டு முதலாவது காணி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இவ்வாணைக்குழுவின் சிபார்சுகளின் விளைவாக 1935 ஆம் ஆண்டு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டது. வேகமான காணிக் குடியேற்ற யுகம் ஒன்றின் தோற்றத்திற்கு இச் சட்டம் வழிவகுத்தது. எந்த விதமான அடிப்படை மாற்றமும் இன்றி இன்னும் இக் கொள்கை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

சுதந்திரத்தின் பின்னர், இரண்டு காணி ஆணைக் குழுக்கள் இதுவரை இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டன.

1. 1959 ஆம் ஆண்டு காணி ஆணைக்குழு.
2. 1987 ஆம் ஆண்டு காணி ஆணைக்குழு.

இலங்கைத் தீவின் மொத்த நிலப் பரப்பு 6, 570, 134 ஹெக்டேயர் (16. 228. 230 ஏக்கர்கள்) ஆகும். இவற்றுள் 5, 403, 899 ஹெக்டேயர் (13, 347, 630 ஏக்கர்கள்) காணி அரசுக்குச் சொந்தமானவையாகும். மிகுதி 1, 166, 235 ஹெக்டேயர் (2, 880 600 ஏக்கர்கள்) காணி தனியாருக்குச் சொந்தமானவை ஆகும். எனவே இலங்கையில் மொத்தக் காணிகளில் 82. 3 சதவீதமானவை அரசுக்குச் சொந்தமானவையாக இருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு காணியுடைமையில் ஏறத்தாழ தனி உரிமையினைக் கொண்டுள்ள அரசாங்கம் கடைப்பிடிக்கின்ற காணிக் கொள்கை, நாட்டில் பல சமூக பொருளாதார விளைவுகளை ஏற்படுத்துவனவாக அமைந்துள்ளது.

1935 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறுபட்ட பெயர்களிலான குடியேற்றத் திட்டங்கள் மூலம் காணிகளின் மறு பகிர்வினை அரசாங்கம் மேற்கொண்டது.

1. பாரிய குடியேற்றத் திட்டங்கள்.
2. உயர் நிலக் குடியேற்றத் திட்டங்கள்.
3. கிராம விரிவாக்கத் திட்டங்கள்.
4. இளைஞர் குடியேற்றத் திட்டங்கள்.
5. காணிக் கொடைகள் (சிறப்பு ஏற்பாடுகள்).
6 அத்துமீறிய குடியேற்றங்களை ஒழுங்கு படுத்துதல்.
7. நடுத்தர மட்டத்திலான நீர்ப்பாசனத் திட்டங்கள்.
8. மழை நீர்ப்பாசன பண்ணை அபிவிருத்திக் குடியேற்றத் திட்டங்கள்.

மேற் கூறப்பட்ட பெயர்களிலான பல்வேறு பட்ட திட்டங்கள் மூலம் அரசாங்கத்தினால் காணி பகிர்ந்தளிக்கப்பட்டு, மக்கள் குடியமர்த்தப்பட்டனர். காணி அற்றோருக்குக் காணி வழங்குதல், இதன் மூலம் காணிப் பகிர்வில் நிலவும் சமன் இன்மையைக் குறைக்கத்தக்க வகையில் காணி மறு பகிர்வினை மேற்கொள்ளுதல், உற்பத்தியினை குறிப்பாக நெல் மற்றும் உப உணவு உற்பத்தியினைப் பெருக்குதல், கிராமிய மட்டத்தில் நிலவும் வேலையின்மையை நீக்குதல், மக்களின் வருமான மட்டத்தினை அதிகரிக்கச் செய்வதன் மூலம் கிராமிய வறுமையினை நீக்குதல், பிரதேச ரீதியான அபிவிருத்தியினை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறுபட்ட அபிவிருத்தி நோக்கங்கள் கருதி 1935 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறுபட்ட குடியேற்றத் திட்டங்கள் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் இலங்கை அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டன.

1936 – 1988 காலப் பகுதியில் இலங்கை முழுவதும் 813,495 ஹெக்டேயர் காணி அரசாங்கத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்டது. இக் காணிகள் 1, 439, 407 ஆட்களுக்குப் பகிர்ந்து ஒதுக்கப்பட்டது. ஆனால் இக் குடியேற்றத் திட்டங்கள் மூலம் அதனது அபிவிருத்தி நோக்கங்கள் அடையப்பட்டனவா என்ற வினா, இக் குடியேற்றத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே எழுப்பப்பட்டு வந்துள்ளது. இன்று இலங்கையின் கிராமியத் துறையில் காணப்படும் பின்வரும் நிலைமைகள் இப் பெறுமதி வாய்ந்த வினாவிற்கு விடையாக அமையும்.

★ 27 சதவீதமான குடும்பங்கள் காணிகள் அற்றவையாக உள்ளன.

★ 42.4 சதவீதமான காணி உடைமைகள் இரண்டு ஏக்கருக்கும் குறைவானவை ஆகும்.

★ 82 சதவீதமான கிராமியக் குடும்பங்களின் மாதாந்த வருமானம் 400/- ரூபாவிற்கும் குறைவாகக் காணப்படுகின்றது.

★ 44 சதவீதமான குடும்பங்கள் 200/- ரூபாவிற்கும் குறைவான மாத வருமானத்தை மட்டுமே பெற்று வருகின்றன.

★ தொழில் அற்றோரில் 70 சதவீதத்தினர் விவசாயிகளாகக் காணப்படுகின்றனர்.

இவையெல்லாம் எவ்வாறு நிகழ்ந்தன? சகல அரசாங்கங்களதும் அபிவிருத்தித் திட்டங்களில் காணி முக்கிய இடம் பெற்றிருந்த போதிலும் காணியின்மை, கிராமிய வறுமை, வேலையின்மை ஆகிய பிரச்சினைகள் மோசமடைந்துள்ளன என்பதனையே இத் தரவுகள் காட்டுகின்றன. இத் தரவுகள் — தகவல்கள் எமக்குப் புலப்படுத்தும் உண்மை என்னவெனில், அரசாங்கத்தினால் பல்வேறுபட்ட பெயர்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட குடியேற்றத் திட்டங்கள் தமது அபிவிருத்தி நோக்கங்களை அடையத் தவறி விட்டன என்பதேயாகும். இந்நிலையில் தொடர்ந்து பதவிக்கு வரும் எந்தவொரு அரசாங்கமும், குடியேற்றத் திட்டங்கள் தொடர்பான கொள்கையினை — நடைமுறையினை மாற்றாமல் 1935 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை ஒரே மாதிரியாகப் பின்பற்றியமைக்குக் காரணம் என்ன? அவ்வாறாயின் அரசாங்கம் தமது குடியேற்றத் திட்டங்கள் மூலம் வேறு ஏதாவது வெளிப்படுத்தாத — வெளிப்படுத்த முடியாத நோக்கங்களில், வெற்றியடைந்துள்ளதா? இலங்கை அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பாரிய குடியேற்றத்திட்டங்களில் 340 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது (1956 ஆம் ஆண்டு வரை) என, 1959 ஆம் ஆண்டு காணி ஆணைக்குழு கணிப்பிட்டது. ஆனால் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருமானம் 25 மில்லியன் ரூபா மட்டுமேயாகும். எனவே இக்குடியேற்றத்திட்டங்கள் பொருளாதார ரீதியில் பெருமளவு தோல்வியே கண்டுள்ளன. அவ்வாறாயின் 1935 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலான காலப்பகுதியில், கல்லோயாத் திட்டம் தொடக்கம் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் வரை வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த பல்வேறுபட்ட குடியேற்றத்திட்டங்களினால் நிறைவேற்றப்பட்டது என்ன? இப் பெறுமதி வாய்ந்த வினாவிற்கு விடை காண்பதே, இக் கட்டுரையின் நோக்கமாகும்.

வடக்குக் கிழக்குப் பிரதேசம் ஓர் அறிமுகம்

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் என்பது இலங்கைத் தீவின் வட பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் பரந்துள்ளன. இவ் வடக்கு கிழக்குப் பிரதேசங்களின் மொத்த நிலப் பரப்பு 18,323 சதுர கிலோ மீற்றராகும். இவ்வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் உள்ள பெரிய உள்நாட்டு நீர்ப் பரப்பு 558 சதுர கிலோ மீற்றராகும், எனவே வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் மொத்தப் பரப்பளவு 18,881 சதுர கிலோ மீற்றர் ஆகும். இது இலங்கைத் தீவின் மொத்தப் பரப்பளவில் 28.8 சதவீதமாகும். இப்பிரதேசம் முழுவதும் வரண்ட வலயமாகவே கருதப்படுகின்றது. இவ் வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் நிர்வாக ரீதியாக 8 மாவட்டங்களைக் கொண்டுள்ளன.

1 வட மாகாணம்.
(அ) யாழ்ப்பாணம்
(ஆ) கிளிநொச்சி.
(இ) வவுனியா.
(ஈ) மன்னார்.
(உ) முல்லைத்தீவு.

2. கிழக்கு மாகாணம்
(அ) மட்டக்களப்பு.
(ஆ) அம்பாறை.
(இ) திருகோணமலை.

1881ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின் படி வடக்கு கிழக்குப் பிரதேசங்களின் மொத்தச் சனத்தொகை 4,30 055 பேராகும். 1981 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் படி மொத்தச் சனத்தொகை 2,084, 655 பேராகும். வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் சனத் தொகையின் இனரீதியான அமைப்பினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

இனம்	1881 தொகை	1881 சதவீதம்	1981 தொகை	1981 சதவீதம்
இலங்கைத் தமிழர்	364889	84.9	1356546	65.
மூஸ்லிம்கள்	53417	12.4	366267	17.6
இந்தியத் தமிழர்	—	—	74616	3.6
சிங்களவர்	7326	1.7	278829	13.4
ஏனையோர்	4423	1.0	8397	0.3
வட , கிழக்கு பிரதேசம்	430055	100.0	2084655	100.0

1881ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி இந்தியத் தமிழர் தொகை இலங்கைத் தமிழர் தொகைக்குள் அடங்கி உள்ளது.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களைப் பொறுத்தவரையில் கிழக்கு மாகாணத்திலேயே முதன் முதலில் அதிகளவில் குடியேற்றத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவ்வகையில் 1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கல்லோயா ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டமே, முதலில் ஆரம்பிக்கப்பட்ட பாரிய குடியேற்றத் திட்டமாகும். பட்டிப்பளை என்ற பாரம்பரிய தமிழ்ப் பெயரைக் கொண்ட பிரதேசம், கல்லோயா என்று பெயர் சூட்டப்பட்டு, 1949 ஆம் ஆண்டு கல்லோயா ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத் திட்டத்தின் எதிர்பார்ப்புக்களாகப் பின்வருவன அமைந்திருந்தன.

1. இத் திட்டத்தின் நீர் வடிகாலமைப்பின் கீழ் 855 சதுர கிலோ மீற்றர் (330 சதுர கிலோ மைல்) பரப்பளவு பிரதேசம் வரும்.
2. 48,600 ஹெக்டேயர் (1,20,000 ஏக்கர்) நிலப் பரப்பு நீர்ப்பாசன வசதியைப் பெறும்.
3. 9,000 கிலோ வாட்ஸ் மின்சக்தி உற்பத்தி செய்யப்படும்.
4. 30 000 பேருக்கு குடி நீர் வசதி கிடைக்கும்.
5. 200,0‿0 பேர் குடியமர்த்தப்படுவார்கள்.

மேலே கூறப்பட்ட பாரிய எதிர்பார்ப்புகளுடன், அப்போது இலங்கையின் பிரதம மந்திரியாக இருந்த திரு. டி. எஸ். சேனநாயக்கா 1949 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 28 ஆம் திகதி, இங்கினியாகலையில் கல்லோயாத் திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார். ஆனால் இத் திட்டத்தின் செயற்பாடுகள் அதன் அபிவிருத்தி நோக்கத்தினை அடையக் கூடியனவாக இருக்கவில்லை. நீர் வடிகாலமைப்புக்கு ஒரு சரியான திட்டம் கல்லோயா ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டத்திலிருக்கவில்லை. மேலும் இத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிலத்தின் அளவு பரந்த பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்கு மிகவும் சிறியதாக இருந்தது. அதே நேரத்தில் செறிவான பயிர்ச் செய்கையினை மேற்கொள்வதற்கு இந் நிலத்தின் அளவு மிகவும் பெரிதாக இருந்தது. (Ceylon Economist vol 2 No. 1 Sept 1951 P. 69 — 76).

மேலும் 1970 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கல்லோயாத் திட்ட மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை, இத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பெருந்தொகைச் செலவீடு எதுவித நன்மையையும் பெற்றுத்தரவில்லை என்பதனைச் சுட்டிக் காட்டியது. கல்லோயா ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றை உருவாக்குவதற்கு 40 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. அதே நேரத்தில் இத் திட்டத்தின் அணைக்கட்டினைக் கட்டுவதற்கு 40 மில்லியன் ரூபாவிற்கு மேல் செலவிடப்படவில்லை. கல்லோயாப் பிரதேசத்தில் உள் கட்டுமான வேலைகளுக்கு மட்டும் 320 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது (1960 — 1966). எனவே இப்பிரதேசத்தில் மக்களைக் குடியமர்த்துவதற்குத் தேவையான அம்சங்களிலேயே அரசாங்கம் கூடுதலான கவனத்தைச் செலுத்தியது. அதற்காகவே பெருந்தொகைப் பணத்தினையும் செலவிட்டது. உற்பத்திப் பெருக்கம், விவசாய அபிவிருத்தி போன்ற பொருளாதார ரீதியான அம்சங்களில் அரசாங்கம் அதிகளவு அக்கறை செலுத்தவில்லை. இதன் அடிப்படையில் ஏற்கெனவே நடைமுறையிலிருக்கும் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் திட்டங்களைப் பலப்படுத்துவதற்கும் பதிலாக கல்லோயாத் திட்டம் போன்ற பெருமளவு செலவினைக் கொண்ட திட்டங்களில், அருமையாகவுள்ள தனது வளங்களை அரசாங்கம் ஏன் பயன்படுத்தியது? என்ற வினாவினை கல்லோயாத் திட்ட மதிப்பீட்டுக்குழு எழுப்பியது. அவ்வாறாயின் கல்லோயாத் திட்டத்தின் மூலம் அரசாங்கம் சாதித்தது என்ன?

உண்மையில் கல்லோயா ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டத்தினை அரசாங்கம் ஒரு சிங்களக் குடியேற்றத்திட்டமாகவே நடைமுறைப்படுத்தியது. இதன் முதற்கட்டமாகவே பட்டிப்பளை என்ற பாரம்பரிய தமிழ்ப்பிரதேசம் கல்லோயா என்ற சிங்களப் பெயர் கொண்ட பிரதேசமாக மாற்றப்பட்டது. இக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் 44 குடியேற்றக் கிராமங்கள் அமைக்கப்பட்டன. இதில் 38 கிராமங்கள் சிங்களக் கிராமங்களாகும். மிகுதி 6 கிராமங்கள் மட்டுமே தமிழ் மக்களுக்குரியதாக இருந்தன. மேலும் இத் தமிழ்க் கிராமங்கள் நீர்ப்பாசன வசதியற்றவை அல்லது சிங்களக் கிராமங்களினூடாகச் செல்கின்ற நீர்ப்பாசன வசதிகளை உடையனவாகக் காணப்பட்டன. கல்லோயாகுக் டியேற்றத் திட்டத்திலுள்ள இங்கினியாகல என்ற இடத்தில் 1956 ஆம் ஆண்டு ஆனி மாதம் 5 ஆம் திகதி நடைபெற்ற இனக்கலவரத்தின் போதும் மீண்டும் 1958 ஆம் ஆண்டு வைகாசி மாதம் நடைபெற்ற இனக்கலவரத்தின் போதும் இத் தமிழ்க் கிராமங்களில் குடியேறியிருந்த தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்; துரத்தியடிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து இக் கிராமங்களிலும் சிங்களக் குடும்பங்கள் குடியேறினர். இதன் விளைவாக இது ஒரு பூரணமான சிங்களக் குடியேற்றத் திட்டமாக மாறியது.

கல்லோயா ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்ட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் ஏற்பட்டதாகக் கூறப்படும் ஒரு நிகழ்ச்சி மூலம், இத் திட்டத்தில் எந்தளவிற்கு சிங்கள இன வாதம் புகுத்தப்பட்டது என்பது புலனாகின்றது. அத்தகைய நிகழ்ச்சி பின்வருமாறு: “ 1958 ஆம் ஆண்டின் முற்பகுதியில் அம்பாறைக்கு அருகேயுள்ள ஒரு குளத்தில் புல்டோசர் இயந்திரத்தினை இயக்கும் ஒரு சிங்களச்

சாரதி ஒரு பழைமையான தூண் ஒன்றினைக் கண்டெடுத்தார். அப்போது அங்கு பணியிலிருந்த தமிழ் மேற்பார்வையாளர் அத் தூணை அருகில் உள்ள குளத்திற்குள் எறியும்படி கூறினார். பின்னர் இத் தூண் அம்பாறையில் உள்ள கல்லோயா அபிவிருத்திச் சபையின் அலுவலகத்தில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்ட போது, கல்லோயா அபிவிருத்திச் சபையின் தமிழ் உறுப்பினர் ஒருவர் அதனை எதிர்த்தார். இப் புராதன தூணில் நீர்ப்பாசன நீர் பங்கிடுவது தொடர்பான விதிகள் குறிக்கப்பட்டிருந்தன. அது மட்டுமின்றி கல்லோயாப் பிரதேசத்தில் ஒரு நூற்றாண்டுக்கும் முன்பாகவே சிங்கள மக்கள் வாழ்ந்திருந்தனர் என்பதனைச் சந்தேகமற நிரூபிக்கின்ற ஆதாரங்கள் இப் புராதன தூணில் குறிக்கப்பட்டிருந்தன என்றும் கூறப்பட்டது.' எனவே கல்லோயாப் பிரதேசம் சிங்கள மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்பதனை நிருபிக்க அரசாங்கமும் சிங்கள மக்களும் ''கதைகள்'' கூற ஆரம்பித்து விட்டனர். என்பதனையே இச் சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது. அது மட்டுமின்றி தமிழர்கள் சிங்களவர்களின் பாரம்பரிய பிரதேசத்தினை மறைக்க—மறுக்க முற்படுகின்றனர் என்ற வகையில் ஒரு இன முரண்பாட்டினை—இனவாதத்தினை உருவாக்க முயற்சிகள் நடந்துள்ளன என்பதனையும் இச் சம்பவம் காட்டி நிற்கின்றது.

கல்லோயாத் திட்டத்தினை விமர்சித்த கலாநிதி எஸ். ஏ. விக்கிரமசிங்ஹ பின்வருமாறு குறிப்பிட்டார்: "கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தின் வரலாறு இறுதியாக எழுதப்படும் போது, இலங்கை மக்கள் அல்ல, அமெரிக்க நிபுணர்களும் ஒப்பந்தக்காரர்களுமே நன்மைகளைப் பெற்றனர் என்பது தெரிய வரும்.'' அவ்வாறிருப்பின் கல்லோயாத் திட்டத்தின் மூலம் அரசாங்கம் சாதித்தது என்ன? 1946 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் (அம்பாறைப் பிரதேசத்தையும் உள்ளடக்கியது) சிங்களவர்களின் எண்ணிக்கை 11850 பேராகும். இது, மாவட்டத்தின் மொத்த சனத் தொகையில் 5.8 சதவீதமாகும். கல்லோயாத் திட்டத்தின் அறிமுகத்தின் பின்னர் 1953 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி இம் மாவட்டத்தில் சிங்களவர்களின் எண்ணிக்கை 31174 பேராகும். இது மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 11.5 சதவீதமாகும். 1946—1953 காலப் பகுதியில் இம் மாவட்டத்தின் மொத்த சனத் தொகை 33 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்திருந்தது. ஆனால் இதே காலப்பகுதியில் இம் மாவட்டத்தில் சிங்களவர்களின் தொகை 163 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மேலும் 1959 ஆம் ஆண்டு தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழுவின் சிபார்சின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் பகுதியில் அம்பாறை என்னும் புதிய தொரு தேர்தற் தொகுதி உருவாக்கப்பட்டது. 1960 ஆம் ஆண்டு பங்குனி மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அம்பாறைத் தேர்தற் தொகுதியில் ஒரு சிங்களப் பிரதிநிதி வெற்றி பெற்றுப் பாராளுமன்றம் சென்றார். இதன்மூலம் கிழக்கு மாகாணத்திலிருந்து ஒரு சிங்களப் பிரதிநிதி முதன் முதலில் பாராளுமன்றம் செல்வதற்கு வழி ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து 1961 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 10 ஆம் திகதி அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டது. எனவே கல்லோயாத் திட்டத்தின் அறிமுகத்தினைத் தொடர்ந்த அடுத்த பத்தாண்டு காலத்திற்குள் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களைச் சிறுபான்மையாக மாற்றுவதற்கு ஏதுவாக அம்பாறை என ஒரு புதிய மாவட்டமும், சிங்களவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய வகையில் அம்பாறை என்னும் ஒரு சிங்களத் தேர்தற் தொகுதியும் உருவாக்கப்பட்டது.

1963ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் பாணம பற்று, அக்கரைப்பற்று, கரவாகு - நிந்தாவூர் பற்று, சம்மாந்துறைப்பற்று ஆகிய 4 தமிழ்ப்பிரிவுகளும்; வேகம பற்று என்ற சிங்களப் பிரிவுமாக மொத்தம் ஐந்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் இருந்தன. 1981 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் 7 தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் 5 சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் காணப்பட்டன. இதன்படி அம்பாறை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பான 4318 சதுர கிலோ மீற்றரில் 3391 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உரியதாகும். எனவே அம்பாறை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் ஏறத்தாழ 78.5 சதவீதமான நிலப்பரப்பு சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசமாக உள்ளது. அம்பாறை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தினதும் ஏனைய குடியேற்றத் திட்டங்களினதும் சாதனைகளாக இவற்றையே குறிப்பிடலாம்.

கிழக்கு மாகாணத்தில் பரவலாக பல்வேறுபட்ட குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு மாவட்டம் திருக்கோணமலை மாவட்டமாகும். விவசாய நீர்ப்பாசனக் குடியேற்றங்கள், மீனவக் குடியேற்றங்கள், புனித் பிரதேசக் குடியேற்றங்கள், ஆயுதப் படையினர் குடியேற்றங்கள் என்ற பல்வேறுபட்ட பெயர்களில் பல குடியேற்றத் திட்டங்கள் இம் மாவட்டத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வந்துள்ளன. இவ்வகையில் 1948 – 1949 காலப்பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்ட கந்தளாய், பதவியாக் குடியேற்றத் திட்டங்கள் முக்கியமானவை. இக் குடியேற்றத் திட்டங்கள் திருக்கோணமலை மாவட்டச் சனத்தொகையின் இன விகிதாசாரத்தினைப் பெரிதும் மாற்றியுள்ளது.

1881ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி திருக்கோணமலை மாவட்டத்தின் மொத்தச் சனத் தொகையான 22197 பேரில் 14394பேர் தமிழர்களாகவும்,

935 பேர் மட்டுமே சிங்களவர்களாகவும் இருந்தனர். ஆனால் 1981ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி இம்மாவட்டத்தின் மொத்தச் சனத்தொகையான 255948 பேரில் 87760 பேர் தமிழர்களாகவும், 85503 பேர் சிங்களவர்களாகவும் இருந்தனர். எனவே 1881 - 1981 காலப்பகுதியில் திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழர்களின் தொகை 510 சத வீதத்தினால் மட்டுமே அதிகரித்திருக்க, சிங்களவர்களின் தொகை, 9045 சத வீதத்தினால் அதிகரித்திருந்தது. இதன் விளைவாக 1881இல் இம் மாவட்டத்தின் மொத்தச்சனத்தொகையில் 65 சத வீதமாக இருந்த தமிழர்களின் பங்கு 1981 இல், 34 சத வீதமாக வீழ்ச்சியடைந்தது. அதே நேரத்தில் 1881இல் இம்மாவட்டத்தின் மொத்தச் சனத்தொகையில் 4 சத வீதமாக மட்டுமே இருந்த சிங்களவர்களின் தொகை 1981இல் 33 சத வீதமாக உயர்ந்தது. எனவே 1881இல் 15:1 எனக் காணப்பட்ட தமிழர், சிங்களவர் விகிதம், 1981 இல் ஏறத்தாழ 1:1 என மாற்றமடைந்தது. அது மட்டுமன்றி 1977ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இம் மாவட்டத்தில் சேருவல என்ற புதிய தேர்தல் தொகுதி மூலம் ஒரு சிங்களப் பிரதிநிதி பாராளுமன்றம் சென்றார்.

எனவே, கிழக்கு மாகாணத்தில் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட முதல் பத்தாண்டு காலத்தில் அம்பாறைத் தேர்தல் தொகுதி மூலம் முதலாவது சிங்களப் பாராளுமன்றப் பிரதிநிதியும், அடுத்த பதினைந்து ஆண்டுக் காலத்தில் சேருவல தேர்தல் தொகுதி மூலம் மற்றுமொரு சிங்களப் பிரதிநிதியும், பாராளுமன்றம் செல்லக் கூடிய நிலைமை உருவாகியது.

வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் வவுனியா மாவட்டத்திலேயே முதலில் குடியேற்றத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. 1956ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்ட பாவற்குளம் குடியேற்றத் திட்டம் குறிப்பிடத்தக்கதொன்றாகும். ஆரம்பத்தில் இக் குடியேற்றத் திட்டத்தில் 595 தமிழ்க் குடும்பங்களும் 463 சிங்களக் குடும்பங்களும் குடியமர்த்தப்பட்டன. ஆனால் பிற்பட்ட காலங்களில் இங்குள்ள தமிழ்க் குடும்பங்கள் இங்கிருந்து துரத்தப்பட்டன. தற்போது இது ஒரு சிங்களக் குடியேற்றப் பிரதேசமாகவே உள்ளது. பிரதான குடியேற்றத் திட்டங்கள், நடுத்தர மட்டத்திலான நீர்ப்பாசனத்திட்டங்கள், கிராம விரிவாக்கத்திட்டங்கள் என்ற பெயர்களில் பல்வேறுபட்ட குடியேற்றத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன இம் மாவட்டத்தின் ஒரு முக்கிய அம்சம் என்னவெனில், சிங்கள மக்களுக்கு என ஒரு தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. வவுனியா தெற்குப் பிரிவு இரண்டாகப் பிரிக்கப்பட்டு வவுனியா தெற்கு சிங்களப் பிரிவு என ஒரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இப் பிரதேசத்தில் அம்பலாங்கொடல்ல என்ற ஒரு கிராமம் வவுனியா தெற்கு (சிங்களம்) உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ளது. இலங்கையின் தென்மாகாணத்தில் உள்ள அம்பலாங்கொட என்ற கிராமத்திலிருந்து வந்து இங்கு குடியேறிய மக்கள், அம்பலாங்கொடல்ல என்ற பெயரில் ஒரு குடியேற்றக் கிராமத்தை உருவாக்கியமை குறிப்பிடத்தக்கது. இம் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த குடியேற்றத் திட்டங்களின் விளைவாக இம் மாவட்டத்தின் இன விகிதாசாரம் பெருமளவு மாற்றமடைந்தது: 1881 இல் வவுனியா மாவட்டத்தில் 1157 சிங்களவர்களும், 13164 தமிழர்களும் காணப்பட்டனர். 1981 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி இம் மாவட்டத்தில் தமிழர்களின் எண்ணிக்கை 54179 பேராகவும், சிங்களவர்களின் எண்ணிக்கை 15794 பேராகவும் இருந்தது. எனவே வவுனியா மாவட்டத்தில் 1881 - 1981 காலப் பகுதியில் தமிழர்களின் எண்ணிக்கை 312 சத வீதத்தினால் மட்டுமே அதிகரிக்க, சிங்களவர்களின் தொகை 1265 சத வீதத்தினால் அதிகரித்திருந்தது. இதன் விளைவாக 1881இல் வவுனியா மாவட்டத்தின் மொத்தச் சனத்தொகையில் 7.4 சத வீதமாக இருந்த சிங்களவர்களின் தொகை 1981இல் 16.6 சத வீதமாக அதிகரித்திருந்தது. மாறாக 1881இல் 84.6 சத வீதமாக இருந்த தமிழர்களின் பங்கு 1981 இல் 56.8 சத வீதமாக வீழ்ச்சியடைந்தது.

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம்

அண்மை ஆண்டுகளில் அதாவது எண்பதுகளில் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு பாரிய குடியேற்றத் திட்ட நடவடிக்கை, துரித மகாவலி அபிவிருத்தித் திட்டமாகும். 1965ஆம் ஆண்டுக்கும் 1968ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்டகாலத்தில் தயாரிக்கப்பட்ட பெருந்திட்டத்தில் (Master Plan), மகாவலி கங்கையில் பாயும் 43 லட்சம் சதுர அடி நீரை நாட்டின் உலர்வலயத்திலுள்ள 900,000 ஏக்கர் (364, 500 ஹெக்டேயர்) பரப்பில் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டது. மேலும் 15 பலநோக்குத் திட்டங்களையும் 6 வடிநிலக் குறுக்கு திசை திருப்புக் கால்வாய்களையும் மொத்தம் 500 மெகாவாட் மின்சக்தியை உற்பத்தி செய்யவல்ல பல மின்சார நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கும் ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களைக் குடியேற்றுவதற்கும் முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. இப் பெருந்திட்டத்தின் ஒரு கட்டமாக வடமத்திய மாகாணத்திலும் வடமாகாணத்திலும் நீர்ப் பாய்ச்சுவதற்காகவும் சுமார் 300 மெகாவாட் மின் சக்தியை உற்பத்தி செய்யவல்ல மின்சார நிலையங்களை நிறுவுவதற்காகவும் கொத்மலை, ரந்தெனிகல போன்ற மற்றும் நீர்த்தேக்கங்களையும் உமா ஓயா, லொக்கல் ஓயா, அம்பன் கங்கையின் சில கிளை நதிகள் ஆகியவற்றின் மீது நீர்த்தேக்கங்களையும் அமைக்கும் வேலைகள் அடங்கியிருந்தன.

1977 ஆம் ஆண்டு முடிவில் பெருந்திட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட வேலைத் திட்டத்தின் நிறைவேற்றத்தை ஆறுவருட எல்லையில் நெருக்கமான காலத்திற்குள் அடக்குவது என அரசாங்கம் முடிவு செய்தபோது, பெருந்திட்டத்தில் கண்டுள்ள முக்கிய செயல் திட்டங்களை மட்டுமே துரிதப்படுத்திய வேலைத் திட்டத்தில் அது சேர்த்தது. பெருந்திட்டத்தின்படி வடமாகாணத்தின் தென்பகுதியில் அடங்கியிருந்த I, K, J, L, M ஆகிய பிரதேசங்கள் துரித மகாவலித் திட்டத்தில் சேர்க்கப்படாமல் கைவிடப்பட்டன. ஒரு வடமத்திய மாகாணக் கால்வாய் மூலம் இப்பிரதேசங்களிலுள்ள 94268 ஹெக்டேயர் (232760 ஏக்கர்) நிலம் நீர்ப்பாசன வசதியினைப் பெறமுடியும், ஒல்லாந்துப் பொறியியல் ஆலோசகர்கள் (Nedeco) இவ்வாறான ஒரு கால்வாயினை அமைப்பது தொழில்நுட்பரீதியாகச் சாத்தியமானது எனக் கூறியிருந்தபோதிலும் கூட, அரசாங்கம் இத்திட்டத்தினையும் இப்பிரதேசங்களையும் துரித மகாவலித் திட்டத்தில் புறக்கணித்திருந்தது. இவ்வாறு ஒதுக்கப்பட்டிருந்த இப்பிரதேசங்கள் 1988 ஆம் ஆண்டு துரித மகாவலித் திட்டத்தின் சிறப்புப் பிரதேசங்களாகப்பிரகடனப்படுத்தப்பட்டன. 1988 ஆம் ஆண்டு சித்திரைமாதம் 16 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் மூலம், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மணலாறு பிரதேசம் வெலி ஓயா எனப் பெயர் மாற்றப்பட்டு, இலங்கையின் 26ஆவது மாவட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உடனடி அபிவிருத்திக்காகத் திட்டமிடப்பட்ட பிரதேசமாக, வெலிஓயா (L பிரதேசம்) மாவட்டம் அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இராணுவமயப்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் விரைவாக நடைபெறலாயின. 1988 , 1989 ஆண்டுக் காலப் பகுதிகளில் இப்பிரதேசத்தில் 3364 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன.

விக்டோரியா நீர்த்தேக்கத் திட்டத்தின் தெல்தெனியாப் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள், துரித மகாவலித்திட்டத்தின்கீழ் நிலங்கள் வழங்கப்பட்டுக் குடியமர்த்தப்பட்டனர். இதன்படி ஏறத்தாழ 35000 மக்களை உள்ளடக்கிய 5925 குடும்பங்கள் இவ்வாறு குடியமர்த்தப்பட்டன. இவர்களில் ஏறத்தாழ 85 சதவீதத்தினர் சிங்களவர்களாவர். 6 சதவீதத்தினர் முஸ்லிம்களாகவும் 5 சதவீதத்தினர் தமிழர்களாகவும் இருந்தனர். இதிற் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், வெளியேற்றப்பட்ட சிங்கள மக்கள் அனைவரும் கிழக்கு மாகாணத்தில் மதுறு ஓயாத் திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்பட்டனர். மேலும் இக் குடியேற்றங்கள் அனைத்தும் தமிழர்வாழும் கிழக்கு மாகாணப் பிரதேசங்களிலேயே மேற்கொள்ளப்பட்டன. ஆனால் வெளியேற்றப்பட்ட தமிழர்களும் முஸ்லிம்களும் கண்டி மாவட்டத்திற்குள்ளேயே குடியமர்த்தப்பட்டனர். கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் நகர்ப்புறப் பிரதேசங்களையும்தமிழ்க் கிராமப் பிரதேசங்களையும் இணைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கவில்லை. மாறாக இங்கு நடைபெறும் குடியேற்றப் பிரதேசங்களைச் சிங்களப் பிரதேசங்களோடு இணைப்பதற்கு நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்கின்றது. இதன் ஒரு கட்டமாக சிங்கள மாவட்டங்களையும் கிழக்கு மாகாண மகாவலி அபிவிருத்திக் குடியேற்றப் பிரதேசங்களையும் இணைக்கும் வகையில் ஒரு புகையிரதப் பாதை அமைக்கும் ஒரு உத்தேசத்திட்டம், துரித மகாவலித் திட்டத்தில் உள்ளது. ஆனால் அதே நேரத்தில் கிழக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகள் புகையிரதப் பாதைகளால் இணைக்கப்படவில்லை.

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழான குடியேற்றங்களில் அரசாங்கம் சிங்கள இனம் என்பதனை மட்டும் முதன்மைப் படுத்தாமல் அதனோடு பௌத்த மதம், பௌத்த கலாசாரம் என்பவற்றையும் குடியேற்றங்களோடு இணைத்தது.

> '' கடந்த காலங்களில் இலங்கையில் நிலவிய பெருமை மிகுந்த சிங்கள பௌத்த கலாசாரத்தினைக் காட்டும் ஒரு சான்றாக மதுறு ஓயாத் திட்டம் விளங்கும்'' என, இத்திட்டத்திற்குப் புகழாரம்சூட்டப்பட்டது மகாவலித்திட்ட அதிகாரிகள் இங்கு குடியேறிய மக்களின் பொருள்சார் செல்வத்தினை உயர்த்துவதற்கு மட்டுமன்றி, அவர்களின் தெய்வீக வாழ்க்கைக்குத் தேவையான வழிகாட்டல்களையும் மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டனர். பௌர்ணமி தினங்களில் ஒவ்வொரு குடும்பமும் பௌத்த மத அனுட்டானங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டது.
> (மகாவலி அபிவிருத்தி அமைச்சு — 1984)
> துரித மகாவலித் திட்டத்தின் கீழ் B பிரதேசத்தில் 43 பௌத்த விகாரைகளும் C பிரதேசத்தில் 41 பௌத்த விகாரைகளும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முடிவுரை

ஒரு தேசிய இனத்தின் அடிப்படைப் பண்புகளில் ஒன்று அவ் இனத்திற்கு ஒரு பாரம்பரிய பிரதேசம் இருத்தலாகும். எந்தவொரு தேசிய இனத்தையும் அழிக்க முயலும் ஒடுக்குமுறையாளர்கள் அவ்வினத்தின் பாரம்பரிய பிரதேசங்களைச் சூறையாடுவதனையும், அத் தேசிய இனத்தின் தனித்துவத்தினை வெளிப்படுத்தும் கலாசாரச் சின்னங்களை அழித்து ஒழிப்பதனையும் ; இன அழிப்பிற்கான நடைமுறைகளில் முக்கிய படிமுறைகளாகக் கொள்கின்றனர். ஒரு இனம் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பிரதேசத்தினைச் சூறையாடுவதற்குக் குடியேற்றங்களை மேற்கொள்வதே ஒடுக்கு முறையாளர்களால் முதலில்

செய்யப்படுகின்றது. பல்வேறுபட்ட பெயர்களில் அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில் மேற்கொள்ளப்படும் இக்குடியேற்றங்கள், ஒரு இனத்தையே அழித்தொழிக்கும் நோக்கினைக் கொண்டவை. இக் குடியேற்றத் திட்டங்கள் ஒரு இனம் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த நிலத்தைப் பறித்தெடுத்து அவ் இனத்தை அகதிகளாகத் துரத்தியடிக்கும் ஆபத்தினைக் கொண்டவை.

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு -கிழக்குப் பிரதேசங்களில் கடந்த அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக இலங்கை அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த - வருகின்ற - பல்வேறுபட்ட பெயர்களிலான குடியேற்றத் திட்டங்கள், இக்கருத்துக்களையே வெளிப்படுத்துகின்றன. இலங்கைவாழ் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயக உரிமையினை மறுப்பதற்காகவும் மறைப்பதற்காகவும், இலங்கை அரசாங்கம் குடியேற்றத் திட்டங்களைத் தனது கருவிகளாகப் பயன்படுத்திக் கொண்டது. வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் வாழும் மக்களின் இன விகிதாசாரங்களை மாற்றுவதனை நோக்கமாகக் கொண்டே இக்குடியேற்றத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. 1881 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி கிழக்கு மாகாணத்தில் 75408 தமிழர்களும் 5947 சிங்களவர்களும் இருந்தனர். 1981 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி இம்மாகாணத்தில் 399788 தமிழர்களும் 243129 சிங்களவர்களும் இருந்தனர். எனவே 1881 - 1981 காலப்பகுதியில் இம் மாகாணத்தில் தமிழர்களின் தொகை 430 சத வீதத்தினால் மட்டுமே அதிகரித்திருக்க, சிங்களவர்களின் தொகை 3988 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இதன் விளைவாக 1881 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி கிழக்கு மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் 4.7 சத வீதமாக மட்டுமேயிருந்த சிங்களவர்கள் 1981 ஆம் ஆண்டு மொத்தச் சனத்தொகையில் 24.9 சதவீதமாகக் காணப்பட்டனர். இதே நேரத்தில் 1881 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தின் மொத்தச் சனத்தொகையில் 59.1 சதவீதமாக இருந்த தமிழர்களின் பங்கு 1981 ஆம் ஆண்டு 41 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. எனவே 1881 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் 100 தமிழர்களுக்கு 8 சிங்களவர்கள் காணப்பட்டனர். 1981 ஆம் ஆண்டு 100 தமிழர்களுக்கு 61 சிங்களவர்கள் இருந்தனர். கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டங்களின் விளைவே இதுவாகும்.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டத்தின் மற்றுமொரு முக்கிய அம்சம் என்னவெனில், அக் குடியேற்றத்திட்டப் பிரதேசங்களுக்கு ஏற்கெனவே பாரம்பரியமாக இருந்து வந்த தமிழ்ப் பெயர்கள் நீக்கப்பட்டு அவற்றிற்குச் சிங்களப் பெயர்கள் சூட்டப்பட்டமையாகும்.

	பாரம்பரியப் பெயர்	தற்போதைய பெயர்
1.	பதிவில் குளம்	பதவியாக் குளம்
2.	முதலிக் குளம்	மொறவேவ
3.	பெரிய குளம்	நாமல் வத்த
4.	பட்டிப்பளை	கல்லோயா
5.	புடவைக் கட்டு	சாகரபுர
6.	அம்பாள் ஏரி	அம்பாறை
7.	மணலாறு	வெலி ஓயா
8.	குமரக் கடவை	கோமரங்கடவல
9.	பெரிய விளாங் குளம்	மகா திவுல் வெவ
10	பனிக்கட்டி முறிப்பு	பனிக்கட்டியாவ

இவற்றை விட தெகிவத்த, சிறிமாபுர, அபயபுர, சேருவல, அம்பலாங்கொடல்ல என சிங்களப் பெயர்களைக் கொண்ட பல கிராமங்கள் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் உருவாக்கப்பட்டன. இவை எவற்றை வெளிப்படுத்துகின்றன? பிரதேசங்களின் பாரம்பரியப் பெயர்களை மாற்றுவதன்மூலமோ புதிய பெயர்களைச் சூட்டுவதன்மூலமோ அபிவிருத்தியினை ஏற்படுத்திவிட முடியுமா? தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களைச் சிங்களவரின் பிரதேசங்களாக மாற்றுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளாகவே இவற்றைக் கருதலாம்.

வெலி ஓயாத் திட்டம் கூட தமிழர்களின் பாரம்பரிய பூமியைப் பறித்தெடுப்பதனை நோக்கமாகக் கொண்டே மேற்கொள்ளப்படுவதாகும். 1987 ஆம் ஆண்டு ஆடி மாதம் 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஒரு அம்சமாக, வட மாகாணமும் கிழக்கு மாகாணமும் தற்காலிகமாக இணைக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. இதன் விளைவாகவே முன்னர் ஒதுக்கப்பட்டிருந்த மணலாறு (வெலி ஓயா) பிரதேசம், துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் சிறப்புப் பிரதேசமாகவும், உடனடியாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பிரதேசமாகவும் 1988 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டது. இப் பிரதேசத்தில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதன்மூலம் தமிழர்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசங்களை அதாவது, வடக்குப் பிரதேசத்தினையும் கிழக்குப் பிரதேசத்தினையும் துண்டாடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மேலும், 1987 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின்படி மாகாண சபைகளுக்கு அரசகாணிகள் ஒதுக்கப்பட்டன. ஆனால் மகாவலி அபிவிருத்திச் செயற்திட்ட பிரதேசம் மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்திலேயே காணப்படும். இதன் காரணமாகவே முன்பு துரித மகாவலித் திட்டத்திலிருந்து விலக்கப்பட்டிருந்த

K, J, L, M, I ஆகிய பிரதேசங்கள் 1988 ஆம் ஆண்டு துரித மகாவலித் திட்டத்தின் சிறப்புப் பிரதேசங்களாகச் சேர்க்கப்பட்டன. இதன் மூலம் இப் பிரதேசங்களை இலங்கை அரசாங்கம் தனது நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்தது. எனவே குடியேற்றம் தொடர்பாக இலங்கையில் தற்போது மேற் கொள்ளப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளும், தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களைப் பறித்தெடுப்பதனையே நோக்கமாகக் கொண்டவையாக உள்ளன. இன்று இலங்கை அரசாங்கம் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் கையாள்கின்ற காணிக் கொள்கையினை - குடியேற்றத்திட்டங்களை பிரித்தானியரின் காலனித்துவக் காணிக் கொள்கையோடு ஒப்பிட முடியும். கண்டி, வெல்லச மாகாணங்களில் நிலவிய விடுதலைப் போராட்டத்தை அடக்குவதனையும், கண்டி மாகாணத்தினை இலங்கையின் ஏனைய பகுதிகளோடு இணைத்து அதனது தனித்துவத்தை இழக்கச் செய்வதனையும் நோக்கமாகக் கொண்டே, பிரித்தானியரின் காணிக் கொள்கையும் காணிச் சட்டங்களும் உருவாக்கப்பட்டன. அதே பின்னணியிலேயே இன்றைய இலங்கை அரசாங்கத்தின் காணிக் கொள்கையும் அமைந்துள்ளது. வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற விடுதலைப் போராட்டத்தினைச் சிதைப்பதற்காகவும் இப் பிரதேச மக்களின் தனித்துவத்தினை இழக்கச் செய்வதற்காகவுமான காணிக்கொள்கையே இன்று உருவாக்கப்பட்டுள்ளது. தமிழர்வாழும் பிரதேசங்களை சிங்களப் பிரதேசங்களோடு இணைப்பதன் மூலம் இதனைச் சாதிக்க முடியும் என, அரசாங்கம் எண்ணியுள்ளது. வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத்திட்டங்கள் குறித்து 1985 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், அப்பொழுது இலங்கை ஜனாதிபதியாகவிருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா பாராளுமன்றத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

''நாம் எல்லைகளில் குடியேறாவிடின் எல்லைகள் எம்மை நோக்கி நகரும்'' (If we do not occupy the border, , the border will come to us). வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் குடியேற்றத்திட்டங்களின் பிரதான நோக்கம் இதுவேயாகும். அதே நேரத்தில் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு இக் குடியேற்றத்திட்டங்கள் கற்றுத் தரும் பாடமும் இதுவேயாகும்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

TAMIL EELAM PERSPECTIVES

A Research Journal of Resources of Tamil Eelam

Volume-1 Part-2 March 1992

SINHALA COLONIZATION IN THE TAMIL HOMELAND — A PERSPECTIVE
— *S. VARATHARAJAN*

TWO NATIONALISMS IN ONE COUNTRY
— *A. GOWRIKANTHAN*

VIPULANANTHA ADIKALAR
— *E. BALASUNDARAM*

ANCIENT HISTORY OF CEYLON TAMILS — A REVIEW
— *P. PUSPARATNAM*

SELF — DETERMINATION IN INTERNATIONAL POLITICAL DISCOURSE
— *V. MANIVASAGAR*

மாறன் பதிப்பகம், 664, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.